www.tamilarangam.net


# களத்தில்

"அனைத்துத் தமிழ் மக்களும் ஒரே இனம் என்ற தேசாபிமான உணர்வுடன் போராட்டத்தில் பங்கு கொண்டால், எமது விடுதலை இலட்சியம் வெற்றி பெறுவது நிச்சயம்"

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2027 துலாம் 09 (23.10. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60 p


## "வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலமே அணுக வேண்டும்"

-பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பர் -



"அமைதியை உருவாக்கும் பணி திருச்சபையின் பிரதான பணியாகக் கருதப்பட வேண்டும். இன – மொழி – பண்பாட்டு வேறுபாடுகள் பாதுகாக்கப்பட வேண்டிய சொத்துக்கள். அவை ஒதுக்கப்பட வேண்டிய தடைகள் அல்ல. ஆற்றல்களைப் பகிர்ந்து கொள்ள இவ் வேறுபாடுகளே வாய்ப்புக்களைத் தருகின்றன. உங்கள் நாட்டின் வடக்கு – கிழக்கு இனப்பிரச்சினையானது பேச்சுவார்த்தை மூலமே அணுகப்பட வேண்டும் என்று ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகிறேன். மனிதர்களின் உரிமைகளை பேச்சுவார்த்தையாலேயே காப்பாற்ற முடியும். பாரபட்சமற்ற சூழ்நிலை உருவாக, அமைதிக்காக உழைப்போருடன் அச்சமின்றியும் சந்தேகத்திற்கு இடமின்றியும் தலையிட்டு திருச்சபையின் பாரம் பரிய முறைப்படி செயல்பட நீங்கள் இசைவு தெரிவித்துள்ளதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன்."

இவ்வாறு கத்தோலிக்க திருச்சபையின் அகிலத் தலைவர் திருத்தந்தை 2வது அருளப்பர் சின்னப்பர் இலங்கைத் தீவில் இருந்து தம்மை சந்திக்க வந்த ஆயர்கள் இடையே உரை நிகழ்த்துகையில் கூறினார்.

"நீதிக்காகவும் அமைதிக்காகவும் ஏங்கும் உங்கள் மக்களின் உணர்வை அறியும் ஆயர்களாக இருப்பீர்களாக! இலங்கையின் முழு வளர்ச்சிக்கும் திருச்சபையின் சார்பாக உழைப்பதில் தொலை நோக்குடன் ஆன்மீகம், பண்பாடு, ஒழுக்கம் இவைகளுடன் பொருளாதார, சமூக முன்னேற்றச் செயல்களும் இணையாக கைகோர்த்து வளரச் செய்வீர்களாக!" எனவும் திருத் தந்தை 2வது அருளப்பர் சின்னப்பர் வேண்டுகோள் விடுத்தார். ✷

## "யுனிசெவ்" ஏற்படுத்திய அமைதிபேணலையும் சிறிலங்கா இராணுவம் வன்முறைப்படுத்தியது

### ✱ போராளிகள் மூவர் உயிரிழப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் (UNICEF) தமிழீழச் சிறுவர்களுக்குப் போலியோ, மற்றும் நோய்த் தடுப்பு ஊசிகள் போடுவதற்காக புரட்டாதி மாதத்தில் இரு தினங்களையும் ஐப்பசி மாதத்தில் இரு தினங்களையும் அமைதி பேணும் தினங்களாக ஒதுக்கும்படி, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கும் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

குழந்தைகளின் நோயற்ற ஓர் நல்ல எதிர்காலத்திற்கான இத்திட்டத்தை வரவேற்ற தலைவர் அவர்கள், யுனிசெவ்வின் வேண்டுகோளுக்கு முக்கியத்துவம் அளித்து அதற்கமைய, கடந்த மாதத்தில் இரு தினங்களையும் (6ஆம் 7ஆம் திகதிகளில்) இம் மாதத்தில் இரு தினங்களையும் (11ஆம் 12ஆம் திகதிகளில்) அமைதி பேணும் நாளாக அறிவித்தார்.

ஆனால், மக்களினதோ அல்லது குழந்தைகளினதோ நலன்களில் சிறிதும் அக்கறையற்ற சிறிலங்கா அரசு, இந்த அமைதி பேணலுக்கு ஒத்துழைக்க மறுத்தது. அத்துடன், அதன் ஆயுதப்படையினர் இவ் அமைதி பேணல் அமுலில் இருந்த வேளையில் போராளிகளுக்கும் அப்பாவித் தமிழ் மக்களுக்கும் எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவ்வகையில் 12-10-96 அன்று காலை 5 மணிக்கு மட்டக்களப்பு

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## இரு இளம் பெண்கள் கைது ஒருவர் சடலமாக மீட்பு

கோண்டாவில் பகுதியில் வைத்து, சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளம் பெண்ணொருவர் பின்னர் காணாமல் போயுள்ளார். யாழ்ப்பாணம் உரும்பராய் வடக்கைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை ரஜனி (வயது 22) எனும் இவ் இளம் பெண் கடந்த மாதம் 30ஆம் திகதியன்று பிற்பகல் 3.20 மணியளவில் பலாலி வீதியால் சென்று கொண்டிருக்கையில் கோண்டாவில் சந்திக்கு அண்மையில் வைத்து சிறிலங்கா இராணுவத்தால் எவ்வித காரணங்களுமின்றிக் கைது செய்யப்பட்டிருந்தார். இதனை மக்கள் நேரில் கண்டுள்ளனர். இச் செய்தியறிந்த இவரின் பெற்றோர், உறவினர்கள் இராணுவ முகாமில் சென்று கேட்டதற்கு, தாம் அப்படி யாரையும் கைது செய்யவில்லை என இராணுவம் கைவிரித்துள்ளது. இப் பெண்ணின் நிலை குறித்து மிகுந்த அச்சம் அப் பெற்றோர் மத்தியில் நிலவுகின்றது. ஏனெனில்,

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## ஈவிரக்கமற்ற முறையில் இனப்படுகொலை செய்யும் சிறிலங்கா

சிறிலங்காப் படையினர் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகளை பல்வேறு வடிவங்களில் மேற்கொண்டு வருகின்றனர். காரணமின்றிக் கைது செய்தல், பின்னர் அவர்களைக் கடும் சித்திரவதைக்கு உட்படுத்திக் கொலை செய்தல், பாலியல் வன்முறைக்குள்ளாக்குதல், காணாமல் போகச் செய்தல் இவ்வாறான பல வடிவங்களில் தமது கோர இனவெறிச் செயல்களை ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் செய்து வருகின்றனர்.

மட்டுநகர் கிரானைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய நீலன் கனகலிங்கம் என்பவர் தனது மனைவி, பிள்ளைகளைப் பார்க்கவென திருகோணமலைக்குச் சென்று கொண்டிருக்கையில் ஆலங்கேணிப் பகுதியில் சிறிலங்காப் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டார். இதனை அறிந்து இவரது மனைவி அப்பகுதி பொலிசாரிடம் விசாரித்த பொழுது அவர்கள் தாம் அப்படி யாரையும் கைது செய்யவில்லை எனவும் தமக்கு இது பற்றி எதுவும் தெரியாது என்றும் கூறியுள்ளனர். ஆயினும், பின்னர் இவரது உடல் சித்திரவதைக் காயங்களுடன் திருமலை வைத்தியசாலைப் பிரேத அறைக்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

### பொதுமக்கள் அடித்துச் சித்திரவதை

இம் மாதம் 5ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## எனது குடும்பத்தினரை இராணுவமே கைது செய்தது

### பாடசாலைச் சிறுமி சந்திரிகாவுக்குக் கடிதம்

சிறிலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட யாழ்ப்பாணம் கைதடியில் வசிக்கும் பாடசாலைச் சிறுமி ஒருவர், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஓர் திறந்த கடிதமொன்றை எழுதியுள்ளார். தனது குடும்பத்தினரைச் சிறிலங்கா இராணுவமே கைது செய்தது என்றும் இவர்களின் நிலை பற்றி உடனடியாக அறியத் தருமாறும் இக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இச் சிறுமியின் சகோதரி கிருஸ்சாந்தி குமாரசாமி (18), கடந்த மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குச் செல்லும் வேளையில் கைதடியில் வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருந்தார். இவரை விடுவிக்கக் கோரி, இராணுவ முகாம் சென்ற சிறுமியின் தாய் திருமதி ராசம்மா குமாரசாமி (59), சகோதரன் குமாரசாமி பிரணாபன் (16), அயலவரான கிருபாகரன் (35) ஆகியோரையும் இராணுவம் கைது செய்துள்ளது. இவர்களின் நிலை குறித்து இராணுவம் எதுவும் தெரிவிக்க மறுக்கிறது.

இச் சிறுமி மட்டுமே தற்போது குடும்பத்தில் தப்பியுள்ளார். இராணுவத்தினர் பல தடவைகள் தனதுவீட்டிற்கு வந்திருந்தாகவும், பல தடவை

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# படைகளின் ஆளணியினரைக் கூட்ட சிறிலங்கா பகீரதப் பிரயத்தனம்

முல்லைத்தீவு முகாம் படையினர்க்கு ஏற்பட்ட கதி தமக்கும் ஏற்படலாம் என்ற பீதி, கிளிநொச்சியில் உள்ள படையினர்க்கு ஏற்பட்டுள்ளதைச் சிறிலங்கா இராணுவத்தின் தற்போதைய சில நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. படையினர் மத்தியில் ஏற்பட்டிருக்கும் இப் பீதியைப் போக்க, சிறிலங்கா இராணுவத் தலைமைப்பீடம் பெரும் பிரயத்தனம் செய்து வருகின்றது. மேலதிக படையினரையும் ஆயுதத் தளபாடங்களையும் போர்க் களத்திற்கு அனுப்புவதன் மூலம் அங்குள்ள படையினரைத் தைரியமூட்ட முனைகிறது. அத்துடன், இராணுவத்தில் இணைந்தால் 'பல சலுகைகள்' எனும் பெயரில் கவர்ச்சிகரமான பல விளம்பரங்களை வெளியிட்டு சிங்கள இளைஞர்களைக் கவர முனைகின்றது.

பூநகரி முகாமை மூடி, அங்கிருந்த படையினர் 2500 பேரையும் ஏற்கனவே யாழ். குடாநாட்டில் இருந்து கொண்டு செல்லப்பட்ட 15,000க்கு மேற்பட்ட படையினரையும் கிளிநொச்சியில் குவித்துள்ளது. மேலும் பூவரசங்குளம் முகாமின் விஸ்தீரணம், அச்சம் காரணமாக குறுக்கப்பட்டு முகாமின் முன் காவல் நிலைகள் நன்கு பின் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு முகாம்கள் மூடப்படுவதும் ஆட்குறைப்பு செய்யப்பட்டு முகாம் பகுதிகள் குறைக்கப்படுவதும் இராணுவத்தில் ஏற்பட்டுள்ள பலத்த ஆளணித் தட்டுப்பாட்டை வெளிக்காட்டியுள்ளது.

சிறிலங்காப் படைக்கு புதிதாக ஆட்களைச் சேர்க்க சிறிலங்கா அரசு பலமுறை முயன்றும் எதிர்பார்த்தளவில் கால்வாசியைக் கூட சேர்க்க முடியவில்லை. இதனால் சிறிலங்காப் படைகளில் இருந்து விலகியவர்களுக்கு, வேலை எதுவும் யாரும் கொடுக்கக் கூடாது எனக் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ள சிறிலங்கா, அவ்விதம் வேலை கொடுக்கப்பட்டால் வேலை கொடுத்தவர் அதற்கான பொறுப்பை ஏற்று தண்டனை பெற நேரிடும் என்ற எச்சரிக்கையையும் செய்துள்ளது.

இதற்கிடையில் சிறிலங்கா இராணுவத்தின் 47வது ஆண்டுப் பூர்த்தியையொட்டி, சிறிலங்கா ஜனாதிபதியும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் சிறிலங்காப் படைகள் கட்டுப்பாடுடைய அணியினர் எனப் புகழாரம் சூட்டியுள்ளனர்.

## அரசின் கண்கட்டு வித்தை

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இளம் பெண் ஒருவரைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்திக் கொலை செய்தது தொடர்பாக ஐந்து இராணுவத்தினர் கைதாக்கப்பட்டு, யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா அரசு போர்க் குற்றவாளிகளாகக் காணப்படும் படையினர் மேல், சட்ட நடவடிக்கை எடுப்பது போல் பாசாங்கு செய்து வருகிறதே தவிர, உண்மையில் அவர்களைச் சட்டம் முன் கொண்டுவர விரும்புவதில்லை. மாறாக, இவ்வாறான செயல்களுக்கு மறைமுக ஊக்கம் அளித்தே வருகிறது.

இதற்கு உதாரணமாகப் பல சம்பவங்களைக் குறிப்பிடலாம். திருமலை குமாரபுரம் படுகொலையை அண்மையில் நடந்த சம்பவங்களில் குறிப்பிட்டுச் சொல்லலாம். இக் கொலை வெறிச் செயலில் ஈடுபட்ட இராணுவத்தினரைப் பொது மக்கள் அடையாளம் காட்டிய பின்னரும், இதுவரை அந்தக் கொலைக் குற்றவாளிகளைத் தண்டனை எதற்கும் அரசு உள்ளாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, சிறிலங்காப் படைகளின் ஒழுக்கமும் கட்டுப்பாடும் சிறிலங்கா அரசின் ஆதரவுடனேயே மீறப்பட்டு வருகிறது என்பது தெளிவாகும்.

## தணிக்கை நீக்கமும் தலை குனிவும்

ஆயினும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் கார்த்திகை மாதத்தில் நடைபெறவிருப்பதால் சிறிலங்கா ஜனாதிபதி, தனது அரசு சட்டத்தின் முன் எல்லோரையும் சமமாக நடாத்துவது போல் வேடமிடத் தொடங்குகிறார். இந்த நிதி உதவி வழங்கும் கூட்டத்திற்கு முன்பாக பத்திரிகை தணிக்கையை அகற்ற வேண்டுமென்ற அவசரமே தற்போது "பத்திரிகை தணிக்கை அகற்றப்பட்டுவிட்டது" என்ற அறிவிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, பத்திரிகைத் தணிக்கை அகற்றப்பட்டுவிட்டதினால் முல்லைத்தீவு இராணுவ முகாம் அழிப்புத் தொடர்பாகத் தாம் சேகரித்து வைத்திருந்த செய்திகளைப் பிரசுரிப்பதில் சிங்களப் பத்திரிகையாளர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர். இதனால் தனது படையினர்க்கு ஏற்பட்ட தோல்விகளைச் சிங்கள மக்களுக்கு மூடிமறைத்து உண்மைக்கு மாறாக வெளியிட்ட பிரச்சாரங்கள் அம்பலமாவதால், சிறிலங்கா அரசு பெரும் தலைகுனிவுக்கு உள்ளாகியுள்ளது. ✷

# சுண்டிக்குளம் மக்கள் குடியிருப்புக்கள் மீதான தாக்குதல் முறியடிப்பு

- ✳ 12 விசேட கடற்படைகொமாண்டோக்கள் பலி, 40 பேருக்கு மேல் காயம்
- ✳ 40 அடி நீளமான அதிவேக தாக்குதல் கலம் மூழ்கடிப்பு
- ✳ எம்.ஐ.24 உலங்கு வானூர்திகளில் ஒன்று முற்றாகச் சேதம்
- ✳ 3 நவீன ஆயுதங்கள் மீட்பு
- ✳ 3 போராளிகள் வீரச்சாவு

20-10-96 காலை 6.10 மணியளவில், சிறிலங்காக் கடற்படையும் விமானப்படையும் கூட்டாக நடாத்திய பெரும் தாக்குதல் ஒன்று, விடுதலைப் புலிகளின் துணிகர எதிர்த்தாக்குதலினால் முறியடிக் கப்பட்டதுடன், சிறிலங்காப் படையினர் தரப்பில் பலத்த இழப்பும் ஏற்பட்டுள்ளது. சுண்டிக்குளம் கிழக்குக் கரையோரப் பகுதியில் அமைந்திருந்த மீன்பிடிக் குடியிருப்புக்கள் மீது சிறிலங்காவின் விசேட கடற்படைப் பிரிவினரும், விமானப் படையினரும் விமானங்கள், கடற்படைப் படகுகளின் உதவியுடன் கூட்டாக நடத்திய தாக்குதலையே விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக முறியடித்துள்ளனர்.

20 அதிவேகப் பீரங்கிப் படகுகளில் திடீரென சுண்டிக்குளம் கடற்பரப்பில் தோன்றிய சிறிலங்கா விசேட கடற்படையினர், வான்படையினரின் பாதுகாப்புடன் கரையை நோக்கி கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் பீரங்கிப் படகுகளுடன் 2 'எம்.ஐ.24' போர் உலங்கு வானூர்திகள், 2 புக்காரா விமானங்கள், 2 கிபீர் ஜெற் விமானங்கள் என்பனவும் தமது பங்கிற்கு தாக்குதல்களை மேற்கொண்டன. இச்சமயம் அவ்விடத்திற்கு விரைந்து சென்ற கடற்புலிகள் அதிவேகத் தாக்குதலை நடாத்தி சிறிலங்காப் படையினரை நிலைகுலையச் செய்தனர்.

## சிறிலங்காத் தரப்பில் பலத்த சேதம்

மயிர்க்கூச்செறியும் வகையில் நடந்த இக்கடற்சண்டையில், விசேட கொமாண்டோக்களை ஏற்றி வந்த சிறிலங்காக் கடற்படைக்குச் சொந்தமான 40 அடி நீளம் கொண்ட அதிவேகத் தாக்குதல் கலம் ஒன்று விடுதலைப் புலிகளின் ஆர்பிஜி தாக்குதலால் சிதைக்கப்பட்டு நீரில் மூழ்கடிக்கப்பட்டது. 'எம்.ஐ.24" தாக்குதல் உலங்கு வானூர்தியில் மற்றையது சிறு சேதத்திற்குளாகியுள்ளது. இதனைத் தொடர்ந்து தமது திட்டம் நிறைவேறாத நிலையில் பலத்த இழப்புக்களுடன் படையினர் பின் வாங்கியுள்ளனர்.

இச் சமரின் போது 12 க்கும் மேற்பட்ட விசேட கடற்படையினர் கொல்லப்பட்டு 40க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இது குறித்து சிறிலங்காப் பாதுகாப்பமைச்சு 21-10-96 இல் விடுத்த செய்தியில் தமது தரப்பில் 5 பேர் கொல்லப்பட்டு, 10 பேர் காயமடைந்ததுடன், கடற்படை ஒன்றும், உலங்கு வானூர்தி ஒன்றும் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை 9 கடற்படையினரும் 35 இராணுவக் கொமாண்டோக்களும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்ததாக, சிறிலங்கா அரச தரப்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

## மூன்று விடுதலைப் புலிகள் வீரச்சாவு

இக்கடற் சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில்,

1. லெப். கேணல் வாசன் அல்லது தனராஜ் (நந்தகோபால் நவநீதராஜ், 10ஆம் கட்டை, திருமலை)
2. கப்டன் ஆனந்தபாபு (சிறீகோபி கிருஷ்ணராஜா, யாழ்ப்பாணம்)
3. லெப்ரினன் கெங்கன் (மார்க்கண்டேயர் விக்கினராஜா, வல்வெட்டித்துறை)

ஆகிய 3 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். எதிரியிடமிருந்து தாயகத்தையும் எம்மக்களையும் பாதுகாப்பதற்காகத் தமது இளைய, இனிய உயிர்களை ஈகம் செய்த அம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

இச் சமரின் போது படையினரிடமிருந்து நவீன ஆயுதங்களையும் கடற்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

## மக்கள் குடியிருப்புக்கள் மீது பழி வாங்கல் தாக்குதல்கள்

தமது திட்டம் நிறைவேறாத நிலையில் பின்வாங்கிய படையினர், சுண்டிக்குளம் மற்றும் அதனை அண்டிய பூனைத் தொடுவாய் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி எறிகணை, விமானத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். இதில் இரண்டு 'கிபீர்', இரண்டு 'புக்காரா' போர் விமானங்களும் மற்றும் மூன்று எம்.ஐ.24 போர் உலங்கு வானூர்தியும் பாரிய அழிவுகளை மேற்கொண்டன. இதனுடன் கடலில் இருந்து கடற்படையின் பீரங்கிப் படகுகள் மாரி மழைபோல் எறிகணைகளை வாரி இறைத்துள்ளன. கரையோரப் பகுதியில் இருந்த மீனவர்கள் பலரின் குடியிருப்புக்கள் எரிந்து சாம்பராகியுள்ளன.

இவ்வெறியாட்டத்தில் சுண்டிக்குளத்தைச் சேர்ந்த,

1. நடராசா கணேசலிங்கம் (27)
2. சபாரட்ணம் சதீஸ்கரன் (33)
3. எஸ். மரியாம்பிள்ளை (46)

ஆகியோர் பலியாகியுள்ளார். மிகுந்த ஆபத்தான சூழ்நிலையில் படுகாய மடைந்த பல மக்கள் வாகனங்களில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். 'கிபீர்' விமானங்கள் இவ் வாகனங்களைத் துரத்தித் துரத்தி, குண்டு வீசித் தாக்கியுள்ளன. ✷

# ஜெனரல் அய்டீட்டின் மரணத்தின் ...

அவமானம் தாங்காது ஒரு சில மாதங்களில் தனது துருப்பினரை மீளவும் எடுத்துக் கொண்டது. இதனைத் தொடர்ந்து, ஒரு வருடத்துள் ஐ.நாவின் ஏனைய துருப்பினரும் சோமாலியாவை விட்டகன்றனர். இந்தப் பின்னணியிலேயே வேறுபட்ட குழுக்களிடையே மோதல்கள் ஏற்பட்டு இறுதியில் அய்டீட் கொல்லப்பட்டார்.

தற்போதைய உள்நாட்டுப் போரினால் மொகாடிசுவில் மட்டும் 200,000 - 400,000 இடைப்பட்ட மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். பிரகடனப்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தத்தை அடுத்து, இவ் அகதிகளுக்கு உணவு வழங்குவதில் உதவி வழங்கும் நிறுவனங்கள் மும்முரமாக இறங்கியுள்ளன. இதேவேளை, 34 வயதுடைய உசேன் முகமட் அய்டீட் என்பவரைத் தாம் சனாதிபதியாக நியமிப்பதாக அய்டீட்டின் ஆதரவாளர்கள் அறிவித்துள்ளனர். இவர் கொல்லப்பட்ட அய்டீட்டின் மகன் என்பதுடன், அமெரிக்கப் பிரஜை என்பதும் குறிப்பிடத்தக்கது.

விவாகரத்துப் பெற்ற அய்டீட்டின் முன்னாள் மனைவியின் மகனான இவர், 1976இல் இருந்து அமெரிக்காவில் வசித்து வருகிறார். பொறியியல் துறையில் பட்டம் பெற்ற இவர் அமெரிக்க மரீன் துறையினருடன் சோமாலி - ஆங்கில மொழிபெயர்ப்பாளராகச் சோமாலியாவில் கடமையாற்றியவர். தான் அமெரிக்க மரீனாகக் கடமையாற்றியபோதும் தனது குலம் மற்றும் குடும்ப முக்கியத்துவத்தை ஒருபோதும் மறக்கவில்லை எனக் கூறும் உசேன், கடந்த வருடம் தனது சோமாலி மனைவியுடன் நாடு திரும்பியிருந்தார். இதேவேளை, சோமாலியாவின் எதிர்காலம் நிச்சயமற்றதொரு நிலையில் உள்ளது என ஐ.நா அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார். சோமாலியாவில் சமாதானம் மலருமா இல்லையா என்பது புதிதாகப் பதவியேற்றுள்ள உசேனின் அடுத்த நகர்வைப் பொறுத்தேயுள்ளது எனலாம். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உணரப்படும் வரலாற்று உண்மை

தமிழீழத் தேசத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், 1995ஆம் ஆண்டு மாவீரர் தினத்தன்று தேச மக்களுக்கு ஆற்றிய தேசிய உரையில் **"பெருமளவிலான படைகளை நகர்த்தி ஆக்கிரமிப்பாளன் எமது நிலங்களைக் கைப்பற்றுவது கடினமான ஒன்றல்ல. ஆனால், அவ்விதம் கைப்பற்றிய நிலங்களை ஆக்கிரமிப்பாளன் தொடர்ந்தும் அவனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பதுதான் மிக்க் கடினமான ஒன்று. இந்த யதார்த்த உண்மையினை வரலாற்று பூர்வமாக ஆக்கிரமிப்பு இராணுவங்கள் உலகின் பல பாகங்களிலும் உணர்ந்துள்ளன. சிறிலங்கா இராணுவமும் இந்த வரலாற்று உண்மையை விரைவில் உணர்ந்து கொள்ளும்"** என்றார். அடுத்த மாவீரர் தினம் 1996 இல் வருவதற்கிடையில் தேசியத் தலைவரின் எதிர்வு கூறலின் சான்றுகளாக, நேற்று முல்லைத்தீவு இராணுவ முகாமும் இன்று பூநகரி இராணுவ முகாமும் காட்சியளிக்கின்றன.

தமிழீழ மண், அதனை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தினரின் கல்லறைகளாக மாறும் எனும் எங்கள் தேசியத் தலைவரின் வார்த்தைகளின் வலிமையை முல்லைத்தீவில் அனுபவமாகப் பெற்ற சிறிலங்காப் படைகள் மனோவலிமை குன்றினர். இதனை ஈடுசெய்வதற்குச் சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் இடம்பெயர்ந்து ஆதரவு தேடிக் கொண்டிருந்த வன்னிப் பிரதேச மக்கள் மீது சிறிலங்கா போரைத் தொடுத்தது. ஆயினும் 'சத்ஜெய' 1, 2 இராணுவ நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளினால் வெற்றிகரமாக தடுத்து முறியடிக்கப்பட்டன. இதனால் பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினரையும் பல இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான இராணுவ ஆயுத-தளபாட இழப்புக்களையும் தனதாக்கிக் கொண்ட சிறிலங்கா இராணுவத்தின் மனோநிலைப் பாதிப்பு மேலும் மோசமாவதைத் தடுப்பதற்கான பகீரதப் பிரயத்தன முயற்சியாக, யாழ். குடாநாட்டில் நிலை கொண்டிருந்த ஆளணியினரை கிளிநொச்சி நோக்கி நகர்த்திய சிறிலங்கா அரசு, கிளிநொச்சி மீதான மூன்றாவது கட்ட இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. இதனை முன்கூட்டியே எதிர்பார்த்த விடுதலைப் புலிகள், பாதுகாப்பான முறையில் தமது நிலைகளை புதிய நிலைகள் நோக்கி நகர்த்தியதும் அல்லாமல், மக்களுக்கும் பாரிய அழிவுகள் ஏற்படாதபடி உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டனர். இதனால் முன்போலவே **'வெறும் நிலம் அளந்த கதையாக'** கிளிநொச்சியை ஆக்கிரமித்துள்ளது சிறிலங்கா இராணுவம்.

ஆனால் யாழ். குடாநாட்டில் இருந்து படைகளை நகர்த்தியமையைத் தமக்குச் சாதகமான செயலாகப் பயன்படுத்திவரும் விடுதலைப் புலிகள், குடாநாட்டுக்குள் இராணுவத்தினர்க்கு எதிரான தாக்குதல்களை வேகப்படுத்தியுள்ளனர். இதனால் இராணுவத்தினர் நிலைகுலைய சிறிலங்கா அரசு, சிங்களப் பழமொழியான **"புலி வாலைப் பிடித்தவன் போல"**என்பதன் நிலையில் தவிக்கின்றது.

இதற்கிடையில், சிறிலங்காவின் பொருளாதார வளர்ச்சி வீதம் 1995இல் ஐந்திலிருந்து 3.5 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதேவேளை, போருக்கான அரசின் பாதுகாப்புச் செலவு 28 பில்லியன் ரூபாக்களில் இருந்து 44 பில்லியன் ரூபாக்களாக 16 பில்லியன் ரூபாவால் உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டில் போருக்கான பாதுகாப்புச் செலவீனம் 28 பில்லியன் ரூபாக்கள் என பாராளுமன்றத்தில் மதிப்பீட்டு அறிவிப்பு செய்யப்பட்டபோதும், நடைமுறையில் இத்தொகை 50 பில்லியன்களுக்கும் மேலானது என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறே, இவ் ஆண்டும் 44 பில்லியன் ரூபாக்கள் என முன்னறிவிப்பு கொடுக்கப்பட்ட போதிலும் இத்தொகை இதைவிடப் பலமடங்கு அதிகமாகவே செலவிடப்படும் என்பது தெரிந்த உண்மையே. இந் நிதி ஒதுக்கீடானது, தமிழீழ மக்கள் மேல் ஓர் பாரிய அளவிலான அழிவுகளை ஏற்படுத்தும் திட்டமொன்றின் முன்னறிவிப்பாகவே கொள்ளப்பட வேண்டும்.

இதற்கான இன்னுமோர் அடையாளமாகவே பூநகரி இராணுவ முகாம் மூடப்பட்டதுமாகும். ஆனால், சிறிலங்காவின் இச் செயல்மூலம் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையிலான முக்கிய வேறுபாடு ஒன்று உலகிற்குத் தெளிவாகியுள்ளது. விடுதலைப் புலிகள் 1995ஆம் ஆண்டு பேச்சுவார்த்தைகளின் போது, தமிழ் மக்களின் நடமாடும் சுதந்திரத்துக்கு, **'பாதுகாப்பான பாதை"** ஒன்றைத் திறப்பதற்கான தேவை கருதி இம் முகாமின் உயிர் அச்சுறுத்தல் தன்மையை விளக்கி இதனை மூடும்படி கோரினர். ஆனால், தனது இராணுவ நலன்களையே மையமாகக் கொண்டு செயற்படும் சிறிலங்கா அரசு, தான் தோன்றித் தனமாகச் செயற்பட்டு தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான கோரிக்கைகளை உதாசீனப்படுத்தியதன் மூலம் தனது நேர்மையற்ற போக்கை வெளிப்படுத்தி பேச்சுவார்த்தையை முறிவடையச் செய்தது. தற்பொழுது விடுதலைப் புலிகளின் தாக்குதல் வலிமையால் அஞ்சுகின்ற சிறிலங்கா இராணுவத்தினரை சாந்தப்படுத்தும் முகமாக, எட்டு மைல் நீளத்திற்கு மிகப் பாதுகாப்பான காப்பரண்களைக் கொண்ட இப் பூநகரி முகாமை மூடியுள்ளது. இது விடுதலைப் புலிகளுக்கு இனியும் ஈடுகொடுக்க முடியாது என்ற யதார்த்தத்திற்கான தலை வணங்கலா? அல்லது தமிழீழ மக்களது விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் மீதான பாரிய போர் ஒன்றுக்கான முன் ஆயத்த தந்திரமா? என்பது ஒரு புறமிருக்க, சிறிலங்கா அரசானது தமிழ் மக்களின் நலன் கருதும் தேச அரசு அல்ல தனது இராணுவ நலன் கருதும் அந்நிய அரசு என்பதை மட்டும் பூநகரி முகாம் மூடலால் உலகுக்கு தெட்டத் தெளிவாக்கியுள்ளது. இதன்மூலம் தமிழ் மக்களின் பாதுகாப்பையும் நலனையும் பேணும் அவர்களின் அரசு, 'விடுதலைப் புலிகள் அமைப்பே' என்பது உறுதியாகின்றது.

இவ் அடிப்படையில், கடந்தாண்டு இடம்பெற்ற எமது மக்களின் மாபெரும் இடப்பெயர்வின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டிய செய்தியை உலகுக்கு வெளிப்படுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான சர்வதேச அங்கீகாரத்துக்காகப் புலம் பெயர்ந்த தமிழர்களாகிய நாம் உறுதியுடன் உழைப்போமாக! அத்துடன் நிதி வலிமை கொண்டு எமது நீதியான போராட்டத்தை சிறிலங்கா நசுக்க எடுக்கும் முயற்சிகளுக்கு எதிராக, தமிழர் படையின் ஆயுத பலத்தைப் பெருக்க உதவி செய்து, சிறிலங்காவை தோல்வியுற வைப்போமாக! மேலும், மனிதாய உதவிகளைச் சர்வதேச சமூகம் உடனடியாகவும் நேரடியாகவும் எமது மக்களுக்கு வழங்க வற்புறுத்துவோமாக!! ✷

# மாறிவரும் கள யதார்த்தமும் சிங்கள அரசின் மமதையும்

தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து, பாரிய படைத்தளங்களை அமைத்து வைத்திருப்பதன் மூலம், அங்கே தனது இராணுவப் பிடியை இறுக்கி வைத்திருத்தல் என்பது, அரசுப் படைகளின் பிரதான மூலோபாயமாகும்.

முல்லைத்தீவுப் படைத்தள அழிப்பு, அரசின் இந்த இராணுவ மூலோபாயத்திற்குப் பலத்த அடியொன்றைக் கொடுத்துவிட்டது. இது ஒரு புறமிருக்க -

படைத்தளங்களுக்குப் புலிகள் ஆபத்து விளைவித்தால் - முப்படைகளும் ஒன்றிணைந்து - மும்முனைத் தாக்குதலின் உதவியுடன் உதவிப் படைகளை அனுப்பி, தளத்தைப் பாதுகாத்தல் என்பது, அரசுப் படைகள் அமுல்படுத்தும் ஒரு பாதுகாப்புத் திட்டமாகும்.

சிலாவத்தையில் தரையிறங்கிய உதவிப் படை, தனது இலக்கை அடைய முடியாது கடல் வழியே பின்வாங்கிச் சென்றதுடன், பெரியளவிலான ஆள் - ஆயுத இழப்பையும் சந்தித்தது.

ஆபத்து நேரத்தில் படைத்தளங்களுக்கு உதவ முடியும் என்ற அரசின் பாதுகாப்புத் திட்டம், இதனால் கேள்விக்குறியாகி உள்ளது.

இதே வேளை -

புலிகளை வலுக்கட்டாயமாக மரபுவழிச் சண்டைக்கு இழுத்து - முடிந்தளவிற்கு அவர்களைக் கொல்லும் நோக்குடன் பாரிய இராணுவ நடவடிக்கைகளை நடாத்துவது என்பது, படையினரின் ஒரு தந்திரோபாயப் போர் முறையாகும்.

முல்லைத்தீவுத் தோல்வியை ஈடுகட்டுவதற்காகச் செய்யப்பட்ட 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கங்களில் ஒன்று, பெரும் எண்ணிக்கையில் புலிகளைக் கொல்லுதல் என்பதுமாகும். இந்த நோக்கத்துடன், பெருந் தொகையான வெடிப் பொருட்களை அரசின் வான் படையும் தரைப் படையும், கண்மூடித்தனமான வகையில் பயன்படுத்தின. ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு தடவை என்ற ரீதியில் - 'கிபீர்' குண்டு வீச்சு விமானங்களின் தலைமையில் - அரசின் வான் படை விமானங்கள், கிளிநொச்சி - பரந்தன் பகுதிகளில் குண்டு மழை பொழிந்தமை குறிப்பிடத் தக்கது.

ஆயினும், பொருள் அழிவு - மக்களின் இடப்பெயர்வு - மக்களுக்குத் துன்பமிழைத்தல் - என்ற விடயங்களைத் தவிர, சிங்களப் படை விரும்பிய இராணுவ ஆசை ஈடேறவில்லை. அதேவேளை, **'சண்டைக்கிழுத்துக் கொல்லும்'** உபாயத்துடன் வந்த படையினர் பெரும் இழப்பைச் சந்தித்ததுடன் - அவர்கள் எதிர்பார்த்ததற்கும் மாறாக - படை நகர்வும் பலத்த தடைகளைச் சந்தித்துவிட்டது!

**"சுவரில் எறிந்த பந்து போல"** படையினரின் உபாயம் அமைந்துவிட்டமைக்குப் பிரதான காரணம், முல்லைத்தீவில் புலிகள் இயக்கம் பெற்ற மாபெரும் வெற்றியாகும்.

நேரடிச் சண்டைக்குப் புலிகளை இழுத்துவிட்டு, அவர்கள் மீது பெருமெடுப்பில் படைக்கலச் சக்தியைப் பயன்படுத்தி அழித்தல் என்ற இராணுவப் பொது உபாயத்தை - ஒரு குறித்த அளவு வரை எதிர்கொள்ளும் சக்தியை, முல்லைத்தீவு வெற்றி புலிகள் இயக்கத்திற்கு வழங்கியுள்ளது.

இது காரணமாக **'சண்டைக்கு இழுத்துச் சாகடித்தல்'** என்ற சிங்களப் படைகளின் தந்திரோபாயப் போர்முறை, படையினருக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதே என்ற உண்மையை, 'சத்ஜெய' சண்டை படைத்தரப்பிற்கு உணர்த்தியுள்ளது.

இவ்விதம், அரசின் இராணுவ மூலோபாயமும் போர்த் திட்டங்களும் தந்திரோபாயச் செயற்பாடுகளும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நெருக்கடியான நிலையில் உள்ளனவென்பதே இன்றைய கள யதார்த்தமாகும்.

ஆனால், இந்த இராணுவ யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் சந்திரிகா அரசு இல்லை. தனது முன்னைய இராணுவவாதக் கொள்கைகளிலிருந்து அது இம்மியளவும் இறங்கி வரவில்லை என்பதையே, முல்லைத்தீவுத் தள அழிப்பிற்குப் பின்னரான அதன் சொல்லும் செயலும் காட்டிவருகின்றன.

முல்லைத்தீவில் பலியான - 1200க்கும் மேற்பட்ட - தனது படையினரைப் பற்றி அரசு கவலைப்படவேயில்லை. இந்தச் சாவுகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளாது விடுவதன்மூலம், இந்தத் தோல்வியின் பரிமாணத்தைச் சிங்கள மக்களிடமிருந்து மறைக்க அரசு முயன்றுள்ளது.

இராணுவ சட்ட விதிகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டி, முல்லைத்தீவுப் படையினரைக் **"காணாமல் போனோர்"** பட்டியலில் சேர்த்துவிட்டு அரசு கணக்கை முடித்துக் கொண்டுவிட்டது! புலிகள் ஒப்படைத்த படையினரின் சடலங்களையும், அதே இராணுவ விதியின் சில அம்சங்களைச் சுட்டிக்காட்டி, ஏற்காது நிராகரித்துவிட்டது.

போரில் புலிகளை வெற்றிகொள்ள முடியாது என்ற யதார்த்தம் ஒருபுறமிருக்க, மறுபுறத்தில், இந்தப் போர் காரணமாகச் சிங்கள தேசம் பாரியதொரு பொருண்மியச் சிக்கலுக்குள்ளும் அகப்பட்டுவிட்டது. எனினும், இந்த யதார்த்தங்களைக் கருத்திலெடுத்து - அரசியல் ரீதியாகச் சிந்தித்து - அமைதி வழியில் காரியங்களை நிறைவேற்ற அரசு மறுக்கின்றது. போரைத் தொடர்ந்து நடாத்துவதிலும், போர்ச் செலவுக்காக மேலும் மேலும் பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கி - இந்த நாசகார போரைத் தொடர்வதிலுமே சந்திரிகா அம்மையார் கவனம் செலுத்துகின்றார்.

**சிங்களப் பேரினவாதத்தின் இராணுவ மமதை உடைபடும்வரை, சிங்களத் தலைவர்களின் இராணுவ அணுகுமுறைகளை எவராலும் தடுத்துவிட முடியாது என்ற உண்மை, மீண்டும் இங்கே நிரூபணமாகியுள்ளது!**

*("விடுதலைப்புலிகள்" ஆசிரியர் தலையங்கம் (ஆவணி - புரட்டாதி 96)* ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மட்டக்களப்பில் இராணுவத்தின் கொலை வெறி
# பொதுமக்கள் அடித்துச் சித்திரவதை

இம் மாதம் 5ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட விநாயகபுரத்தில் சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்ட சிறிலங்காவின் விசேட அதிரடிப் படையினர், பல பொதுமக்களை விசாரணை எனும் பெயரில் முகாமுக்குக் கொண்டு சென்று கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர். இவர்களில் நான்கு பொதுமக்களைச் சாகும்வரை அடித்து சித்திரவதை புரிந்த படையினர், பின்னர் அவர்கள் இறந்துவிட்டதாக நினைத்து கிராமத்தில் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர். இவர்கள் உயிருடன் இருக்கக் கண்ட கிராமத்தவர்கள், அவர்களைச் சரியான நேரத்தில் மருத்துவமனையில் சேர்த்ததினால் இந் நால்வரும் உயிர் பிழைத்துள்ளனர்.

சித்திரா (18)

பத்தர் (50)

மணியம் (48)

சுதா (20) ஆகியோரே அதிரடிப் படையால் மிகக் கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டவர்களாவர்.

## வாழைச்சேனை பேய்த்தாழையில் மூன்று பிள்ளைகளின் தாய் கொலை

வாழைச்சேனை பேய்த்தாழையில் 3 பிள்ளைகளின் தாயான துளசிமணி சிவநேசதுரை (40) காட்டுக்குள் விறகு எடுக்கச் சென்ற வேளை, மறைந்திருந்த சிறிலங்காப் படையினர் இவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். இவரது உடலைக் கூட உறவினரிடம் கையளிக்க இராணுவம் மறுத்துவிட்டது.

## மிதிவெடியில் தகப்பனும் மகனும் பலி

பூநகரி ஞானிமடப் பகுதியில் மாட்டு வண்டியில் சென்ற தகப்பனும் அவரது மகனும் அப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்ததில் அநியாயமாக உயிரிழந்துள்ளனர்.

கே. தனபாலசிங்கம் (36), த. சுதர்சன் (12) ஆகியோரே இறந்த அந்த அப்பாவி மக்களாகும்.

## மாணவன் படுகொலை

யாழ்ப்பாணம் ஆயுள் வேத மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த இராசதுரை சிவநாதன் (22) எனும் மாணவன் கடந்த 10ஆம் திகதியன்று கொக்குவில் கலட்டிப் பகுதியில் வைத்து சுட்டுக் கொலை செய்யப் பட்டுள்ளார். வலிகாமம் சுதுமலையைச் சேர்ந்த இம் மாணவன் தனது மைத்துனரைக் கொழும்புக்குப் பயணம் அனுப்பிய பின், யாழ். நகரிலிருந்து தனது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையிலே, இராணுவத்தால் எவ்வித காரணமுமின்றிக் கைது செய்யப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

## எறிகணை தாக்கி வயோதிபர் பலி

கிளிநொச்சி நகரில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர், முரசுமோட்டை, கண்டாவளைப் பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டுள்ளனர். எனினும் பொதுமக்கள் முன்னரேயே பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்தமையால் உயிரிழப்பு குறைவாக இருந்தபோதும், நடக்க முடியாமல் வீட்டில் தங்கியிருந்த சிவக்கொழுந்து அன்னம்மா (70) எனும் முதியவர் கோரமான முறையில் கொல்லப்பட்டுள்ளார். ✷

# 'யுனிசெவ்" ஏற்படுத்திய ...

துறைநீலாவணைப் பகுதியில் சுற்றிவளைப்பு எனும் பெயரில் போராளிகள் மீது மறைந்திருந்து துப்பாக்கியால் சுட்டதில் 2 போராளிகள் உயிரிழந்துள்ளனர்.

அதேதினம், யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் காலை 7.15 மணியளவில் சிறிலங்காப் படையினர் கண்மூடித்தனமான முறையில் சுட்டதில் வீதியால் சென்று கொண்டிருந்த போராளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேஜர் இளஞ்செழியன் (இந்திரன் ராஜ்மோகன், இமையாணன், உடுப்பிட்டி) கப்டன் உதயராசா (அம்பிகைபாலன் ஜெயசீலன், யாழ்ப்பாணம்) ஆகிய போராளிகளே மட்டக்களப்புச் சம்பவத்தில் வீரச் சாவடைந்தவர்களாவர்.

இந்தப் படுகொலைகளையும் அமைதி பேணலை பகிரங்கமாக மீறிய சிறிலங்கா இராணுவத்தின் அடாவடித்தனத்தையும் விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இவ்வாறு சர்வதேச சட்டங்கள், அமைப்புகள், சர்வதேச சமூகங்களுக்கு எவ்வித அச்சமுமின்றி சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தின் அழைப்பைப் பகிரங்கமாக வன்முறைப்படுத்திய சிறிலங்காவை, சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டுமென்பதே புலம் பெயர் தமிழர்களின் எதிர்பார்ப்பாகும். ✷

# இரு இளம் பெண்கள் கைது...

கோண்டாவில் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரே மூன்று தினங்களுக்குப் பின்னர் இன்னுமோர் இளம்பெண்ணை, படுபயங்கரமான முறையில் கூட்டான பாலியல் வன்முறைக்குள்ளாக்கிய பின்னர் கொலை செய்து உடலை வீசியுள்ளனர்.

ரஞ்சினி (வயது 24) எனும் இளம் பெண் திருமணம் புரிவதற்காகக் கனடா செல்ல விருந்தார். தனது பயணத்தைப் பற்றி, கோண்டாவிலுள்ள தனது உறவினர்களுக்குச் சொல்லச் சென்ற வேளையில், கோண்டாவில் பகுதியின் ஓர் சோதனைச் சாவடியில் வைத்து இராணுவ வெறியர்களால் அருகிலுள்ள வீட்டுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட அப்பெண்ணை, அக் குண்டர்கள் அவ் வீட்டில் வசித்த இரு வயோதிபர்களை விரட்டிவிட்டு கூட்டான பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியுள்ளனர். பின்னர் கொடூரமான முறையில் அவரைக் கொலை செய்து, வீட்டின் முற்றத்தில் வீசியெறிந்துவிட்டுச் சென்றுள்ளனர்.

இவரைத் தேடிச் சென்ற உறவினர்கள் அவ் அப்பாவிப் பெண்ணின் நிர்வாணமான உடலையே கண்டெடுத்துள்ளனர்.

இன்று, இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழீழப் பகுதிகளில் இக் குண்டர்களின் விபரிக்க முடியாத படு பயங்கரமான படுகொலைகள், பாலியல் வன்முறைகள், சித்திரவதைகள் அதிகளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக தென் தமிழீழத்தின் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலும் யாழ். குடாநாட்டிலும் இவர்களின் அட்டகாசங்கள் மிக மோசமாக உள்ளன. மக்கள் எந்நேரமும் மரண பீதியுடனேயே காலத்தைக் கழித்து வருகின்றனர். ✷

# எனது குடும்பத்தினரை இராணுவமே...

துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியதாகவும், தனது குடும்பத்தை இராணுவம் கைது செய்ததைப் பலர் நேரடியாகக் கண்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் அச்சிறுமி குறிப்பிட்டுள்ளார்.

இக் கடிதம் பற்றி சிறிலங்காப் பாராளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பப்பட்ட போதும், இதற்குத் தகுந்த பதில்களை அரசு இதுவரை கொடுக்கவில்லை.

கைது செய்யப்பட்ட திருமதி ராசம்மா குமாரசாமி அவர்கள், கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தின் உப அதிபராகக் கடமையாற்றி வந்தவர். கடந்த 38 ஆண்டுகளாகத் தனது சேவையைக் கல்வித் திணைக்களத்திற்காக ஆற்றியுள்ளார். இவரையும் இவரது குடும்பத்தினரையும் விடுவிக்குமாறு பள்ளிக்கூட ஆசிரியர்கள், மாணவர்கள் சிறிலங்காவின் கல்வி அமைச்சரைக் கோரியுள்ளனர்.

எனினும், இது குறித்து இதுவரை எதுவித தகவலும் அமைச்சரிடமிருந்து கிடைக்கப் பெறவில்லை. ✷

## ஈவிரக்கமற்ற முறையில்.....

விநாயகபுரத்தில் சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்ட சிறிலங்காவின் விசேட அதிரடிப் படையினர், பல பொதுமக்களை விசாரணை எனும் பெயரில் முகாமுக்குக் கொண்டு சென்று கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர். இவர்களில் நான்கு பொதுமக்களை சாகும்வரை அடித்து சித்திரவதை புரிந்த படையினர், பின்னர் அவர்கள் இறந்து விட்டதாக நினைத்து கிராமத்தில் போட்டுவிட்டுச் சென்றுள்ளனர். இவர்கள் உயிருடன் இருக்கக் கண்ட கிராமத்தவர்கள், அவர்களைச் சரியான நேரத்தில் மருத்துவமனையில் சேர்த்ததினால் இந் நால்வரும் உயிர் பிழைத்துள்ளனர்.

சித்திரா (18), பத்தர் (50) மணியம் (48), சுதா (20) ஆகியோரே அதிரடிப் படையால் மிகக் கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டவர்களாவர். ✷

# மட்டக்களப்பில் சிறிலங்காப் பொலிசார் மீது விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதல்

- ✳ 24 பேர் அடங்கிய பொலிஸ் படையணி முற்றாக அழிப்பு
- ✳ 2 ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர்
- ✳ பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன
- ✳ விடுதலைப்புலிகள் தரப்பில் எதுவித சேதமும் இல்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பன்னிய கொட என்னும் இடத்தில் சிறிலங்காப் பொலிசார் மீதான விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலில் 24 சிறிலங்காப் பொலிசாரும், 2 ஊர்காவல் படையினரும் கொல்லப்பட்டனர். 22-10-96 ம் திகதி அதிகாலை ஆறுமணிக்கு, இரவுத் தேடுதல்களை நடத்திய பின் அதிகாலை தமது பொலிஸ் நிலையத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்த பொலிஸ் படையணியே இவ் அதிரடித்தாக்குதலுக்கு இலக்கானது. இத்தாக்குதலில் பொலிஸ் அணி முற்றாக அழிக்கப்பட்டதுடன் பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. தாக்குதல் நடத்திய விடுதலைப்புலிகளின் அணி எதுவித சேதமும் இன்றி தளம் திரும்பியது. கைப்பற்றப்பட்ட ஆயுத விபரங்கள்:-

| | |
|---|---|
| T 56-01 - | 19 |
| S84 - | 02 |
| G3 - | 03 |
| SLR - | 01 |
| 40mm pistol - | 01 |
| 81 LMG - | 01 |
| AK LMG - | 02 |
| 303 - | 01 |
| Walkie set - | 02 |
| Water cans - | 02 |
| 40mm Shells - | 12 |
| K 400 Grenades - | 12 |
| AK LMG links - | 700 |
| AK Holster - | 05 |
| AK LMG Drum Magazine - | 09 |
| 81 LMG Drum Magazine - | 04 |
| Para Light - | 03 |
| 5.56 Bullets - | 76 |
| G3 Magazine - | 04 |
| T56 Magazine - | 78 |
| NATO Bullets - | 40 |
| 1m Bullets - | 2946 |
| Kit Bag - | 05 |
| 584 Magazine - | 02 |

## மட்டக்களப்பில் மேலும் ஒரு தாக்குதல்

கடந்த 22-10-96 அதிகாலை பொலிஸ் ரோந்து அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய இன்னுமொரு அதிரடித்தாக்குதலில் 2 சிறிலங்காப் பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பித்துக் கொண்டனர். சில ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் அணியில் எதுவித சேதமும் இல்லை. இவ் அதிரடித் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுத விபரங்கள்:-

| | |
|---|---|
| G3A3m Rifle - | 02 |
| G3 Magazine - | 09 |
| G3 Holster - | 02 |
| NATO Bullets - | 157. |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைத் தீவில் நிலவும் பயங்கரவாதமும் அதனை நீக்கக்கூடிய காரணிகளும்

- இராசா -



இலங்கைத் தீவு அண்மைக் காலம்வரை உல்லாசப் பிரயாணிகளின் சொர்க்க புரியாகத் திகழ்ந்து வந்தது. ஆனால், இன்று மனித உயிர்களைக் காவு கொள்ளும் கொலைக்களமாக இத்தீவு மாற்றப்பட்டுள்ளது.

சொர்க்கபுரியாகத் (உல்லாசப் பிரயாணிகளுக்கு) திகழ்ந்த இலங்கைத் தீவை, கொலைக்களமாக மாற்றிய காரணிகள் எவை என்பதையும் அதனை நீக்கக்கூடிய காரணிகள் எவை என்பதையும் கண்டறிய முயற்சிப்பதே இவ் ஆக்கத்தின் நோக்கமாகும்.

**1948**ம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கைத் தீவுக்குரிய ஆட்சிப் பொறுப்பை, சிங்கள இன மக்களின் பிரதிநிதிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றத்திடம் ஒப்படைத்துவிட்டு பிரித்தானிய காலனித்துவ அரசினர் சென்றனர்.

அப்படிச் செல்லும்போது, தமது எதிர்கால நலன்களுக்கு உதவக்கூடிய முறையில் தமிழ் தேசிய இனத்திற்கும் சிங்கள தேசிய இனத்திற்கும் இடையில் முரண்பாடுகளையும் சந்தேகங்களையும் விதைத்துவிட்டே சென்றனர்.

அவர்களால் விதைக்கப்பட்ட முரண்பாடுகளும் சந்தேகங்களும் பௌத்த மத வெறியர்களாலும் சிங்கள இன வெறியர்களாலும் சிங்கள மக்களின் மனங்களில் தீவிரமாக வளர்க்கப்பட்டது.

இதனால் சிங்கள மக்களிடம் சாதாரணமாக இருக்க வேண்டிய இனப்பற்று, மொழிப்பற்று சிங்கள இனவெறியாக மாறி இன்னொரு தேசிய இனமான தமிழ்த் தேசிய இனத்திற்குரிய சகல "தேசிய அடையாளங்களையும்" அழிப்பதில் தீவிரம் பெற்றுள்ளது.

அத்துடன் தமிழ் இனத்தை, இலங்கைத் தீவில் இனப்படுகொலைகள் மூலம் அழித்துவிட வேண்டும் என்பதிலும் சிங்கள இனவெறி ஆர்வமாக உள்ளது. இவ்வார்வத்தைக் குறைய விடாமல் செய்யும் முக்கிய காரணியாக இருப்பது, சிறீலங்கா சிங்கள அரசுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளாகும்.

சிங்கள இனத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் கொழுந்துவிட்டெரியும் 'இனவெறி' என்ற பெரு 'நெருப்பில்' தமிழ்த் தேசிய இனமும் அதன் அடையாளங்களும் அழிந்து போவதைத் தடுப்பதற்காக, மிதவாதத் தமிழ் அரசியல் தலைவர்கள் சுமார் 30 ஆண்டுகளாகச் சாத்வீக வழிமுறையில் போராடினர். ஆனால், தமிழின அழிப்பும் தமிழரின் தேசிய அடையாளங்களை அழிப்பதும் கூர்மைபெற்று வந்ததே தவிர, தமிழினத்துக்கு எந்தவித பாதுகாப்பும் கிடைக்கவில்லை.

தமிழினத்தின் மீது, சிங்கள அரச இராணுவ பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட போதெல்லாம் உள்நாட்டுப் பிரச்சினை என்று கூறி, தமிழின பாதுகாப்புக்குரிய எந்த நடவடிக்கைகளையும் வெளிநாடுகள் மேற்கொள்ளவில்லை.

தமிழினத்தை விழுங்கிவிடுவதில் சிங்கள அரசும், பௌத்த மத வெறியர்களும் தீவிரமாகச் செயற்படுகிறார்கள். இதனைத் தடுக்க வெளிநாடுகளும் ஐ. நாடுகள் சபையினரும் தலையிட வேண்டும் என மிதவாதத் தமிழ்த் தலைவர்கள் கொழும்பில் இருந்துகொண்டும் வெளிநாடுகளுக்குச் சென்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால், வெளிநாடுகளோ ஐ. நாடுகள் சபையினரோ எடுத்த நடவடிக்கைகள் ஆக்கபூர்வமானதாக அமையவில்லை.



இந்நிலையில்தான் எம்மை, எம் இனத்தைப் பாதுகாக்க, எம் தேசிய அடையாளங்களைப் பேணிப் பாதுகாக்க, நிராயுதபாணிகளான தமிழர் மீது சிங்கள இனம் ஏவிவிடும் ஆயுத வன்முறையை எதிர்கொள்ள, தமிழர்களும் ஆயுதம் ஏந்த வேண்டும் என்ற நிலைக்குத் தமிழ் இளம் சந்ததி தள்ளப்பட்டது.

சிங்கள இன வெறியர் ஏவிவிட்ட வன்முறையை மென்முறையால் வெல்ல முடியாது என்பதைத் தமிழினம் உணர்ந்துகொண்டமையாலேயே ஆயுதப் போராட்டத்தை நாடியது. இவ்வாறு ஆயுதத்தின் மூலமே தமிழினம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்பதை உணர்ந்தவர்களில் முதன்மையானவராகவும், தமிழின வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தமிழ்த் தலைவராகவும் இருப்பவர்தான் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஆவார்.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் தீர்க்க தரிசனம் நிறைந்த அரசியல் முடிவுகளும், இராணுவ நடவடிக்கைகளும் இன்று இலங்கைத் தீவில் தமிழினத்தின் இருப்பை உறுதி செய்துகொண்டிருக்கிறது.

இலங்கைத் தீவில் படுகொலை நடந்தாலென்ன, தமிழ் மக்களும் சிங்கள மக்களும் பொருளாதார அபிவிருத்தியின்றி நலிவடைந்தாலென்ன அவை யாவும் உள் நாட்டுப் பிரச்சினைகள்.

ஆனால், தமது பொருளாதார இராணுவ நலன்களுக்குரிய வகையில் இலங்கைத் தீவில் உள்ள அரசும், இராணுவமும் செயற்பட வேண்டும் என்பதில் வெளிநாடுகள் ஆர்வமாக உள்ளன. இந்த ஆர்வத்திற்கு இடையூறான நிலைமைகள் இலங்கைத் தீவில் ஏற்படும் போது வெளிநாடுகள் கோபம் கொள்கின்றன.

சிறிலங்காவில் தமது நலன் பாதிக்கப்படுவதற்குக் காரணமாக இருப்பவர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனும் தமிழீழ விடுதலைப் புலிகளும்தான் என்ற தவறான முடிவை எடுத்துள்ள வெளிநாடுகள், தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்த முயற்சி எடுக்கின்றன. அதற்குரிய முறையிலான பொய்ப் பிரசாரத்தை சிறிலங்கா சிங்கள அரசும் வெளிநாடுகளில் மேற்கொண்டுவருகிறது.

சிறிலங்கா அரசின் பொய்ப்பிரசாரத்தை வெளிநாடுகள் நம்பி அல்லது உண்மை தெரிந்திருந்தும் தமது நலன் கருதி சிறிலங்கா அரசின் பொய்ப் பிரசாரத்தை உண்மையென நம்புவதுபோல் பாவனை செய்து சிறிலங்கா அரசுக்கு நிதியையும் நவீன ஆயுதங்களையும் வாரி வழங்கி வருகின்றன.

இதனால் இன்று, இலங்கைத் தீவில் எப்பகுதியில் வாழும் மக்களும் பாதுகாப்பாக நிம்மதியாக வாழமுடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சிங்கள இராணுவம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, போர்க்களத்தில் வியூகங்களை வழங்குபவர்களாகவும் யுத்த விமான ஓட்டிகளாகவும் இராணுவப் பயிற்சியாளர்களாகவும் இன்று உலகின் தனிப் பெரும் வல்லரசாகத் திகழ்வதாகக் கூறப்படும் ஐக்கிய அமெரிக்காவின் இராணுவத்தினர் இருப்பதாகச் செய்திகள் வெளிவருகின்றன. இவ்வாறாக வெளிநாடுகள் சிறிலங்கா அரசிற்கும் இராணுவத்திற்கும் உதவுவதால் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு முயற்சிகள் பின்தள்ளப்பட்டு, இராணுவத்தீர்வு முயற்சிகளே சிங்கள இனத்தின் பல தரப்பினராலும் முன்தள்ளப்படுகின்றது.

இவ்வாறான இராணுவ தீர்வு முயற்சிகளை எதிர்கொண்டு முறியடிப்பதைத் தவிர வேறு வழி எதுவும் தமிழீழ மக்களுக்கு இல்லை என்பதைச் சர்வதேசம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இராணுவ வன்முறையை இராணுவ வன்முறையால் எதிர்கொள்வதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை என்பதைத்தான் அண்மைக்கால நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

யாருக்காக? எந்த நோக்கத்திற்காக? சிங்கள இளைஞர்கள் போர்க்களம் செல்கிறார்கள் என்பது பற்றிச் சிங்களப் பெற்றோர்கள் இனிமேலாவது சிந்திக்க வேண்டும்.

சிறிலங்கா அரசுக்கு எதிராக அழுத்தங்களைப் பிரயோகித்து நேர்மையான அரசியற் தீர்வு முயற்சிக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செல்லுமாறு தூண்ட வேண்டும்.

அரசியலில் இருந்து முற்று முழுதாகப் பௌத்த மதவாதிகளின் ஆதிக்கத்தை விலத்திக் கொள்ளும்படி பௌத்த மத பீடங்களுக்கு வேண்டுகோள் விடப்பட வேண்டும்.

இதனால் உயிரழிவுகளும் பொருளழிவுகளும் இயற்கை அழிவுகளுமே ஏற்படுகின்றது.

இதன் மூலம் தமிழ் இனமோ, சிங்கள இனமோ பயன்பெறவில்லை. அண்மையில் சிங்கள இராணுவத்தினர் போர்க்களத்தில் இறந்தபோது அவர்களின் இறந்த உடல்களைக்கூட சிறிலங்கா அரசு பொறுப்பேற்க முன்வரவில்லை.

யாருக்காக? எந்த நோக்கத்திற்காக? சிங்கள இளைஞர்கள் போர்களம் செல்கிறார்கள் என்பது பற்றிச் சிங்களப் பெற்றோர்கள் இனிமேலாவது சிந்திக்க வேண்டும்.

சிறிலங்கா அரசுக்கு எதிராக

சிங்கள இன வெறியர் ஏவிவிட்ட வன்முறையை மென்முறையால் வெல்லமுடியாது என்பதைத் தமிழினம் உணர்ந்து கொண்டமையாலேயே ஆயுதப் போராட்டத்தை நாடியது. இவ்வாறு ஆயுதத்தின் மூலமே தமிழினம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதை உணர்ந்தவர்களில் முதன்மையானவராகவும், தமிழின வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தமிழ்த் தலைவராகவும் இருப்பவர்தான் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஆவார்.

அழுத்தங்களைப் பிரயோகித்து நேர்மையான அரசியற் தீர்வு முயற்சிக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செல்லுமாறு தூண்ட வேண்டும்.

அரசியலில் இருந்து முற்று முழுதாகப் பௌத்த மதவாதிகளின் ஆதிக்கத்தை விலத்திக் கொள்ளும்படி பௌத்த மத பீடங்களுக்கு வேண்டுகோள் விடப்பட வேண்டும்.

தொடர்ச்சி 18 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாண்டவர்கள் வெல்வார்கள் !

# கௌரவர்கள் தோற்பார்கள் !

குரு சேத்திர பூமியை யுத்த மேகங்கள் மூடத் தொடங்கி விட்டன. கௌரவர் சேனையும், பாண்டவர் படையும் யுத்தத்திற்கு ஆயத்தமாகிவிட்டன. கண்ணபரமாத்வாவின் சமாதான முயற்சிக ளுக்கான தூது தோல்வி கண்டுவிட்டது. பாதி இராச்சியம் கேட்டு, ஐந்து நாடுகள், ஐந்து ஊர்கள், குறைந்த பட்சம் ஐந்து வீடுகள் கேட்டு, பாண்டவர் தோல்வி கண்டுவிட்டனர். ஊசிமுனை நிலமு மில்லை என்று கௌரவர் கைவிரித்து விட்டனர். **"சமாதானத்திற்கான கதவுகள் மூடப்பட்டுவிட்ட நிலையில் யுத்தம் தவிர வேறுவழியில்லை"** என்றாகி விட்டது. தங்கள் விருப்பத்திற்கெதிராகத் திணிக்கப்பட்ட யுத்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது, பாண்டவர்களுக்குத் தெரியாமலில்லை.

**"யுத்தத்தில் வெல்லுபவர்கள் யாரும் இல்லை. எல்லோருமே ஏதோ ஒரு விதத்தில் இழப்புக்கு ஆளாகிறார்கள்"** என்ற வேதாந்தம் பாண்டவர்களுக்குப் புரியாமலில்லை. ஆனால் வேறு வழியிருக்கவில்லை. நாற்படையும் போருக்கு ஆயத்தமாகின்றன. விடிந்தால் போர். தேர்ப்படை தேர்ப்படையோடும், யானைப்படை யானைப்படையோடும், குதிரைப்படை குதிரைப்படையுடனும், காலாற் படை காலாற்படையுடனும் மோதிக்கொள்ளப் போகின்றன. போர் முரசுகள் கொட்டப் போகிறது. சங்குகள் முழங்கப்போகிறது.



இந்தக்கட்டத்தில், இந்தப் பாரதப் போரை எப்படித் தடுத்து நிறுத்தலாம் என்று சற்று நேரத்தில் அருச்சுனனுக்கு சத்திரிய தர்மம் பற்றி கீதோபதேசம் செய்யப் போகும் கண்ணபரமாத்மா பாண்டவர்களில் கடைக்குட்டியான சகாதேவனிடம் கேட்கிறார். சகாதேவன் அறுபத்து நான்கு கலைகளும் கற்றுத் தேர்ந்தவன். அறுபத்து நான்கு கலைகளில் சோதிடக் கலையும் ஒன்று. அந்தக்கலை சகாதேவனுக்குக் கைவந்த கலையாக இருந்தது.

சகாதேவனின் விடை, பாட்டாகவே வந்தது.

**"பாராளக் கர்ணன் இகழ் பார்த்ததனை முன்கொண்டு அணங்கின்**

**காரார் குழல் களைந்து காலில் தளையூட்டி**

**நேராகக் கைப்பிடித்து நின்னையும் யான் கட்டுவனேல்**

**வாராமல் காக்கலாம் மாபாரதப் போர்"**

என்கிறான் சகாதேவன்.

தமிழீழப் போருக்கும் பாரதப் போருக்கும் ஒற்றுமை இருக்கிறது. பாண்டவர்கள் பாதி இராச்சியம், ஐந்து நாடு, ஐந்து ஊர், ஐந்து வீடு கௌரவரிடம் கேட்டு, உங்களுக்கு ஊசி முனை நிலமும் இல்லை என்ற பின், யுத்தம் செய்யப் புறப்பட்டார்கள்.

தமிழர்களும் தமிழரசு கேட்டு, அது இல்லையென்றபோது, பிரதேச சபை கேட்டு, மாவட்ட அபிவிருத்தி சபை கேட்டு, மாவட்ட சபை கேட்டு சிங்களவர் உங்களுக்கு ஊசி முனை நிலமும் இல்லையென்ற பின்தான், ஈழப் போர் தொடங்கியது. பாரதப் போர் பதினெட்டு நாட்கள்தான் நடந்தது. துரியோதனர்கள் போரில் தோற்கடிக்கப்பட்டு, கௌரவர் குடும்பம் பூண்டோடு அழிக்கப்பட்டது. பாண்டவர்கள் வெற்றி பெற்று இராச்சியத்தை ஆண்டார்கள்.

ஈழப்போர் பதின்மூன்று ஆண்டுகளை நிறைவு செய்துகொண்டு, பதினான்காவது ஆண்டில் கால் பதித்துள்ளது.

**இப்போது இரண்டு தமிழர்கள் சந்தித்துக்கொண்டால் ஒருவரை யொருவர் கேட்கும் கேள்வி "இந்தப்போருக்கு ஒரு முடிவில் லையா? சிங்கள ஆட்சியாளர் முல்லைத்தீவு சொல்லிக் கொடுத்த பாடத்தைப் படித்துக்கொண்டு, இனப் பிரச்சினைக்கு சமாதான வழிகளில் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு ஏன் காணக்கூடாது"** என்பதுதான்.

பாரதப் போரைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றால், "பார்த்திபனைக் கொண்டே கர்ணனை அரியணை ஏற்ற வேண்டும்; பாஞ்சாலியின் தலையை மொட்டை அடிக்க வேண்டும். கண்ணனது காலில் விலங்கிட்டு கயிற்றால் கட்டிப் போட வேண்டும்" என்கிறான் சகாதேவன்.

ஈழப்போரை முடிவுக்குக் கொண்டுவர யார் தலையை மொட்டை அடிக்க வேண்டும்? யார் காலுக்கு விலங்கிட வேண்டும்? யாரைக் கட்டிப்போட வேண்டும்?

சிங்களவர் தரப்பில் குறைந்தபட்சம் கீழ்க்கண்ட சக்திகள் தமிழ் மக்களுக்கெதிரான போரைக் கடைசிப் பரியந்தம் நடாத்தி, அவர்களை அழித்தொழிக்க வேண்டும் என கங்கணம் கட்டி நிற்கின்றன. அவையாவன:

1. மஞ்சள் அங்கியணிந்த புத்த பிக்குகள்.

2. காக்கிச் சட்டையணிந்த சிங்கள இராணுவம்.

3. வெள்ளைச் சட்டை போட்ட சிங்கள அரசியல்வாதிகள்.

4. பேனாவை விஷத்தில் தோய்த்தெழுதும் சிங்கள பத்திரிகையாளர்கள்.

போரை யார் நிறுத்த விரும்பினாலும் புத்த தேரர்கள் விட மாட்டார்கள். யுத்தத்தை நியாயப்படுத்துவது மட்டுமல்ல, இராணுவ முகாம்களுக்குத் திக் விஜயம் செய்து இராணு வத்தினரையும் போர்க் கருவிகளையும் ஆசீர்வதிக்கிறார்கள்.

போதிமரத்து புத்த பகவானே நேரில் எழுந்தருளித் தமிழர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று போதனை செய்தாலும் இந்தப் புத்த தேரர்கள், புத்தர் விடுதலைப் புலிகளின் கையாள் என அவருக்கு முத்திரை குத்திப்போடு வார்கள்.

பாஞ்சாலியின் கூந்தல் களைந்தால் பாரதப்போரை நிறுத்தலாம் எனச் சகாதேவன் சொன்னான். இந்தப் புத்த தேரர்களை அப்படியொன்றும் செய்ய முடியாது. ஏற்கனவே அதனை எதிர்பார்த்து தலையை மொட்டையடித்து விட்டார்கள். சிங்கள இராணுவம் புண்ணை மாற்ற முடியாத பிச்சைக்காரன் நிலையில் இருக்கிறது. போர் நின்றுவிட்டால் பிழைப்புக் கெட்டுவிடும் – முதலுக்கு மோசம் வந்து விடும் என்று நினைக்கிறது. சிங்கள அரசியல்வாதிகளையிட்டு சொல்லவேண்டியதே இல்லை. தமிழர்க ளது தலைகளை உருட்டுவது தங்களது வாக்கு வேட்டைக்கு நல்லதென்று நினைக்கிறார்கள். சிங்களப் பத்திரிகை யாளர்கள் தங்கள் மடிமீது கைவைக் கும்போது, சனநாயகத்திற்கு ஆபத்து என்று புலம்புவார்கள். ஆனால், இதே பத்திரிகையாளர்கள் தமிழர்களின் அடிப்படை சனநாயக உரிமைகள் பறிக்கப்படுவதற்கு ஆதரவாகக் குரல் கொடுப்பது மட்டுமல்லாமல், விடுதலைப் புலிகளை முதலில் தோற்கடிக்க வேண்டும் – அதன்பின்தான் வேறு கதை என்றெல்லாம் நாளும், பொழுதும் எழுதித் தீர்க்கிறார்கள்.

**மொத்தத்தில், சிங்களவர் பக்கத்தில் தமிழருக்கு எதிரான இனவழிப்புப்போரை நிறுத்த வேண்டும், நாட்டில் இரத்த ஆறு ஓடுவதைத் தடுக்க வேண்டும், இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வல்ல, அரசியல் தீர்வு காணவேண்டும் என்று குரல் கொடுப்பவர்கள் யாரும் இல்லை.**

நவசமசமாஜக் கட்சி, போருக்கு எதிராகக் குரல் கொடுப்பது உண்மைதான். அவுஸ்திரேலியாவில் அண்மையில் நடந்த மாநாட்டில் நவசமசமாஜக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் Dr. சுனில் ரத்தினப்பிரியா "சமாதானத்திற்கான சாத்தியக் கூறுகளும் தடைகளும்" (Peace - Possibilities and Obstacles) என்ற தலைப்பில் பேசியுள்ளார். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நவசமசமாஜக் கட்சி முன் வைத்திருக்கும் கோட்பாடுகளை விளக்கியுள்ளார்.

**1. எல்லாக் குடிமக்களுக்கும் இடையில் சமத்துவம்.**

**2. பிரதேசங்களுக்கு சுயாட்சி (தனித்துவமான மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் உரிமை)**

**3. சுய நிர்ணய உரிமை (ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் அதன் தலை விதியை நிர்ணயிக்கும் உரிமை)**

இதன் அடிப்படையில் வட–கிழக்கு மோதலைத் தீர்ப்பதற்கு–

1. பிரிந்துபோகும் உரிமை அரசியல் யாப்பில் எழுதப்படும். இதன்மூலம் ஒற்றுமை என்பது இரு சாராருக்கும் இடையில் சம்மதத்தின் அடிப்படையில் இருக்கும். தமிழர்களது தாயகக்கோட்பாடு இதன்மூலம் உறுதி செய்யப்படும்.

2. குடியுரிமை, வேலைவாய்ப்பு, கல்வி, காணிப்பகிர்வு போன்றவற்றில் காணப்படும் பாரபட்சம் அகற்றப்பட்டு, உண்மையான சமத்துவம் நிலை நாட்டப்படும்.

3. தமிழ் பேசும் பிரதேசங்களுக்குச் சுயாட்சி உரிமை. ஏனைய பிரதேசங்களில் வசிக்கும் சிறுபான்மையினருக்கு ஊர்காவல்படை, ஆயுதபாணிகளின் பாதுகாப்பு.

4. மைய அரசுடன் தமிழில் தொடர்புகொள்ள உரிமை.

5. தேசிய வருவாயில் தமிழ்ப் பிரதேசங்களுக்கு நியாயமான ஒதுக்கீடு.

## இது நான்கு மறைத் தீர்ப்பு

இவற்றைப் படிக்க மனதுக்கு இதமாகத்தான் இருக்கிறது. பெரும் பான்மை இனத்தில் அதிலும் அறிவுப் பிழைப்பாளர்கள் மத்தியில் அபூர்வமாக இப்படி முற்போக்குச் சிந்தனை படைத்த அரசியல்வாதி இருப்பது மனதுக்கு ஆறுதலாக இருக்கிறது.

ஆனால், இந்த அரசியற் கோட்பாடுகளைப் பெரும்பான்மை இனத்தவர் ஒத்துக் கொள்ளும் அல்லது ஏற்றுக்கொள்ளும்

தமிழீழப் போருக்கும் பாரதப் போருக்கும் ஒற்றுமை இருக்கிறது. பாண்டவர்கள் பாதி இராச்சியம், ஐந்து நாடு, ஐந்து ஊர், ஐந்து வீடு கௌரவரிடம் கேட்டு, உங்களுக்கு ஊசி முனை நிலமும் இல்லை என்ற பின், யுத்தம் செய்யப் புறப்பட்டார்கள்.

தமிழர்களும் தமிழரசு கேட்டு, அது இல்லையென்றபோது, பிரதேச சபை கேட்டு, மாவட்ட அபிவிருத்தி சபை கேட்டு, மாவட்ட சபை கேட்டு சிங்களவர் உங்களுக்கு ஊசி முனை நிலமும் இல்லையென்ற பின்தான், ஈழப் போர் தொடங்கியது.

தொடர்ச்சி 13 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முல்லைப் போரின் கடற்சமரும் திரிவிட பஹுரவும்

"சண்டை தொடங்கி ஒரு மணித்தியாலத்தில் திருகோணமலையிலிருந்து வந்து சேர்ந்திடுவான்! கவனம்!"

செல்லும் திட்டம் வகுத்து, வெல்லும் உபாயம் வரைந்து, தாக்கும் அணிகளைத் தயார்படுத்தி, வழிபடுத்தும்



தளபதிகளை நியமித்து, 'வோக்கிக்கு' பற்றரியிலிருந்து 120 'மில்லி மீற்றர்' ஏவுகுண்டுக்கு 'பூஸ்ற்ரர்' வரை ஆயத்தப்படுத்தி, சிற்றூண்டிப் பையிலிருந்து சத்திர சிகிச்சைக் கூடம் வரை ஒழுங்குபடுத்தி, மண் மூட்டைக்கு சணல் கயிற்றிலிருந்து 'சப்ளை' வாகனத்துக்கு உடனடித் திருத்துமிடங்கள் வரை ஏற்பாடு செய்து, எல்லாவற்றையும் பூர்த்தியாக்கிய

---

**விடுதலைப் புலிகளின் கடற்போர் வீரர்களுக்கு, தம் வரலாற்றில் அவர்கள் சந்தித்த நீண்ட - ஓய்வற்ற - கீர்த்திமிகு பெரும் போரரங்கு முல்லைத்தீவேதான்.**

**ஆனையிறவுச் சமரின் முடிவிற்கும், முல்லைத்தீவுச் சமரின் முடிவிற்கும் நேர் எதிர் வேறுபாடு.**

**கடலில் புலிகள் இல்லாததால், அன்று அப்படி நடந்தது: கடல் எங்கும் புலிகள் நிறைந்ததால் இன்று இப்படி நடந்தது.**

---

தலைவர் அவர்கள், நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து முழுமையான தாக்குதற் சமரை நெறிப்படுத்தத் தயாராகி நின்ற வேளையில்,

முகாமுக்கு உதவி கிடைத்தால், முற்றிலுமே கெடும் என ஏற்கனவே விரிசலாக எடுத்துரைத்து, தான் விளங்கப்படுத்தியதைத் தாக்குதலுக்கு முந்திய கடைசிச் சந்திப்பின்போதும் மீண்டும் ஒரு தரம் வலியுறுத்தி அவர் எச்சரித்தனுப்பியதைப் போலவே,

சண்டை தொடங்கிய ஒரு மணி நேரத்தில், உதவிக்கு விரைந்து 'டோறா'க்களை முல்லைக் கரையிலிருந்து 5 'கிலோமீற்றர்' தூரத்தில் வைத்து இடை மறித்தனர் புலிகள்!

ஆனால், முல்லைச்சமரின் கடல்வழித் தாக்குதல்களின் ஆரம்பம் அதுவல்ல.

அதற்கு முன்னதாகவே – திட்டவரைவின்படி படைத்தளத்தின் உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் பல முனைகளில் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட அதே சம தருணத்தில், கரையோரக் காவலரண் வரிசையை உடைத்தெறிந்து, ஊடறுத்து, வழியெடுத்து,

தரைத்தாக்குதல் அணியொன்றைக் கடல் வழியாக உள்ளே தரையிறக்கும் மயிர்க்கூச்செறியும் அதிரடி ஒன்றை கடற்புலிகள் நிகழ்த்தி முடித்திருந்தனர்.

முடிவில், இராணுவ வரலாற்றில் ஓர் அற்புதச் சாதனையைப் படைத்ததற்காக அவர்கட்கு மகுடத்தைச் சூட்டிவிட்டபோது, விடுதலைப் புலிகளின் தரைப் போர்ப் படை வீரர்கள் சந்தித்த மிகப் பெரிய பொருதுகளம் முல்லைத்தீவு அல்ல: துல்லியமான வேவு, நுட்பமான திட்டமிடல், கடுமையான பயிற்சி, நேர்த்தியான வழி நடத்தல் என்பன சமரை அவர்கட்குச் சுலபமானதாக ஆக்கிவிட்டன. ஆனால், விடுதலைப் புலிகளின் கடற்போர் வீரர்களுக்கு, தம் வரலாற்றில் அவர்கள் சந்தித்த நீண்ட – ஓய்வற்ற – கீர்த்திமிகு பெரும் போரரங்கு முல்லைத்தீவேதான்.

ஆனையிறவுச் சமரின் முடிவிற்கும், முல்லைத்தீவுச் சமரின் முடிவிற்கும் நேர் எதிர் வேறுபாடு.

கடலில் புலிகள் இல்லாததால், அன்று அப்படி நடந்தது: கடல் எங்கும் புலிகள் நிறைந்ததால் இன்று இப்படி நடந்தது.

காலத்தின் விளைவுகளாக, தமிழீழப் போரில் புதிய சுடுகலங்கள் அறிமுகமாகி, புலிகளின் சண்டைத் திறன் இன்னொரு கட்டத்திற்குப் பரிணமிக்கும் மாற்றங்களின் கருவிகளாக இயங்கிய அந்தப் பெரும் பணியில் மட்டுமின்றி, கடற்புலிகளைக் கடல் அரங்கில் பொருது களங்களைத் திறக்கச் செய்யும் ஒரு போராளியாகவும் மாற்ற வேண்டிய வரலாற்றுத் தேவை உணரப்பட்ட 5 ஆண்டுகளின் பின் இப்போது கதை இவ்விதமாக மாறிவிட்டது. 'பராக்கிரம" என்ற தலைமைக் கப்பலோடு 15ற்கு மேற்பட்ட கடற்கலங்களை எதிரி களத்தில் இறக்கி இருந்தான். 4 சங்காய் கலங்கள், அதிவேகத் தாக்குதற் படகுகளான 7 'டோறா'க்கள், 2 தரையிறங்கும் கலங்கள் என்பனவோடு 'பேபி டோறா' வகைச் சண்டைப்படகுகள் சிலவும் அந்தக்

கப்பற் தொகுதியில் களமாடின.

திருக்கோணமலைக் கடற்படைத் தளத்திலிருந்து சிங்களக் கடற்படையின் பிரதம தளபதி வைஸ் அட்மிரல் மொகான் சமரசேகர கண்காணிக்க, முல்லைத்தீவுக்கு மிக அருகே இருந்த புல்மோட்டைக் கடற்படைத் தளம், கடல் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக வழிநடாத்தியது.

உந்துவிசை விமானங்களான இஸ்ரேலிய 'கிபிர்' போரூர்திகளினதும், சோவியத்தின் 'எம். ஐ. 24' போர் உலங்குவானூர்திகளினதும் ஆர்ஜன்ரீனாவின் 'புக்காரா' தரைத்தாக்குதல் விண்ணூர்திகளினதும் உச்சப் பயன்பாட்டை எதிரி முல்லைக் களத்தில் பிரயோகித்தான். மீட்புக்குப் படைகள் தரையிறங்குவதற்குத் துணையாக தரையிறங்கும் கடலிலும் சண்டையிட்ட புலிகளின் இலக்குகளை, அவை குறிவைத்துத் தாக்கின. தரைச் சண்டைக் கலங்களைப் போல காப்புத் தடுப்புகளும், கவச அரண்களும், பதுங்கு அகழிகளும் கிடையாத – வெளித்து விரிந்த நீர்ப்பரப்பில் அரங்கேறும் கடற் சண்டைக் களத்தில் வான் படையின் துணையின்றி எதிரியை எதிர் கொள்வதென்பது, ஒரு கடற்படைக்கு மிக மிகக் கடினமானதாகும். விமானப் படையின் துணைவலு இணையவேண்டியது கடற் சமர்களின் வெற்றிக்கு இன்றியமையாதது. இந்தப் போரினது யதார்த்தம், உலகப் போர் வரலாறுகள் பகரும் நடைமுறை உண்மை. சிங்களக் கடற்படைக்கு அந்தப் பக்கபல வாய்ப்பு இருந்தது. ஆனால், எம் கடற்புலிகளோ–

சண்டைகளுக்காகவும், சண்டைப் பயன்பாடுகளுக்காகவும் என்றே வடிவமைக்கப்பட்ட கடற்போர்க் கலங்களில், தரம் மிக்க போராயுதங்கள் பொருத்தி – போர் விமானங்கள் புடைசூழப் பொருது களத்தைத் திறந்திருந்த பகைவனுடன் தனித்து நின்று வெறும் படகுகளில் எதிர்கொண்டனர்.



'ஓயாத அலைகளின் ஓய்வற்ற போர்க் களம் இடையறாது நீடித்து 2000 மீற்றருக்கு விரிந்திருந்த முகாமின் கடற்கரைப் பகுதியிலோ அல்லது முகாமின் வட எல்லைக்கு அப்பாலும் தென் எல்லைக்கு' அப்பாலும்

ஏறக்குறைய 5 'கிலோமீற்றர்' தூரத்துக்குள் ஏதோ ஒரு பகுதியிலோ, மீட்புப் படைகள் தரையிறக்கப்படலாம் என திட்டமிடலின் போது எதிர்பார்க்கப்பட்டது.

கடல்வழித் தரையிறக்கத்திற்கு எதிரி பல தடவைகள் எத்தனித்தான். 15 மணித்தியாலங்களாக பல வழிகளில் முயற்சித்தான்.

சண்டையரங்கை அகட்டி, தன் கலங்களைத் தூரத்துக்கொன்றாய்ப் பிரித்து, எம் படகுகளை தனித்தனியாகச் சண்டைக்கு இழுத்து, நீள இடைவெளிகளை ஏற்படுத்தி, அவற்றிற்கூடாகக் கரையை நெருங்க பகைவன் கையாண்ட கெட்டிக்காரத்தனமான தந்திரோபாயங்கள் எதுவும் அவனுக்குக் கைகொடுக்கவில்லை.

அவனெடுத்த பகீரதப் பிரயத்தனங்கள் எல்லாம் தோல்வியையே தழுவின. கரையிலிருந்து ஏறக்குறை 4 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் எதிரியைத் தடுத்தது புலிகளின் வியூகம். கடந்து வருவது அவனுக்குச் சாத்தியமற்ற காரியமாகவே இருந்தது. தரையிறக்கல் முயற்சி தடைப்படத் தடைப்பட, தன்னை நெருக்கடி சூழ்வதை எதிரித் தலைமை உணர்ந்தது.

தளத்தின் தொடர்புகள் அறுந்து, களத்தின் நிலைமைகள் புரியாமல், முகாமில் இருந்த தன்னுடைய 1407 ஆட்களின் உயிர்கள் மீதான 'கேள்விக்குறி' பூதாகரமாகி, அங்கிருந்த போராயுதங்கள் கைமாறினால் நிகழக்கூடிய விளைவுகளின் நினைவு பயங்கரமாகி, செய்வதறியாது குழம்பிய சூழ்நிலையிலும், ஏதாவது செய்தே ஆகவேண்டிய 'நிர்ப்பந்தத்துக்குள்' தள்ளப்பட்ட வேளையில்தான் சிங்களப் படைத் தலைமை அந்த முடிவை எடுத்தது.

அவசியமானதும் ஆனால் அபாயகரமானதும் – எனவே துணிகரமானதும் – அதனால் ஆச்சரியகரமானதுமான ஒரு வான் வழிக் 'கொமாண்டோ'த் தரையிறக்கத்துக்கு எதிரி முடிவெடுத்தான்.

18ம் திகதியின் மதியம் கழிந்துவிட்ட மணித்துளிகள். காற்று மண்டலத்தில்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முல்லைப் போரின் கடற்சமரும்....

ஏற்கெனவே பேரிரைச்சல் நிறைந்திருந்தது. ஏவுகணை எதிர்ப்புக் கருவிகளின் குண்டுகளை வெளிவிட்ட வண்ணம் 'கிபிர்'கள் விண்ணைக் கிழித்தன. அதே பாதுகாப்புக்கு மேலால் 'புக்காரா'க்களும் களத்தில் ஏறியிருந்தன. மணலாற்றின் 'பராக்கிரமபுர' முகாமிலிருந்த

முடித்துவிடலாம்" என்று ஒரு ஆலோசனையையும் அவர் சொன்னாராம். சொல்லியவர், 'முல்லைப் பட்டுன'விலும் சிங்கக் கொடி நாட்டும் ஆசையோடுமிருக்க, உலகம் அதிசயத்துக் காத்திருக்க, சிறிலங்கா ஆவலோடு நம்பியிருக்க, தமிழீழம்

**களத்தில் போரணிகளை வழிநடாத்திக் கொண்டிருந்த ஆற்றல் மிகு தளபதிகளுக்கு உடனுக்குடன் ஆலோசனைகளை வழங்கி, கள நிலைமைகளின் மாற்றங்க ளுக்கேற்ற விதமாக அறிவு றுத்தல்களைக் கொடுத்து, சமரரங்கைத் தொடர்ச்சியாக நெறிப்படுத்திச் சென்ற தலைவர் பிரபாகரனின் போருபாய வியூகங்களுக்குள் சிக்குப்பட்ட தால், இறுதியில், மீட்க அனுப்பிய படைகளையே மீட்டெடுக்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டார் ஜெனரல் அனுருத்த.**

நடுத்தூர 'ஆட்டிலறி'களின் 130 'மில்லி மீற்றர்' ஏவுகணைகளோடு இணைந்து, புலிகளின் கரையோரக் காப்பரண்களையும் சண்டைப் படகுகளையும் அவை ஒரே வேளையில் குறிவைத்தன. குண்டுகள் இலக்குகளைத் தொடத் தொடங்கிய அதே சம நேரத்தில் –

கரையிலிருந்து 4000 மீற்றர் தொலைவிலிருந்து, தளத்தின் தென் எல்லைக்கு ஏறக்குறைய 1500 மீற்றர் தூரத்திலுள்ள சிலாவத்தையின் கரையோரப் பகுதியை நோக்கி, மீட்புப் படைகள் புறப்பட்டன. கிடை வரிசையாக நான்கு 'டோரா'க்கள். அவற்றிலிருந்து சில 'மீற்றர்' உயரத்தில் மூன்று 'எம்.ஐ.24' போர் உலங்கு வானூர்திகள். இவற்றின் காப்புக்குப் பின்னால், தரையிறங்க வந்த உதவிப் படையினரைச் சுமந்த ஆறு 'எம்.ஐ.17' துருப்புக்காவி உலங்கு வானூர்திகள்.

குழல் வாய்கள் சிவக்க, சுடுகலன்கள் தீ உமிழ, குறிப்பிட்ட கரைப் பகுதியைக் குறிவைத்து மாரி மழையெனக் குண்டு மழை பொழிந்து – விரைந்து நெருங்கிய எதிரி, புலிகளின் காப்பு வியூகத்தை ஊடறுத்து நுழைந்தான்.

கடற்கரை மணற்பரப்பில், 250 'மீற்றர்' விட்டம் கொண்ட வட்ட வடிவில், 15 அடி உயரத்தில், 'எம்.ஐ.17'கள் சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருக்க, அவற்றிலிருந்து குதித்துக் குதித்து நிலையெடுத்த சிறப்புக் 'கொமாண்டோ'ப் படையினரைத் தரையிறக்கித் தம் பணியை வெற்றிகரமாக நிறைவு செய்த வான்படை, மிக வேகமாகத் திரும்பிச் சென்றது.

நடவடிக்கைக்கு எதிரி 'திரிவிட பஹர" என்று பெயர் சூட்டினான். 'மும்முனைத்தாக்குதல்' என்பது தமிழ் அர்த்தம். வானோடு, கடலோடு, தரையிலும் சண்டை ஆரம்பிக்கப்பட்டதால் பொருத்தமான பெயர். உதவிப் படையினர் தரையிறக்கப்பட்டுவிட்டனர் என்ற செய்தி, சிங்கள தேசத்தின் செவிகளில் தேனெனப் பாய்ந்தது! பெரிய எதிர்பார்ப்பு! 'யாப்பாபட்டுன'வை வென்ற ஜெனரல்களே களத்தில் இறக்கப்பட்டனர்! **அனுருத்த**வின் கண்காணிப்பின் கீழ் **றொகான் தளுவத்த** நெறிப்படுத்த, **ஜானக பெரேரா**வின் துணையோடு **சிறிலால் வீரசூரிய** வழிநடாத்தினார் என்று சொல்லப்படுகின்றது. ஆதலால், 'ரிவிரச'வைப் போல, 'திரிவிட பஹர'வும் புலிகளைப் பின்னுக்குத் தள்ளும் என்பதில் எவருக்குமே சந்தேகம் இருக்கவில்லை! ரத்வத்தவுக்கு அசையாத நம்பிக்கை. "முழுப் புலிகளும் முல்லைத்தீவில் குவிந்திருப்பதால், அங்கு வைத்தே அவர்களின் கதையை முழுமையாக

ஏக்கத்தோடு பார்த்திருக்க –

தொடர்ந்த கதையிலோ –

களத்தில் போரணிகளை வழிநடாத்திக் கொண்டிருந்த ஆற்றல் மிகு தளபதிகளுக்கு உடனுக்குடன் ஆலோசனைகளை வழங்கி, கள நிலைமைகளின் மாற்றங்களுக்கேற்ற விதமாக அறிவுறுத்தல்களைக் கொடுத்து, சமரரங்கைத் தொடர்ச்சியாக நெறிப்படுத்திச் சென்ற தலைவர் பிரபாகரனின் போருபாய வியூகங்களுக்குள்



கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட "ரணவிரு" அதிவேக பீரங்கி போர்க் கப்பல்

சிக்குப்பட்டதால், இறுதியில், மீட்க அனுப்பிய படைகளையே மீட்டெடுக்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டார் ஜெனரல் அனுருத்த.

குறுகிய ஒரு தொகைப் படையினரை அதிரடிப் பாணியில் தரையிறக்கிவிட்டால், தொடர்ந்து அதே வழி மூலம், தேவையான மேலதிக துருப்புக்களையும் தளபாடங்களையம் கடலூடாக அனுப்பி, மீட்பு அணியை வலுப்படுத்தி, முன்னேறுவதற்கு ஏற்றவாறு பலப்படுத்திவிட்டு முகாமை நோக்கி நகர வைப்பதே சிங்களத் தலைமையின் மூலோபாயம். திட்டத்தை 'திட்ட வடிவிலேயே' முடங்கச் செய்தனர் புலிகள்! உக்கிர சண்டை! தரையிறக்கப்பட்ட படைக்கு தலைநிமிர முடியாத அடி! கடற்கரை மணலைக் கிளறியெறிந்து பதுங்கிக் கொண்டனர் சிங்கள வீரர்கள்! முல்லை முகாமின் தொடர்ச்சியாக – எதிரிக்கு இழப்புக்களின் உறைவிடமாகியது சிலாவத்தை! கண்ணெதிரில் வீழும் சகாக்களின் சடலங்களும், காயப்பட்டுச் சுருண்டோரின் மரண ஓலங்களும் 'சிறப்புப் படை'யினரின் மனவுறுதியைச் சிதைத்தெறிந்தன! உதவிக்குப் போன படைக்கு உதவி தேவைப்பட்டது! ஆனால், அனுப்ப முடியவில்லை. அது முடியுமானால்,

மேலதிக படைகளை இறக்கித் திட்டத்தை நடைமுறைப்படுத்திப் பார்க்கலாமே? எதுவுமே இயலவில்லை. முனைந்தபோதெல்லாம் மூர்க்கமான எதிர்ப்பைத்தான் சந்திக்க வேண்டியிருந்தது.

கப்பல்கள் கரையை நெருங்க முடியவில்லை. வெடி சுமந்த படகுகள் பொடியாக்க அலைந்தன. மீறிச் சென்றாலும் கரையில் நிமிடங்களுக்கும் தரிக்க முடியாது. 120 மில்லி மீற்றர் மோட்டார் குழல் வாய்கள் பொறி கக்கக் காத்திருந்தன.

உதவிக்குப் போன படை உபத்திரவமானதாய் மாறியதால், 'திரிவிட பஹர'வைத் தொடங்கிய சிங்களம் 'திரிசங்கு' நிலையில் திகைத்து நின்றது.

'ரணவிரு' – சீனாக்காரன் கொடுத்த பீரங்கிக் கப்பல், 'சங்காய் – 3' வகையைச் சேர்ந்தது.

சிங்களக் கடற்படையில் அதன் தொடர் இலக்கம் 'பி–321' 'ரணசுறு'வுக்கும் 'சூரையா'வுக்கும் அது சகோதர முறை.

5.4 மீற்றர் அகலத்தில் 41 மீற்றர் நீண்டிருந்த ஒரு போராயுத மேடை அது.

12.7 மில்லி மீற்றர் ':.விவ்ரி கலிபர்' துப்பாக்கிகள் 2, 14.5 மில்லி மீற்றர் இரட்டைக் குழல் கனரகத் துப்பாக்கிகள் 2, 37 மில்லி மீற்றர் இரட்டைக் குழல் கனரகச் சுடுகலன்கள் 2, 40 மில்லி மீற்றர் தொடர் தன்னியக்க எறிகணை செலுத்தி 1 என்பனவோடு, குறைந்தது 30 படை வீரர்கள் வைத்திருந்த ஏனைய வகைச் சுடுகருவிகளும் அந்தப் பீரங்கிக் கப்பலின் ஆயுத வலிமை.

**19ம் திகதி மாலை 4.30 மணி.**

கடற்கரையிலிருந்து 2 கடல் மைல் தூரம். 'ரணவிரு'

வெடிகுண்டுப் படகு! அதில் **கண்ணபிரானும், பார்த்திபனும்.** சுடுகலன்களை நீட்டிக் குறிவைத்துத் தாக்கினான் பகைவன். கப்பலில் மோத ஐந்து மீற்றர்களே இடைவெளி இருக்கும்போது, இதோ இடித்துவிட்டது என எல்லாரும் எதிர்பார்த்தவேளை, குண்டு மழையில் தோய்ந்து வெடித்துச் சிதறியது படகு! துயரம்! ஆனாலும், சண்டையில் இது தவிர்க்க முடியாததுதான். வெடியதிர்வில் ஆடிப்போனான் பகைவன்.

எதிரி திகைத்து நின்ற வேளையில், **மிதுபாலனதும் இன்னிசையினதும்** படகு கப்பலுக்கு மறுகரையால் நெருங்கி நொருங்க இடித்தது! ஆனால், அடுத்த துரதிஸ்டம்........ குண்டு வெடிக்கவில்லை! எம் படகுதான் முன்பக்கத்தால் உடைந்து போனது. நீர் உட்புக ஆரம்பித்தது. இன்னிசையும் சன்னம் பாய்ந்து காயப்பட்டுவிட்டாள். குண்டு வெடிக்காததன் காரணம் புரியவில்லை! மிதுபாலன் தளரவில்லை – நிதானம் இழக்கவில்லை. படகைப் பின்னுக்குச் செலுத்தி, கணிசமான தூரத்தில் வைத்து, மீண்டும் முன்னோக்கி முயற்சித்து, விசைகூட்டி மூர்க்கமாய் மோதினான். உடைந்துவிட்ட அணியம் மேலும் உடைந்து போனதேயன்றி, குண்டு வெடிக்கவேயில்லை. தயாரிப்பின்போது ஏற்பட்டிருக்கக்கூடிய தொழில்நுட்பக் கோளாறினால் பிசகிவிட்டது. நீர் புகுந்து கொண்டிருந்த படகை, வெகு சிரமத்தோடு பாதுகாப்பாகப் பின்னுக்கு எடுத்தான் அந்த வீரன். அதே சம தருணத்தில், கப்பலின் பின்பக்கமாக வளைந்து, கப்பலின் இயந்திரப் பகுதியை இலக்கு வைத்தது அடுத்த குண்டுப் படகு! அதில் **செல்லப்பிள்ளையோடு சுடரொளி.** அதிர்ஸ்டம் இம்முறை மாற்றானைக் கைவிட்டுவிட்டது! வழுவாத அடி. இயந்திரப் பகுதி நொருங்கி, சுய கட்டுப்பாட்டை இழந்து, நடுக்கடலில் சுழன்று கொண்டிருந்த 'ரணவிரு'வை நேரெதிராய்ச் சந்தித்து முகத்திலே இடித்தான் **பதுமன்!** அந்தோ பரிதாபம்........!

ஏவுகணை தாக்குமென்று அஞ்சிய விமானங்கள் எட்டாததொலைவில் செய்வதறியாது அந்தரித்து நிற்க, உதவிக்கு வருகிறது கப்பல் என அவாவோடு காத்திருந்த 'சிறப்புப் படை'யினர் ஏக்க விழிகளால் பார்த்திருக்க, மூழ்கிக் கொண்டிருந்த கப்பலைச் சுற்றி வலம் வந்து முழங்கிய கடற்புலி வீரர்களின் துப்பாக்கிகள், சிங்களச் சிப்பாய்களின் தலைகளைக் குறிவைத்தன! **'பண்டார வன்னியனின் கடல்"** சிலிர்த்தது!

'ஓயாத அலைகளி'ன் ஆக்ரோசத்திற்குள் சிக்கித் திணறியது சிங்களம். முகாம் கையிலில்லை. முகாமுக்குப் போனவர்களும் கைபிரியும் நிலை! இருந்தவர்களை அழித்தது ஒரு கதை.

## 'ஓயாத அலைகள்' ஒரு முடிந்த கதையல்ல, புதிய கதையின் தொடக்கமே.

குறிவைக்கப்படுகின்றது.

போராயுதங்களின் சுடுதிறனால் கப்பலைச் சுற்றி எதிரி போட்டிருந்த தடுப்புச் சுவரை உடைத்து நுழைந்தனர் கடற்புலிகள். பாதுகாப்புக்குச் சுற்றிக் கொண்டிருந்த – 'றொக்கற் மோட்டார்'கள் பொருத்தப்பட்ட – உலங்கு வானூர்திகள் விண்ணுக்குயர்ந்தன. சூழ்ந்து நெருங்கிய எம் சண்டைக் கலங்களது ஆவேசத் தாக்குதலில், எதிரியின் சைனியங்கள் தோற்றன.

உச்ச விசையில் அண்மித்தது

வந்தவர்களுக்கு அடித்தது இன்னொரு கதை! முல்லைத் தளத்தில் கிரீடத்தைச் சூடினர் புலிகள். இராணுவ வல்லுநர்கள் அதிசயித்தனர். அரசியல் நோக்கர்கள் ஆச்சரியப்பட்டனர். "புலிக்கு எப்படி அடிப்பதென்று எனக்குத் தெரியும்" என அன்றொரு நாள் திமிர்க் கதை பேசிய ரத்வத்த, 'புலி எப்படி அடித்ததென்று' புரியாத கையறு நிலையில் கலங்கினார்.

நடக்காதவைகளை நடந்தவையாகவும்

தொடர்ச்சி 13ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாயகத்தில் எமது மக்கள் படும் அவலங்களைச் சர்வதேச சமூகத்தின் மத்தியில் வெளிப்படுத்தி, சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடன் சர்வதேச தமிழர் சம்மேளனம் பிரகடனப்படுத்தியுள்ள அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம் (30 -10.1996 - 05 - 11 - 1996) தொடர்பான அறிக்கையே இங்கு மறுபதிப்பு செய்யப்படுகின்றது.

## சர்வதேச தமிழர் சம்மேளனம்
## INTERNATIONAL FEDERATION OF TAMILS

**'மறந்ததோ வையம் மறத்தமிழ் இனத்தை'**

# அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம்
## 30.10.1996 - 05.11.1996

### சர்வதேச தமிழர் சம்மேளன பிரகடனம்:

மனித குல வரலாற்றில் ஒரு மாபெரும் மனித அவலம், சிறிலங்காவின் சிங்கள பௌத்த மேலாதிக்க அரச இயந்திரத்தின், தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளால் நிகழ்ந்து வருகின்றது. உலகின் தொலைக்காட்சிகளிலோ அல்லது ஏனைய தகவல் தொடர்புச் சாதனங்களிலோ பெரியளவில் இடம்பிடித்து விடாத இம் மனித அவலம், உலகில் பிரசித்தமாகக் குறிப்பிடப்பட்ட, குறிப்பிடப்பட்டு வருகின்ற ஏனைய அவலங்களுடன் ஒப்பிடுகையில் குறைத்து மதிப்பிடக் கூடிய ஒன்றல்ல.

'யுத்தம் மூலம் சமாதானம்" எனும் தந்திரமான கோஷத்துடன், தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தினை சந்திரிகா அரசு என்று ஆரம்பித்ததோ அன்று முதல் மக்களின் வாழ்வில் முன்னைய காலங்களைவிட சொல்லொணாத் துயரங்கள் சுமத்தப்பட்டன. "சூரியக்கதிர்" இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் சிங்களப் படைகள் யாழ்குடாநாட்டைத் துவம்சம் செய்த போது 30-10-95 அன்று தமது உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள மக்கள் மேற்கொண்ட மாபெரும் இடம்பெயர்வு மனித வரலாற்றில் உலகம் கண்ட இடம்பெயர்வில் அவலம் நிறைந்ததாக இருந்தது. சிங்கள அரசு மேற்கொண்டிருந்த செய்தித் தணிக்கையும் செய்தியாளர்களுக்கு யுத்தமுனையில் நின்று செய்திகளைச் சேகரிக்க விதிக்கப்பட்டிருந்த தடையுமாய்ச் சேர்ந்து சர்வதேச உலகம் குரல் எழுப்பாதவாறு அவ் அவலம் மறைக்கப்பட்டது. ஒரு செய்தியாளர் குறிப்பிட்டதைப் போல, எவருமேயற்ற காட்டுக்குள் முறிந்து வீழ்ந்த மரத்தின் கதையினை எவருமேயறிந்து விடாதது போல, இம்மாபெரும் மக்கள் இடம்பெயர்வின் போது மக்களுக்கு ஏற்பட்ட அவலத்தினை சர்வதேச உலகம் புரிந்து கொள்ளமுடியாதவாறு எல்லாம் மறைக்கப்பட்டாயிற்று.

யுத்த பிரதேசங்களில், தமது உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள இடம்பெயரும் மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்வது ஒரு அரசுக்குரிய கடமை மட்டுமல்லாமல், சர்வதேச சமூகத்தின் கடமையாகவும் கருதப்படும் காலம் இது. அதற்காக பல சர்வதேச அமைப்புக்களே உருவாக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும், தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான அடிப்படைவசதிகள் திட்டமிட்ட முறையில் சிறிலங்கா அரசால் மறுக்கப்பட்டன. இவ்வாறு மறுக்கப்பட்டது மட்டுமன்றி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியான மனிதாபிமான உதவிகளை வழங்கும்படி ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி அவர்கள் விடுத்த அழைப்பினையும் "பக்கசார்பானது" எனக்கூறி சிறிலங்கா அரசு மறுதலித்தது. இதனூடாக மக்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகள் நேரடியாக மக்களைச் சென்றடைவதினைத் தடுத்தது. உணவு, மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விநியோகத்தினை தானே தக்கவைத்துக் கொண்டது. இவ்வாறு மக்களுக்கு தேவையான வசதிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்து, அவற்றை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி தமிழ் மக்களின் அரசியல் பணிவைத் தனக்குச் சாதகமாக பெற்றுக்கொள்ளும் ஒரு முயற்சியில் அரசு இறங்கியது.

மாபெரும் இடம்பெயர்வின்போது, வலிகாமத்தினை விட்டு இடம்பெயர்ந்த மக்களில் ஏறத்தாழ மூன்று இலட்சம் பேர் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்தனர். அதன்பின் சூரியக்கதிர் 2,3 இராணுவ நடவடிக்கைகளின் போது, மக்கள் இடம்பெயராதவாறு தடைகளைப் போட்டு, கணிசமான மக்களை இராணுவம் தனது பிடியினுள் சிக்கவைத்துக் கொண்டது. இருந்தபோதும் 31-07-96 அன்று யாழ்ப்பாண அரசாங்க அதிபர் விடுத்த புள்ளிவிபர அறிக்கையின்படி, யாழ்குடாநாட்டிலிருந்து மொத்தமாக 315,569 மக்கள் வன்னிப்பகுதிக்கு இடம்பெயர்ந்திருக்கின்றனர்.

வன்னிப் பகுதியில் தஞ்சமடைந்த மக்களையும், ஏற்கனவே வன்னிப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்களையும் இராணுவ நடவடிக்கைகள் என்ற பெயரில் மீண்டும் வாட்டி வதைக்கத் தொடங்கியது சிறிலங்கா அரசு. "சத்ஜய" இராணுவ நடவடிக்கைகள் என்ற பெயரில், கிளிநொச்சிப் பகுதியில் மக்களின் வாழ்விடங்களை நோக்கி மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதல்களும் எறிகணை வீச்சுக்களும் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை மீண்டும் தமது வாழ்விடங்களை விட்டு விரட்டியடித்தது. அவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட மக்கள் காடுகளிலும் தெருவோரங்களிலும் உணவின்றி, உரிய மருத்துவ வசதியின்றி, குடிக்க சுத்தமான நீருமின்றி அலைந்து திரிந்துகொண்டிருக்கின்றார்கள். இவர்களின் துயரங்களை சர்வதேச அரங்கில் வெளிவராதவாறு மறைத்துவிடும் சிறிலங்கா அரசு, மக்களின் தேவைக்கு மிகமிகக் குறைவான விநியோகங்களையே செய்தவாறு, தாம் மக்களுக்குத் தேவையானவற்றை அனுப்பிக்கொண்டிருப்பதாகக் கூறிக்கொண்டிருக்கின்றது. இதன்மூலம் மக்களின் அவலக்குரல் அனைத்துலகத்தின் கண்களைத் திறக்காதவாறு கவனித்துக்கொள்கின்றது சிறிலங்கா அரசு.

இதேவேளை, யாழ் குடாநாட்டிலும், கிழக்கு மாகாணத்திலும் இராணுவக்கட்டுப்பாட்டு பகுதியில் இராணுவத்தின் கொடுமைகள் அதிகரித்து வருகின்றன. இளவயது ஆண்களும் பெண்களும் கைதுசெய்யப்படுவது, காணாமல்போவது அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. இவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதனை அறிய முடியாமல் பெற்றோர்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இளம் பெண்கள் மீதான பாலியல் வன்முறையும், வல்லுறவும் அதிகரித்து வருகின்றது. பெண்கள் இராணுவத்தினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டு வீசப்படுவது சாதாரண நிகழ்வாகி வருகின்றது. மோட்டார் சைக்கிளில் திரியும் இராணுவத்தினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து மக்களைக் கொன்று வருகின்றனர். மக்கள் மிகுந்த அச்சத்தின் மத்தியில் தமது வாழ்வினை ஓட்டிக்கொண்டிருக்கின்றனர். ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலைக் கைதிகள் போல எமது மக்கள் நடாத்தப்படுகின்றனர்.

இருந்தபோதும், எமது மக்களின் இத்தகைய அவலங்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்தினை போதியளவு ஈர்த்ததாக இல்லை. அரசு, செய்தியாளர்களுக்கு விதித்துள்ள தடையும், பொய்ப் பிரச்சாரமும், ஏமாற்றுத்தனமும் உண்மைகள் வெளிவருவதினைத் தாமதப்படுத்தியும் தடுத்தும் வருகின்றன. எமது மக்களுக்கு சென்றடைய வேண்டிய சர்வதேச மனிதாபிமான உதவிகளும் சென்றடைந்ததாய் இல்லை.

இச்சூழலில், எமது மக்களின் அவலத்தினை சர்வதேச மயப்படுத்துவது உலகத்தமிழ் மக்களின் தார்மீகக்கடமையாக உள்ளது. அக்கடமையனை உலகத்தமிழர் யாவரும் ஒருமித்துச் செய்யவேண்டியவர்களாக உள்ளோம். இதற்காக, ஈழத்தமிழ் மக்கள் வரலாற்றில் மாபெரும் இடம்பெயர்வு நடந்த (30-10-1995) தினத்தின் ஓராண்டு நினைவு தினமான 30-10-1996 முதல் 5-11-1996 வரையிலான 7 நாட்களுக்கு அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம் ஒன்றினைப் பிரகடனப்படுத்துகின்றோம். இக்காலப்பகுதியினை எமது மக்களின் துயர்கூறும் காலமாகக் கருதி, சர்வதேச சமூகத்தின் மத்தியில் எமது மக்களின் அவலங்களை வெளிப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச தமிழர் சம்மேளனம் உலகத்தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. இக்காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்படும் கவன ஈர்ப்பு நடவடிக்கைகளின் ஊடாக பின்வரும் கோரிக்கைகளை நாம் சர்வதேச சமூகத்திற்கு முன்வைப்போம்.

1) சிறிலங்கா அரசு, உணவினை போர் ஆயுதமாகப் பயன்படுத்துவதால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகள், நேரடியாக மக்களைச் சென்றடைவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிந்து வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நேரடி உதவிகளைப் புரியுமாறும் கோருகிறோம்.

2) சர்வதேச சட்டங்களையும் ஐக்கிய நாடுகள் பிரகடனங்களையும் சிறிலங்கா அரசு தொடர்ச்சியாகவும் பகிரங்கமாகவும் மீறி வருவதே, ஈழத்தமிழ்மக்களின் அவலத்திற்கு காரணமாக இருப்பதினால், சிறிலங்கா அரசின் சர்வதேச சட்டமீறல்களைக் கண்டித்து, தடுத்து நிறுத்துமாறும் கோருகிறோம்.

3) சர்வதேச நாடுகளின் மத்தியில் இருந்து சிறிலங்கா அரசு பெற்றுவரும் நிதி மற்றும் கடனுதவிகள், சிறிலங்கா அரசு மக்கள் மீதான யுத்தத்தினை மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமைவதனால், அவ்வுதவிகளை சர்வதேச நாடுகள் நிறுத்தவேண்டும் எனக்கோருகிறோம்.

4) சிறிலங்கா அரசுக்கு ஆயுத தளபாடங்களை விற்று இராணுவ உதவி நல்கி மக்களின் துன்பத்திற்கும் துயரத்திற்கும் வழிகோலாமல் சிறிலங்கா அரசிற்கு வழங்கப்படும் ஆயுத உதவி, இராணுவ உதவி போன்றவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனக் கோருகின்றோம்.

5) ஐரோப்பிய மனித உரிமைச் சட்டச் சஞ்சிகையின் (நுரசழிநயெ ர்ரஅயெ சுபைாவள சுநஎைநற ளுநிவநஅடிநச 1996) புள்ளிவிபரப்படி 11,484 பேர் காணாமல் போனதாகப் பதிவாகி, உலகிலேயே காணாமல் போவோர் பட்டியலில் இரண்டாவது இடத்தினை வகிக்கும் சிறிலங்கா அரசு சர்வதேச சட்டங்களையும், ஜனநாயக உரிமைகளையும் தொடர்ந்து மீறி வருவதனால் அதன் மீது தடைகளை விதிக்கவேண்டும் எனக் கோருகிறோம்.

**சர்வதேச தமிழர் சம்மேளனம்.**

# நியூட்டனின் விதியும் விடுதலைப்போராட்டமும்

**உலகின் கண்களுக்கு முன் மாபெரும் மனித அவலம் ஒன்று அரங்கேறி வருகின்றது. வரலாற்று ஆய்வாளர்கள் மற்றும் மனிதஆர்வலர்கள், மனித உரிமை அமைப்புகள், இம் மனித அவலத்தை எவ்வாறு சித்தரிக்கப்போகின்றார்ளோ தெரியவில்லை. ஆனால் தமிழனாய்ப் பிறந்து விட்டதனால் துன்பத்தையே சுமந்து கொண்டு சதா அலைந்து திரிந்து வேதனைகளிலும், துன்பத்திலும் தன்னை மாய்த்துக் கொள்வதுதான் தமிழனின் தலைவிதியா?**

வீ.மணிவண்ணன் - தமிழீழம்

முல்லைத்தீவில் ஏற்பட்ட தோல்வியைப் பழிவாங்கும் முகமாக சிறிலங்காப் படையினரது 'சத்ஜெய' ராணுவ நடவடிக்கையினால் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான தமிழ்மக்கள் இடம்பெயர்ந்து இருக்க இடமும் இன்றி தெருவோரங்களிலும், காடுகளிலும் எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றி அலைந்து திரிவது உலகின் கண்களுக்கு தெரியவில்லையா? இருக்க இடமில்லை, உணவில்லை, மருத்துவ வசதியில்லை, சுத்தமான குடிநீருக்குத் தட்டுப்பாடு என்று மனித வாழ்விற்கு இன்று மாபெரும் அவலம் இங்கு நிலவுகின்றது. இன்று இடம் பெயர்ந்திருக்கும் மக்கள் பலருக்கு இது முதல் அனுபவமும் அல்ல. தீவகத்தில் இருந்தும் வலிகாமத்தில் இருந்தும் தென்மராட்சியிலிருந்தும் தற்போது கிளிநொச்சியிலிருந்தும், இடம் பெயர்ந்தவர்கள் அனேகர். இவர்கள் எங்கே தாம் போவது எவ்வளவு காலத்திற்கு இப்படி ஓடுவது என்று எழுப்பும் வினாக்களுக்கு விடை தெரியாமலே அவர்களின் இடம் பெயர் வாழ்வும் அவலங்களும் தொடர்கின்றன.

"தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தினையே அழித்திடுவோம்."" என்றான் பாரதி. இங்கோ 2 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு உணவு இல்லை. எந்த உலகத்தை நாம் அழித்திடுவோம்? வன்னி வள நாட்டின் விவசாயப் பிரதேசங்களின் ஊடாகவே சிங்களப் படையெடுப்பு நடை பெறுகின்றது. முன்பு குடாநாட்டுப் படையெடுப்பின் போது ஆயிரக்கணக்கான விவசாய நிலங்களை அழித்து எதிரி முன்னேறினான். உணவு ஒரு ஆயுதமாக சிங்களப்படையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.



இன்னும் பொருளாதாரத் தடை, மீன்பிடித்தடை, விவசாயத்தடை என தமிழர் வாழ்வதற்கு அடுக்கடுக்கான தடைகள். வாழ்வா? சாவா? என்று தமிழன் தடுமாறிக் கொண்டிருக்கிறான்.

இந்த நிலையில் பாரதி பிறந்த மண்ணில் உருப்படியான, சிங்களத்தை எச்சரிக்கும் குரல்கள் கொதித்தெழுந்தனவா? மனிதாபிமானம், மனித உரிமைகள் என்று வாய்விரியப் பேசும் அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் வாய்திறந்தனவா? சந்திரிகாவின் முந்தானையிலிருந்து தீர்வுப் பொதியை எட்டிப் பார்க்கத் துடிக்கும் தமிழ் குழுக்கள் எங்கே? மன்னிப்பு சபை என்றும் மனிதாபிமான அமைப்புக்கள் என்றும் உலகம் முழுவதும் பறைசாற்றுபவர்கள் எங்கே? இவர்களைத் தமிழர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அகதியாக இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் தங்களுக்கு யாரேனும் ஆறுதல் சொல்ல மாட்டார்களா? அனுதாபம் தெரிவிக்கமாட்டார்களா? என்று ஏங்குகிறார்கள். உதவி வேண்டிக் கரம் நீட்டுகிறார்கள். யாரும் உதவமாட்டார்களா என்று அல்லலுறுகின்றார்கள். தமிழன் தலைவிதியை நினைத்து நொந்து கொண்டிருக்கின்றான். அலைந்து திரிவதும் அழிந்து கொண்டிருப்பதும் தான் வாழ்க்கையா? மனித வாழ்வின் மாபெரும் அவலம் எனும் இந்த நாடகம் தற்போது வன்னியில் அரங்கேறி வருகின்றது. தமிழன் தனது உரிமைக்காகப் போராட வேண்டிய நிலையில் உள்ளான். ஆனால் சிங்களம் தனது பேரினவாதத்திற்காக தமிழனை அழிக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றது. இந்த நிலையில் நாம் என்ன செய்வது? அழிந்து போவதுதான் தீர்வா?

யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரிடம் தோல்வி அடைந்ததில் இருந்து தமிழர்களது அடிமை வாழ்வும் அவலமும் ஆரம்பமானது. சிங்களத்தின் ஆட்சியில் இது உச்ச நிலையை அடைந்தது. பாரம்பரிய நிலப்பறிப்பு, பண்பாட்டு அழிப்பு, இனப்படுகொலை போன்ற சகல வழிகளிலும் தமிழர்கள் ஒடுக்கப்பட்டார்கள். அழிவுகளையும் இன்னல்களையும் தமிழர்கள் மட்டும்தான் அனுபவித்தார்கள். அவர்கள் இதனை சிங்களப் பேரினவாதத்திற்கு உணர்த்துவதில்லை. எந்த ஒரு தாக்கத்துக்கும் சமனானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு என சேர் ஐசக் நியூட்டன் எனும் மாபெரும் விஞ்ஞானி தனது புவியீர்க்கத் தத்துவத்தில் ஒரு விதியாகக் குறிப்பிட்டுள்ளார். மரத்தில் இருந்து ஒரு பழம் தானாக விழும் போது அது நிலத்தில் வந்து அடிபடுகின்றது. நிலத்திற்கும் தாக்கம் பழத்திற்கும் தாக்கம். நாம் எமது அன்றாட வாழ்வில் விறகு கொத்தினாலும் சரி, மேளமடித்தாலும் சரி எமது ஒவ்வொரு செயலுக்கும், நாம் கொடுக்கும் ஒவ்வொரு விசைக்கும் எதிர் விசை எம்மைத் தாக்குவதை நாம் உணரக் கூடியதாக இருக்கிறது. எமது சாதாரண செயலுக்கே பதில் தாக்கம் கிடைக்கும் என்றால் மனித வாழ்வில் ஏற்படும் மாபெரும் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் பதில் தாக்கம் கிடைக்காதா? இந்த விதியானது சடப்பொருள்களுக்கு மட்டுமல்ல மனித வாழ்வியக்கத்துக்குமே அடிப்படையானது. இதுதான் சிங்களவர்களுக்கு விளங்கக் கூடிய ஒரேயொரு மொழியாகும். தமிழர் வாழ்வதற்குப் போராடுவதுதான் ஒரேயொரு வழி என்று போராடக் கற்றுக் கொடுத்தவர் மாமனிதர் தலைவர் பிரபாகரன் அவர்களே - "அவலத்தைத் தந்தவர்க்கு அதனைத் திருப்பிக் கொடு" என்றார். நியூட்டனது இயக்கச் செயல் விதியும் தலைவரது போராட்ட விதியும் எவ்வாறு பொருந்தி வருகின்றது என்பதை இங்கு கவனிக்க வேண்டும். விடுதலைப் போராட்டத்தில் நியூட்டனது விதியானது எவ்வாறு செயல்படுகின்றது என்பதை பார்க்கின், தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசு தொடுத்துள்ள யுத்தமானது அதன் பொருளாதாரத்தையே ஆட்டம் காண வைத்துள்ளது.

**தற்கால உலகில் மனித வாழ்வின் மாபெரும் அவலம் தற்போது ஈழத்தின் வன்னியில் அரங்கேறி வருகின்றது. தமிழன் தனது உரிமைக்காகப் போராட வேண்டிய நிலையில் உள்ளான். ஆனால் சிங்களம் தனது பேரினவாதத்திற்காக தமிழனை அழிக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றது. இந்த நிலையில் நாம் என்ன செய்வது? அழிந்து போவதுதான் தீர்வா?**

உலகில் மிக வறிய நாடாகவும் உதவி பெறும் நாடாகவும் சிறிலங்கா விளங்குகின்றது. முதலீட்டாளர்களும் உல்லாசப் பிரயாணிகளும் வர அஞ்சும் நாடாக அது விளங்குகின்றது. பல கோடிப் பணத்தை விளம்பரத்தில் செலவிட்டு "இந்து சமுத்திரத்தின் சொர்க்கம்" எனும் பழைய பெயரை எடுக்க துடியாய்த் துடிக்கின்றது. மேலும் சாதாரண சிங்கள மக்கள் மீது இந்த யுத்தம் எவ்வாறு நிதிச் சுமையினை சுமத்தியது என்று பார்ப்போம்.

விலைவாசியுயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அத்தியாவசிய பொதுநல சேவைகளின் பற்றாக்குறை, பாதுகாப்பின்மை ஒரு புறமாகவும், தென்னிலங்கைக்கு யுத்தத்தைக் கொண்டு வந்த சந்திரிகாவின் புத்திசாலித்தனத்தினால் பாதுகாப்புக் கெடுபிடிகள், போக்குவரத்துக் கெடுபிடிகள், அகதி வாழ்க்கை, பாதுகாப்புக் காரணங்களுக்காக நீர்த் தேக்கங்களைத் திறந்து விட்டதனால் மின்சாரத் தட்டுப்பாடு, பாதுகாப்புச் செலவை ஈடுசெய்வதற்காக அரச நிறுவனங்களை விற்க முன்வந்ததால் ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள் என்பவை சிங்கள மக்கள் மீது திணிக்கப்பட்டவை. அத்துடன் தமிழர்களை அழிப்பதற்காக உருவாக்கப்பட்ட சிங்கள இராணுவமானது இன்று ஊதிப் பெருத்து ஆயிரக்கணக்கான கோடிப் பணத்தை ஏப்பம் விடும் மகாசுரனாக மாறிவிட்டது. இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களே இன்று தென்னிலங்கையில் சமூக விரோதச்செயல்களில் ஈடுபடும் முன்னிலைக் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றனர். மேலும் போரில் கொல்லப்படும் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர்களினதும், காயமடைந்து அங்கவீனமாகும் படைகளின் பாரத்தை யார் சுமப்பது? ஆயிரக்கணக்கான சிங்கள விதவைகளை உருவாக்கியது யார்? ஆரம்பத்தில் ஏழைக் கிராமப்புறத்து சிங்களவர்கள் இழப்புக்களை சந்தித்தார்கள். ஆனால் கடற்படை, விமானப்படை மீதான தாக்குதல்கள் அதிகரித்ததை அடுத்து இந்த யோகம் சிங்கள மேட்டுக் குடிகளுக்கும் சொந்தமானது. மொத்தத்தில் சிங்களப் பேரினவாதம் திணித்த யுத்தம் சிங்களவர்களைப் பலிக்கடாக்கியுள்ளது.

இன்று தமிழர்களை அகதியாக்க வேண்டுமென்று சிங்களம் வெறியோடு செயற்படும் போதெல்லாம், தமிழர் தாயகப் பகுதிகளில் குடியேறிய சிங்களவர்களும்

தொடர்ச்சி 11ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நியூட்டனின் விதியும் .....

சேர்ந்து அகதிகளாகுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவர்கள் யார்? தமிழர்களது தாயகக் கோட்பாட்டை சிதைப்பதற்காகவும், இலங்கையில் வடக்கு கிழக்கை துண்டாடுவதற்காகவும் சிறிலங்கா அரசினால் திட்டமிடப்பட்டு குடியமர்த்தப்படும் சிங்களக் குடியேற்றவாசிகள். இவர்கள் ஆயுதபாணிகள். இவர்கள் தமிழர்களுக்கு எதிரான போரைச் செய்யவும் முக்கிய பாத்திரம் வகிப்பவர்கள். தமிழர்கள் நிலங்களை பலாத்காரமாக பறித்து அதில்

படையினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தமிழினத்தை அழித்துக் கொண்டிருப்பவர்களுக்கு ராணுவப்பயிற்சி வழங்குவதா? அல்லது அழிந்துகொண்டிருக்கும் தமிழனுக்கு ஆதரவுக்கரம் நீட்டுவதா தர்மம் என்று உலக நாடுகள் சிந்திக்கவேண்டும். அன்று எம்பிலிப்பிட்டி பாடசாலை மாணவர் படுகொலை, சூரியகந்த மனித புதைகுழி இன்னும் ஜே.வி.பி கால டயர் மாலை கதாநாயகர்கள் யாவரும் இன்ற யாழ்ப்பாணத்தில்தான் இருக்கிறார்கள்.

சிதறினாள். குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்கள் எட்டுப்பேர் மட்டுமே. 32 பேர்கள் மட்டுமே காயமடைந்தோர்கள் என்றனர் யாழ் மருத்துவமனையாளர்கள். அப்படியாயின் ஏனைய கொல்லப்பட்ட காயமடைந்தவர்கள் யார் என்ற வினா எழுகின்றது? அவை அமைச்சரின் பரிவாரங்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டனவாகும். மனிதக்குண்டு உடனடியாக பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு கண்டனத்துக்குள்ளாக்கப்பட்டது.

**எந்த ஒரு தாக்கத்துக்கும் சமனானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு என்றார் சேர் ஐசக் நியூட்டன் எனும் மாபெரும் விஞ்ஞானி. தமிழர் வாழ போராடுவதுதான் ஒரேயொரு வழி என்று போராடக் கற்றுக் கொடுத்த மாமனிதர் தலைவர் பிரபாகரன் அவர்கள் - "அவலத்தைத் தந்தவர்க்கு அதனைத் திருப்பிக் கொடு" என்றார்.**

குடியமர்ந்து இராணுவத்துடன் சேர்ந்து தமிழர்களை அழிப்பவர்கள். ஆனாலும் இவர்கள் அகதிகள் ஆகும் போது உலகப் பத்திரிகைகளும் சிங்களப் பத்திரிகைகளும் பக்கம்பக்கமாக எழுதியும் படம் பிடித்தும் போடும்போது அப்புகாமி வேட்டைத் துப்பாக்கியையும் கத்தியையும் எறிந்துவிட்டு படங்களுக்குப் போஸ் கொடுப்பார். நிவாரண அமைப்புக்கள் பொருட்களைக் கொண்டு வந்து கொடுக்கும். மனித உரிமை அமைப்புக்கள் வாய் கிழியச் கத்தும். தங்களைத் தாங்களே புத்திஜீவிகள் என்று அழைத்துக் கொண்டும் முட்டாள்தமிழர்கள் காட்டுமிராண்டித்தனம் என்பார்கள். சந்திரிகாவின் முந்தானைக்குள் ஒளிந்து கொண்டு இருக்கும் ரோசமில்லாத தமிழ்க் குழுக்கள் பாசிசம் என்பார்கள். இதெல்லாம் நடந்த விடயங்கள். ஆனால் அகதியாக அனாதரவாக அலைந்து கொண்டிருக்கும்

சிங்களவர்களையே இரக்கமின்றி கொன்றவர்கள் தமிழர்களை விட்டு வைப்பார்களா? அதற்கு பயிற்சி கொடுக்கலாமா? தமிழர் தாயகத்தின் சின்னமாகவும் தமிழர் பண்பாட்டின் அடையாளமாகவும் ஆக இருந்த யாழ் குடாநாட்டை சிங்களப்படை கைப்பற்றி சிங்கக் கொடியேற்றியது. தாங்கள் துட்டகைமுனு என்றும் சபுமல்குமரய என்றும் சந்திரிகாவும் ரத்வத்தையும் அகங்கார கூச்சல் இட்டார்கள். அமைச்சர்கள் தமது பரிவாரங்கள் படை சூழ வீரதீர யாழ்ப்பாண விஜயங்களை மேற்கொண்டு ரூபவாகினியிலும் லேக்கவுசிலும் விலாசம் காட்டினார்கள். சிவில் நிர்வாகத்தை நடத்த சிங்கள அதிகாரிகளும் ஊழியர்களும் வந்து இறங்கினார்கள். இன்னும் தமிழர்களுக்கு புனர்வாழ்வும் புனருத்தாரணமும் செய்ய பத்தாயிரம் டிசாநாயக்காவின் பரிவாரங்களும் மங்கள சமரவீராவின் வானரர்களும்

ஆனால் அமைச்சரின் வானரங்களின் துப்பாக்கிச் சூட்டைப் பற்றியோ பின்பு நடைபெற்ற சுற்றிவளைப்புக்கள் கைது செய்துகள் பாலியல் வல்லுறவு, காணாமல் போதல் பற்றியோ எவரும் மூச்சுக்காட்டவில்லை. ஏனெனில் தமிழர்களை கைதுசெய்தலும், சித்திரவதை செய்தலும், கொல்லுதலும் சிறிலங்காவின் பயங்கரவாதம் அல்ல. சிங்கள மக்களால் ஜனநாயகமுறையில் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கமானது தமிழர்களைக் கொல்லலாம் ஏனெனில் அது சட்டபூர்வமான அரசாங்கமாகும். அவ்வாறெனின் பயங்கரவாதம் என்றால்

**தமிழ் மண்ணில் ஆக்கிரமித்து குடியேறியிருக்கும் சிங்களவர்கள் அகதிகளாகும் போது, வாய் கிழியக் கத்தும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், உலகப் பத்திரிகைகள் மற்றும் மேற்குலக நாடுகள் அகதியாக அநாதரவாக அலையும் தமிழரைப் பார்த்து இறுக வாய்மூடி மௌனியாக இருக்கின்றன.**

தமிழனுக்கு இவையொன்றும் இல்லை. மழையிலும் வெயிலிலும் அலைந்து கொண்டிருக்கும் போது உணவுத் தடை ஆயுதமாகப் பயன்படுத்தப்படும். அனைத்துலகப் பத்திரிகையாளர்களை அரசாங்கம் கவனிக்க தமிழனது துன்பதுயரங்கள் வெளியுலகிற்கு தெரியாமல் ஆழமாகப் புதைக்கப்படும். மரங்களின் கீழ் குடி தண்ணீர் இன்றி தமிழன் ஏக்கத்துடன் பார்க்கும் போது நிவாரண அமைப்புக்கள் வாய்மூடி மௌனமாக ஒதுங்கி நிற்கும். அரசாங்கம் அனுமதிக்கவில்லை என்று சொல்லும். உதவி வழங்கும் நாடுகள் என்ன கொடுக்கிறார்கள்? என்பதை ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும் தனது தலையின் மேல் என்ன விழுகிறது என்பதைப் பார்த்துத்தான் அகதித் தமிழன் தெரிந்து கொள்வான். வழமையான இராணுவ பயிற்சியும், ஆயுதத் தளபாட உதவியும் வழங்கும் நாடுகளின் கருணைகளைப் பற்றி தமிழனுக்குத்தான் தெரியும். குறிப்பாக ராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இதனை நேரடியாகப் பார்க்கலாம். இவ்வாறான பயிற்சிகளின் பின்பு தமிழர்கள் காணாமல் போவதும், சித்திரவதை செய்யப்படுவதும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுவதுடன், அடித்து துன்புறுத்துவது என்று புதிய அணுகுமுறையும் சிங்களப்

வரப்போகிறார்கள். யாழ்ப்பாணத்தில் குறைந்தது பத்தாயிரம் சிங்களப்படையினராவது இனக்கலப்புச் செய்யவேண்டும் என இரகசிய அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிங்களமயமாக்கல் அரச ஆசீர்வாதத்துடன் நடைபெறுகின்றது. ஒட்டுமொத்தமாக யாழ்ப்பாணம் இப்போது 'யாப்ப பட்டுன' ஆகியுள்ளது. இங்கு தமிழர்களின் நிலை என்ன? சுற்றிவளைப்பு, கைதுசெய்யப்படல், சித்திரவதை, காணாமல் போதல் தலையாட்டல், வெள்ளைக்கொடியேற்றல் போன்ற சகல அவமானங்களும் கொடூரங்களும் அழிவுகளும்தான் மிஞ்சின.

**அரச பயங்கரவாதத்திற்கும் தர்ம யுத்தத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை - ஒடுக்குபவனுக்கும் ஒடுக்கப்படுபவனுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை - அழிக்கும் சிறிலங்காவுக்கும் அவ் அழிவில் இருந்து தன்னை பாதுகாக்கப் போராடும் தமிழர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை, உலகு நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.**

அநுராதபுரத்திற்கு தமிழர்கள் படையெடுத்து புலிக்கொடியேற்றி சிவில் நிர்வாகம் நடத்த முற்பட்டிருந்தால் சிங்களவர்களுக்கும் சிறிமா, புத்திரிகளுக்கும் எப்படி இருந்திருக்கும்? இந்த நிலையில்தான் ஸ்டான்லி வீதியில் தமிழ் இளம் பெண் வெடித்துச்

என்ன? தமிழர்கள் வாழ முற்படுவதும் அதற்கான முயற்சிகளை செய்வதும் தமது உரிமைகளுக்காகப் போராடுவதும் சிறிலங்காவின் பயங்கரவாதமாகும்.

சிறிலங்காவைப் பொறுத்தவரையில் 1948ம் ஆண்டு சுதந்திரம் அடைந்ததில் இருந்து தமிழ் தேசிய உணர்வின் ஆணிவேர்களை அறுத்தெறிவதில் சிங்கள இனவாத அரசு முன்னிலையில் நின்றது. சிறிலங்கா அரசுதான் தமிழர்களின் தாயக நிலங்களைப் பறித்து சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தியது. முதற் தனிச் சிங்கள சட்டம் தொடக்கம் காலத்துக்கு காலம் இனப்படுகொலை செய்தும் இன்று இருக்க இடமில்லாமல் தமிழனை

கலைத்து கலைத்து கொல்வது வரையிலான அனைத்தையும் செய்தது. சிங்கள அரசாங்கம் தான் பயங்கரவாதத்தை உருவாக்கியதும் அதனை கட்டவிழ்த்துவிட்டதும் ஆகும். அதன் உச்சக்கட்டம்தான் தமிழர்கள் உருக்குலைந்து அழிந்து போவதாகும். சிங்களப் பௌத்த பேரினவாத அரசபயங்கரவாதத்தினாலேயே, தமிழர்களின் மீது பேயாட்சி செலுத்தும் இந்த பேரினவாத அரசு பயங்கரவாதத்திலிருந்தும் தப்பிக் கொள்வதற்காக போராடினால்தான் வாழ்வு என்ற சாள்ஸ் டார்வினின் கோட்பாடுகளுக்கு இணங்க தம்மை பாதுகாத்துக் கொள்ள ஒரு தற்காப்பு யுத்தத்தையே தமிழர்கள் நடத்துகின்றார்கள். அரச பயங்கரவாதத்திற்கும் தர்ம யுத்தத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை, ஒடுக்குபவனுக்கும் ஒடுக்கப்படுபவனுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை, அழிப்பவனுக்கும் அழிவில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்பவனுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை, உலகில் புரிந்து கொள்ள வேண்டும். அமெரிக்க சுதந்திரத்திற்காக போராடிய ஜோர்ஜ் வாஷிங்டனில் இருந்து, லெனின், சாள்ஸ் டிகோல், மாவோ என நெல்சன் மண்டேலா வரை தமது மக்களின் விடுதலைக்காக போராடிய அனைவருமே பயங்கரவாதிகள் என்று முத்திரைகுத்தப்பட்டவர்கள்தானே இவ்வாறான போராட்டங்களை நசுக்க முனையும் அரசுகள் யாவும் இவற்றை பயங்கரவாதம் என்றுதான் கூறிவந்தன. எனவே ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் இவ்வாறான பயங்கரவாத குற்றச்சாட்டுக்கள் எழுவது வழமையே.



அவலத்தைத் தந்தவர்களுக்கு முல்லையில் ஓயாத அலைகள் ஏற்படுத்திய அவலங்கள்

இவற்றிற்கெல்லாம் அஞ்சி துன்பங்களையும், துயரங்களையும், அல்லல்களையும் போராட்டவாழ்வில் நாம் ஏற்றுக்கொள்வது நாம் அழிவதற்கு சமமாகும்.

இது எவ்வாறு இருந்தாலும் சிங்கள பேரினவாதப் பூதம் தமிழர்களுக்கெதிரான யுத்தத்தை அதிகரிக்க அதிகரிக்க மறுபக்கமாக சிங்கள மக்கள் மீது பெரும் சுமைகளையும் சோகத்தையுமே ஏற்றுகின்றது. தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது தமிழில் உள்ள முதுமொழி. அதுபோல சிங்கள இனவாதம் தமிழர்கள் மீது எதனைத் திணிக்கின்றதோ அதனையெல்லாம் மனித வாழ்வியக்கத்துடன் அடிப்படையான நியூட்டனது விதியானது விடுதலைப் போராட்டத்திலும் உண்மைகளை உணர்த்தும் ஒரு சக்தியாக மாறியுள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. வரலாறானது சிங்களப் பேரினவாதத்திற்கு தகுந்த நேரத்தில் இதனை உணர்த்தும் என்பது திண்ணம். ✷

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் எட்டு

(தொடர்ச்சி)

அடுத்த நாள், ஒரு இலக்கில்லாத பயணம்போல்தோன்றிய ஒரு பயணத்தில் மண்ட்றியா அரியைக் காரில் சைப்பிரசைச் சுற்றி ஓட்டிச்சென்றான். அவர்கள் பரந்த கிழக்குக் குடாப் பகுதியிலிருந்து, சலாமிஸ்ஐயும், பாமகுஸ்ராவையும் தாண்டி கேப் கிரகோவைச் (Cape Greco) சென்றடைந்தனர். பாமாகுஸ்ராவில், பழைய சுவரருகே நடந்து துறைமுகப் பகுதியை ஆராய்ந்தான். இடைக்கிடை அவசியமான கேள்விகள் கேட்பதைத்தவிர, கிட்டத்தட்ட முழுநாளும் அரி, மண்ட்றியாவோடு கதைக்கவேயில்லை. மண்ட்றியாவுக்கு தான் சந்தித்தவர்களில், இந்த பலஸ்தீனியன்தான் உலகத்திலே இறுகிய மனமுடையவன் என்று எண்ணத்தோன்றியது. அவனுள்ளத்தே, இவனுக்கெதிராக, இதன் காரணமாக ஒருவகை விரோத மனப்பாண்மை எழுந்தாலும், அவனது ஒருமுகப்பட்ட ஈடுபாடும், மனித சக்திக்கு அப்பாற்பட்டதுபோல் தோன்றிய அவனது ஆற்றலும் அவனில் ஒரு மரியாதையையே தோற்றுவித்தன. அவன் ஒரு மகத்தான ஈடுபாடுடைய மனிதனாக இருக்க வேண்டும் என மண்ட்றியா நினைத்தாலும் மனித உணர்ச்சிகளைதையும் காட்டாத அவனது இயல்பு அவனைக் குழப்பத்திலாழ்த்தியது.

கேப் கிரகோவிலிருந்து, சைப்பிரசின் அடிப்பகுதியிலிருந்த தென்பகுதி குடா அருகோடு சென்று, பனிச்சறுக்கு, மற்றும் பனியின்மேல் நடைபெறும் விளையாட்டுகள் விளையாடும் குளிர்காலப் பருவத்துக்கு தயாராகிக்கொண்டிருந்த உல்லாசப்பயண விடுதிகளைக்கொண்டிருந்த கரடுமுரடான மலைப்பகுதிக்குள் ஏறிச்சென்றனர். அரி பென் கானானுக்குச் சில சுவாரஸ்சியமான விடயங்கள் தட்டுப்பட்டிருந்தாலும் அதை அவன் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. பாமஸ்குராவுக்கு நள்ளிரவில் திரும்பிவந்தபோது, மண்ட்றியா மிகவும்

**லியோன் யூறிஸ்**

களைப்படைந்துபோயிருந்தாலும், செவ், டேவிட், ஜோஆப்போடு இன்னொரு சுற்று கூட்டம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அரி இரவு முழுவதும் தனது அறையில் பல விடயங்கள் ஆராய்வதில் செலவிட்டான்.

அரிபென் கானான் சைப்பிரசுக்குள் நீந்திவந்து சேர்ந்த நாலாம்நாள், காலையில் லார்நாகாவிலிருக்கும் மண்ட்றியாவின் காரியாலயத்திலிருந்து அவனுக்கு ஒரு தந்தி வந்தது. துருக்கியிலிருந்து அவன் கூறியது போன்ற வரையறையுள்ள கப்பலொன்று இப்பொழுதுதான் வந்திருப்பதாகவும், அதை விலைபேசி வாங்கமுடியும் என்றும் அது அறிவித்தது. மண்ட்றியா, அரியைக் கூட்டிக்கொண்டு கராஓலெஸ் சென்று டேவிட்டையும், ஜோஆப்பையும் ஏற்றிக்கொண்டு நால்வருமாக லார்நாகாவுக்குச் சென்றனர்.

செவ் கிலோபா, ஏற்கனவே முந்நூறு பிள்ளைகளைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு விசேட பயிற்சி அளிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததால் அவனை விட்டு விட்டுச் சென்றனர்.

பாமாகுஸ்ரா–லார்நாகா பாதையில் சென்றுகொண்டிருக்கும்போது, மண்ட்றியா தன்னைப்பற்றிப் பெருமைப்பட்டுக்கொண்டான். பாதிவழியில், பாதையின் இடதுபக்கமாக இருந்த ஒரு பரந்த வெளியில், அவசர அவசரமாக வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பது அரியின் கவனத்தை ஈர்த்தது. அவன் மண்ட்றியாவைக் காரை நிறுத்தச்சொல்லி வெளியே இறங்கி, பார்வையை அவ்விடத்தை நோக்கிச் செலுத்தினான். அங்கு ராணுவ படைவீட்டைப் போன்றதொன்று கன கெதியில் அமைக்கப்பட்டுக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

"பிரிட்டிஷ்காரர்கள் புதிய தடுப்பு முகாம்களை அமைக்கின்றனர். டேவிட் சொன்னான். "கராஓலொஸ் முகாம்கள் நிறைந்து வழியத் தொடங்கி விட்டன."

"எனக்கு ஏன் இதுபற்றிச் சொல்லவில்லை"? அரி கோபத்துடன் கேட்டான்.

"நீ கேட்கவில்லையே" ஜோஆப் யார்க்கோணி பதில் சொன்னான்.

"நாங்கள் நினைப்பது சரியானால் இன்னும் இரண்டு மூன்று வாரங்களில் அங்கே மேலதிகமாக இருக்கும் ஆட்களை இங்கே மாற்றியனுப்பத் தொடங்குவார்கள்." டேவிட் சொன்னான்.

அரி காரினுள் ஏறவும் அவர்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். ஜோ ஆப் யார்க்கோணி தன் நண்பன் கூறியதற்கு மாறான ஊகிப்பெதையும் வெளியிடாவிட்டாலும் புதிய முகாம்களால் அரி கவலையடைந்ததை உணர்ந்து கொண்டான். அரியுடைய மூளையுள் பலமான யோசனை நடந்து கொண்டிருப்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

அவர்கள் சென்ற கார் லார்நாகாவின் ஒடுங்கிய, வளைந்து செல்லும் தெருக்களில் சென்று துறைமுகத்தை அண்டிய, ஓரங்களில் அழகான வெள்ளை நிற இருமாடிக்கட்டிடங்களைக் கொண்டிருந்த வீதியொன்றினுள் சென்றது. அவர்கள் "நான்கு விளக்குகள்" மதுபானச் சாலையின் முன் சென்று நின்றனர். அங்கேதான் துருக்கியனான கப்பலின் சொந்தக்காரன் ஆர்மாட்டோ அவர்களை எதிர்பார்த்துக்காத்திருந்தான். இவ்வகை வியாபாரங்களில் மதுபானங்களின் பரிமாற்றத்துடன் இடம் பெறும் விலைநிர்ணயத்துக்கான பேச்சு வார்த்தைகளைக் கைவிட்டாக வேண்டும். என்று அரி வற்புறுத்தினான். அவன் உடனடியாகக் கப்பலைப் பார்வையிட வேண்டுமென விரும்பினான்.

ஆர்மாட்டோ அவர்களை வீதியைக்கடந்து கூட்டிச்சென்று அரைமைலுக்கு மேலாகக் கடலினுள் நீண்டிருந்த நீண்ட இறங்குதுறைக்குக் கூட்டிச்சென்றான். அவர்கள் டசினோ அல்லது சிறிது அதிகமான இழுவைப்படகுகள், உல்லாசப்படகுகள்,பாய் வள்ளங்கள் போன்றவற்றைத்தாண்டிச் சென்று கொண்டிருக்கும் போதே ஆர்மாட்டோ தனது தோளுக்கு மேலாகத் தொடர்ந்து கதைத்துக் கொண்டிருந்தான். இப்போ அவர்கள் பார்வையிடப் போகும் கப்பல் உண்மையிலேயே ஒரு கடல் ராணிதான் என உறுதி கூறினான். இறங்குதுறையின் முடிவில் அவர்கள் போய் நின்றஇடத்தில் ஒரு பழையயாணி மரத்தாலான அடிப்பாகத்தையுடைய (Wooden-Huller) மீட்பு இழுவைக் கப்பலொன்று (Salvage Tug)அதன் முன்புறத்தில் (Bow) மங்கலாகத் தெரிந்த "அப்ரோடைற்" (Aphrodite) என்ற பெயருடன் நின்று கொண்டிருந்தது.

"அவள் அழகாயிருக்கிறாள் அல்லவா?" என்று ஆர்வத்துடன் சொல்லத் தொடங்கிய ஆர்மாட்டோ அந்தப் பழைய தட்டையான அடிப்பகுதியைக் கொண்ட கப்பலை அணுஅணுவாக ஆராய்ந்து கொண்டிருந்த நான்கு சோடி வெறுப்பு மிழும் கண்களைக் கண்டதும், மூச்சை இழுத்துப்பிடித்துக் கொண்டான். (Scow- தட்டையான அடிப்பகுதியைக் கொண்ட கப்பல்) பின்பு தாழ்ந்த குரலில், ஆயினும் அவன் ஒன்றும் வேகப் போட்டியில் பங்குபற்றக் கூடிய படகல்ல என்றான் அந்தத் துருக்கியன்.

அரியின் பயிற்சி பெற்ற கண்கள் "அப்ரோட்டை" கிட்டத்தட்ட 150அடி நீளமும் 200தொன் எடை கொண்டதெனவும் முடிவு செய்து கொண்டன. அதனுடைய வெளித் தோற்றத்திலிருந்து அது கிட்டத்தட்ட 45வருட பழமை வாய்ந்ததென மதிப்பிட்டான்.

"சரி... அப்ரோடைற் என்பது யார்?" ஜோஆப் யாக்கோனி கேட்டான்.

"அப்ரோடைற் என்பது காதல் தேவதையாகும். அவள் கடலலைகளால் இங்கிருந்து சில மைல் தூரத்தில் ஐந்தாயிரம் வருடங்களுக்கு முன் உருட்டி விடப்பட்டாள். மறுமொழியை டேவிட் கூறினான்.

அப்போ சரிதான். இந்த வயதான பெண்ணும் காலத்தின் மாற்றங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறாள். ஜோஆப் சொன்னான்.

அந்தத் துருக்கியனோ, உமிழ்நீரை விழுங்கியபடியே தன்னை நோக்கி வீசப்படும் கேலிக்கண்களைப் புன்னகைத்துச் சமாளிக்க முயன்றான். பென்கானான் அவனுக்காகச் சுழன்று திரும்பினான். "ஆர்மாட்டோ எனக்கு ஒரு விடயத்தில் மட்டுந்தான் அக்கறை உண்டு. பலஸ்தீனம் இங்கிருந்து 200மைல் தூரத்தில் இருக்கிறது. இக்கப்பல் அங்கு ஒருமுறை போகவேண்டும். இதனால் முடியுமா? முடியாதா? என் தாயாரின் கௌரவத்தின் மீது ஆணையாக இருகைகளையும் மேலே உயர்த்தியபடி ஆர்மோட்டோ தொடர்ந்தான். "நான் துருக்கிக்கும், சைப்பிரசிற்கும் இடையில் 300தரம் போய் வந்திருக்கிறேன். கப்பல் கம்பனி மண்ட்றியாவுக்குச் சொந்தமானது. அவருக்குத் தெரியும்."

"அது உண்மைதான். இது பழையதாக இருந்தாலும் நம்பிக்கை வைக்கக்கூடியது". என்றான் மண்ட்றியா.

"மிஸ்டர் ஆர்மாட்டோ எனதிரு நண்பர்களையும் கப்பலினுள் கூட்டிச்சென்று இயந்திரங்களைக் காட்டுங்கள்."

மற்றைய மூன்றுபேரும் கப்பலின் கீழ்த்தளங்களுள் சென்றதும் மண்ட்றியா திரும்பி அரிக்குச் சொன்னான், "ஆர்மட்டோ ஒரு துருக்கியனாக இருக்கலாம். ஆனால் நம்பக்கூடியவன்."

"இதிலிருந்த எவ்வளவு வேகத்தை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்?" அரி கேட்டான்.

"அண்ணளவாக 5நாட்கள். (Knots-கடல்மைல்கள். நிலத்தில், ஒருமைலுக்குச் சிறிது தூரம்கூடியது.) வேகத்தில் அதற்குப் பின்புறமிருந்து காற்றுவீசினால், (Gale) செல்லக்கூடும். அவர்கள் மேல்தளத்திற்குச் சென்று மேற்பக்கத்தைப் பார்வையிட்டனர். அந்த மேல்பக்கம் அரைவாசி பழுதடைந்த நிலையில் திருத்துவதால் பயனில்லை என்னும் அளவுக்குப் பழுதடைந்தும் காணப்பட்டது. மேலோட்டமாகத் தெரிந்த தகுதிகளைவிட்டால், அதனைப்பற்றி ஏதோ ஒன்று பலமாக உணரப்பட்டது. கடலோடுவதற்கு வேண்டிய தந்திரோபாயங்களை அறிந்திருந்ததும், கடலோடு போராடி வெற்றிகளைக்

டேவிட்டும் ஜோஆப்பும், அந்த மூவரும் இறங்குதுறையில் சென்றுமறையும்வரை பார்த்துக்கொண்டிருந்தனர். திடீரென அவர்கள் முகங்கள் புன்னகையால் நிறைந்துபோக, மகிழ்ச்சியுடன் ஒருவரையொருவர் கட்டியணைத்துக் கொண்டனர். ""இந்த அரியைப் பார்த்தாயா, நாம் தாயகம் செல்லப்போகிறோம் என்பதை எப்படிச்சொன்னான் என்று", "உனக்கு அரியைத் தெரியும்தானே. உணர்ச்சிகளையும், மனக்கிளர்ச்சிகளையும் கேலி செய்பவன் அல்லவா?" என்றான் டேவிட்.

இவர்கள் மகிழ்ச்சிப் பெருமூச்செறிந்தபடி தாயகத்தைப் பற்றிய நினைவுகளில் மூழ்கினர்.

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# புரியாத புதிர்!

சூரியக்கதிர் – 1, 2, 3, நடவடிக்கைகள் புலிகள் இயக்கத்தின் போரிடும் திறனை நசுக்கிவிட்டன என்பது, சிங்கள அரசினது கருத்து மட்டுமல்ல, பெரும்பாலான உலக இராணுவ – அரசியல் ஆய்வாளர்களும் அவ்வாறே கருதினர்.

பாரிய முகாம் தகர்ப்புகளை, புலிகளால் இனிமேல் நடாத்த முடியாது என்றும், அரசுக்குத் தலைவிடியைக் கொடுக்கும் வகையில் சிறு சிறு தாக்குதல்களை மட்டுமே புலிகளால் நடாத்த முடியும் என்றும், அவர்கள் கருத்துக் கூறியிருந்தனர்.

சுருக்கமாகச் சொன்னால், தீவிரம் குறைந்த ஒரு போர்முறையை (Low intensive warfare) மேற்கொள்ளவே புலிகளின் தற்போதைய இராணுவ பலம் இடங்கொடுக்கும் என்று, பெரும்பாலான ஆய்வாளர்கள் ஆரூடம் கூறியிருந்தனர்.

ஆனால், இத்தகைய படையியல் கணிப்பீடுகள் மற்றும் இராணுவ அபிப்பிராயங்கள் அனைத்தையும், ஓயாத அலைகள் மூழ்கடித்து விட்டது.

தென்மராட்சி – வடமராட்சியிலிருந்து போரிடாது பின்வாங்கிய புலிகளின் செயலைப் புரிந்துகொள்ள முடியாது திண்டாடிய இராணுவ உலகம், முல்லைத்தீவு படைத்தளத்தைப் புலிகள் கைப்பற்றிவிட்டனர் என்ற செய்தி வெளியானவுடனும், புலிகள் இயக்கத்தைப் புரிந்துகொள்ள முடியாது விழித்தனர்.

மொத்தத்தில், இராணுவ உலகிற்கு அன்றும் இன்றும் புலிகள் இயக்கம் ஒரு புரியாத புதிராகவே உள்ளது.

தலைவர் பிரபாகரனின் இராணுவச் செயற்பாடுகளில் உள்ள தனித் தன்மைகளே, புலிகள் இயக்கத்திற்கு இத்தகைய புதிர்த் தன்மைகளைக் கொடுத்துள்ளன.

புலிகள் இயக்கம் பற்றிய இராணுவ மதிப்பீடுகளைச் சமகால ஆய்வாளர்களால் சரியாகக் கணிக்க முடியாதுள்ளதற்குப் பிரதான காரணம், அந்த ஆய்வாளர் வைத்திருக்கும் இராணுவ அளவு கோல்கள்தான்.

இந்த அளவுகோல்கள், உலகின் இராணுவ சிந்தனையாளர்கள் மற்றும் புகழ்பூத்த படைத் தளபதிகள் ஆகியோரின் போதனைகள், அனுபவங்கள் என்பவற்றால் ஆக்கப்பட்டுள்ளன.

ஆனால், இதற்கும் அப்பால், தலைவர் பிரபாகரனின் இராணுவ சிந்தனைகளும், செயற்பாடுகளும், பெரும்பாலும் தனித் தன்மை வாய்ந்தவைகளாக அமைந்துள்ளன. இது காரணமாக, தான் வைத்திருக்கும் இராணுவ அளவு கோல்களைப் பயன்படுத்திப் பிரபாகரனின் போர்க்கலையைச் சரியாக அளந்து – கணிக்க முடியாது வல்லுனர்கள் திண்டாடுகின்றனர்.

இதனால்தான், புலிகள் இயக்கம் பற்றி இராணுவ விமர்சகர்கள் கூறும் கருத்துக்கள் – கணிப்புக்களில், அடிக்கடி பெருந்தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன.

என்றைக்குத் தலைவர் பிரபாகரன் தனது போர்க்கலை முறைகளை விரிவாக விளக்கி உலகிற்கு வழங்குகிறாரோ அன்றைக்குத்தான் புலிகள் இயக்கம் பற்றிய புதிரும் விடுபடும்! ✷

# முல்லைப் போரின் கடற்சமரும்...

நடந்தவைகளை நடக்காதவையாகவும், பிரமாதமாகப் பிரச்சாரப்படுத்தத் தொடங்கியது சிங்களம். பொய்களையே உண்மையின் வடிவமாய்ப் புனைந்து சிங்களம் சொல்லிக் கொண்டிருந்த வேளையில், களம் அவர்களது கைகளிலில்லை.

தரையிறக்கப்பட்ட படை, முகாமை நோக்கி அணுவும் அசைய முடியாமல் அந்தரித்து நின்றது. தம் தளபதி லெப். கேணல் ஹொஸ்னி லாபீரையும் நூற்றுக்கு மேலான வீரர்களையும் இழந்து நின்றது. காயப்பட்டு வீழ்ந்த கேணல் லோறன்ஸ் பெர்னாண்டோவையும் ஏனைய சகாக்களையும் என்ன செய்வதெனத் தெரியாது தவித்து நின்றது. மேலதிக துருப்புக்களைத் தரையிறக்க முயற்சித்த ஒரு 'எம்.ஐ.17' உலங்கு வானூர்தியும் தரையிறக்கக் கடற்கலம் ஒன்றும் மோட்டார் குண்டுகளால் முழுச் சேதப்பட்டு, களத்திலிருந்து அகற்றப் பட்டுவிட்டன. முன்பு 'ரணவிரு'வைத் தாக்க முடியாமல் திரும்பிய மிதுபாலன், சயந்தனோடு இணைந்து மீண்டும்

> ஒரு வார காலமாய் ஓய்வற்று அதிர்ந்த 'ஓயாத அலை'க்களம், 'திரிவிட பஹர' துருப்புக்களைத் துரத்திக் கலைத்தபின், அமைதி அடைந்தது.

குண்டுப் படகெடுத்து மூழ்கடிக்க நெருங்கும்போது, தற்காப்புத் தாக்குதல் நடாத்தி 40 மீற்றர் தூரத்தில் படகை வெடிக்கச் செய்துவிட்டதால் மயிரிழையில் தப்பிய இன்னொரு தரையிறக்கும் கலம் திருப்பி எடுக்கப்பட்டுவிட்டது. பேரிழப்புக்களுக்கு மத்தியில் நிர்க்கதி நிலையிலிருந்த 'சிறப்புக் கொமாண்டோப் படை, உடனடியாகத் தன்னை மீட்டெடுத்துச் செல்லுமாறு வானொலித் தொடர்புச் சாதனத்தில் அவலமாய் கத்திக் கொண்டிருந்தது!

ஆனால் – சிங்களத் தலைமையோ – செய்தித் தொடர்புச் சாதனங்களில் வேறு விதமாகவே சொல்லிக் கொண்டிருந்தது. முதலில், "முல்லைத்தீவிலிருந்து 10 கிலோ மீற்றர் தூரத்தில் தரை மிறக்கப்பட்ட படையினர், புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் முன்னேறுகின்றனர்" எனத் தொடங்கி – இடையில், "புலிகளின் தடுப்புக்களை முறியடித்தபடி வெற்றிகரமாக முன்னேறிய படையினர் முகாமினுள் தேடுதல் நடத்துகின்றனர்" எனத் தொடர்ந்து – முடிவில், "முகாமில் தேடுதல் மேற்கொண்டு அங்கு எவருமேயில்லையென்பதைக் கண்டறிந்த பின், மீட்புப் படையினர் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்" என முடித்தது!

ஒரு வார காலமாய் ஓய்வற்று அதிர்ந்த 'ஓயாத அலை'க்களம், 'திரிவிட பஹர' துருப்புக்களைத் துரத்திக் கலைத்தபின், அமைதி அடைந்தது.

"துருப்புக்கள் திரும்பிவிட்டனர்" என்பது சிங்களம் சொல்லிய செய்தி. ஆனால், 'யாப்பட்டுன' படையெடுப்பில் பிரதான பங்கேற்ற சிங்களத்தின் புகழ் பூத்த 'சிறப்புப் படை'யினர் எப்படிப் பின்வாங்கினர் என்பது, சொல்லாத செய்தி. அது, சொல்லப்பட வேண்டிய செய்தி.

திரும்பிச் செல்லல் அல்ல, அதன் பெயர் தப்பியோட்டம்! நம்மூர்த் தமிழில் "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்ற அவல ஓட்டம்! மோட்டார் பீரங்கிகளின் குறி பிசகாத அடிகளில் குலை நடுங்கிய பீதி ஓட்டம்! 100 வரையான தம் ஆயுதங்களைத் தூக்கியெறிந்துவிட்டு ஓடிய கேவல ஓட்டம்! படுகாயப்பட்டுக் குற்றுயிராய் மரணத்தின் வாசலில் துடித்துத் கொண்டிருந்த தம் தோழர்கள் பலரை, உயிரோடேயே – கடலில் மூழ்கவிட்டுவிட்டுச் சென்ற அவமான ஓட்டம்! தரையிறக்கும் கலம் கரையை அடையும் முன்னரே, கடலில் பாய்ந்து சென்று – தாவிப் பிடித்து ஏறிய அவதி ஓட்டம்!

'ஓயாத அலைகள்' ஒரு முடிந்த கதையல்ல, புதிய கதையின் தொடக்கமே. ✷

# பாண்டவர்கள் வெல்வார்கள்....

நிலையில் இல்லை. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இவையெல்லாம் ஊமையன் கண்ட கனவாகவே இருக்கும்.

மறுபுறம், யாரால் இந்த இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியுமோ அவர் யுத்த சன்னத்தம் செய்கிறார். யுத்தத்தினால் எல்லோருக்குமே இழப்பு, யாருக்குமே இலாபம் இல்லை என்று வேதாந்தம் பேசியவர், இப்போது யுத்தம் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று சங்கநாதம் செய்கிறார். தமிழ் மக்கள் வேறு, விடுதலைப் புலிகள் வேறு என்று முன்னைய ஆட்சியாளர்களைப் போலவே இவரும் பிரித்தாளும் இராஜதந்திரத்தைச் படுகச்சிதமாகக் கையாள்கிறார்.

தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவித்து, அவர்களை நிம்மதியாக வாழ வைக்கும் சூழலை ஏற்படுத்தப் போகிறாராம். இவர் கொட்டியுள்ள "முத்துக்கள்" சில வற்றைக் கீழே தருகிறேன். படித்துப் பாருங்கள்.

'ஈவிரக்கமற்ற யுத்தத்தின் கோரப்பிடியில் நிலையாக, நேரடியாக இரையாகிய நீங்கள், கடந்த பதின்மூன்று ஆண்டு காலமாக அனுபவித்துவந்த துன்ப துயரங்கள் எண்ணிலடங்காதவை. இவ் அர்த்தமற்ற யுத்தத்தினால் நீங்கள் உற்றார் உறவினர்களை இழந்துள்ளீர்கள். யுத்தத்தை வாழ்க்கையாகக் கொண்டுள்ள போராளிகளைவிட, பொதுமக்களாகிய உங்களுக்கு நிம்மதி தேவை. நிவாரணம் தேவை. மேலும், யுத்த சூழ்நிலையில் வாழ்வதற்கான விருப்பமின்மையையும், அதிருப்தியையும் சகல துறைகளிலும் தமிழ்பேசும் மக்களாகிய நீங்கள் காட்டியுள்ளீர்கள். எல்.ரி.ரி.ஈ இயக்கத்தினர் திணித்த பல்வேறு கட்டுப்பாடுகளையும் தகர்த்தெறிந்து ஆயிரக்கணக்கில் நீங்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தீர்கள். ஒரு புதிய வாழ்க்கையினையும், அவ்வாழ்க்கைக்குத் தேவையான சகல வசதிகளையும், நிவாரணங்களையும் எதிர்பார்த்தே அவ்வாறு செய்துள்ளீர்கள்.

நீங்கள் இழந்த ஊர்மனைகளையும், தோட்டந்துரவுகளையும், வாழ்க்கை முறைகளையும் மீண்டும் உங்களுக்குப் பெற்றுத் தருவதற்கு நாங்கள் அயராது உழைப்போம்.

மிகக் கூடிய கெதியில் ஈவிரக்கமற்ற எல்.ரி.ரி.ஈ யினரின் கட்டுப்பாட்டில் இருந்து வடக்கு விடுவிக்கப்பட்டு அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். "அரசு" என்ற முறையில் நாங்கள் உங்களை, சகோதர மனப்பாங்குடன் அன்புக்கரம் நீட்டி அழைக்கிறோம். இன பேதங்களற்ற

**- நக்கீரன் -**

ஐக்கிய இலங்கையில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் செயல் முறையொன்று அரசியற் தீர்வுத் திட்டமாக முன்வைக்கப்பட்டுள்ளது'.

இவற்றைப் படிக்கும்போது, ஆடு நனைகிறது என்று அழுத ஓநாயின் கதைதான் ஞாபகத்திற்கு வருகிறது. தமிழ் மக்களுக்கு உரிமை தேவையில்லை. நிம்மதியான வாழ்க்கை தான் தேவையாம். அவர்களே உடைத்த ஊர்மனைகளையும் தோட்டந்துரவுகளையும் மீண்டும் கட்டித் தருவார்களாம். இன பேதங்களற்ற ஐக்கிய இலங்கையில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் செயல்முறையொன்று அரசியல் தீர்வுத்திட்டமாக முன்வைக்கப்பட்டுள்ளதாம். குற்றுயிரும் குறையுயிருமாகக் கிடக்கும் அரசியற் தீர்வுத் திட்டத்தை, மிதவாதத் தமிழ்க் குழுக்களே இப்போது ஏறெடுத்துப் பார்க்க மறுக்கிறார்கள். தமிழ் அறிவுப் பிழைப்பாளர்களே அதனைத் தமிழ் மக்களிடம் "விற்க" மறுத்து விட்டார்கள்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது கட்சி அரசியற் தீர்வுத் திட்டத்தை ஒருபோதும்

தொடர்ச்சி 18 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இழப்பு எதையும் பெற்றுவிடவில்லை

**ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு எவ்வித கால வரம்பையும் நிர்ணயிக்க முடியாது. இறுதி இலட்சியத்தை அடையும் வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.**

சிறிலங்கா அரசியல்வாதிகள், இராணுவத் தளபதிகள் வழமையாகக் கூறும் ஆருடம் ஒன்றை இராணுவத் தளபதி றொகான் தளுவத்த மீண்டும் ஒரு தடவை குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடிக்க காலக்கெடு ஒன்றை விடுத்துள்ள இராணுவத் தளபதி, எதிரியின் பலத்தை முற்றாகச் சிதறடிப்பதன் மூலம் இவ்வாண்டு இறுதிக்கு முன்னர் சமாதானத்தை மீண்டும் நிலைநாட்ட முடியுமெனத் தெரிவித்துள்ளார். யாழ். குடாநாட்டில் பெரிய இராணுவ மேலாதிக்கத்தின் பின்னர் இராணுவத் தீர்வை விரைவிலேயே கிட்ட முடியுமென அடிக்கடி பத்திரிகையில் பேசி வந்த சிறிலங்கா இராணுவத் தளபதி, முல்லைத்தீவு படைத் தளத்தைப் புலிகள் நிர்மூலம் செய்தபோதும், 'சத்ஜெய'–2 நடவடிக்கையை முறியடித்த போதும் வெளியில் முகம் காட்டாது மறைந்து கொண்டதோடு மௌனமும் சாதித்தார். ஆனால் தற்பொழுது கிளிநொச்சி நகருள் இராணுவம் பிரவேசித்த பின்னர் இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்பு ஒரு



புறம் இருக்க, மீண்டும் பத்திரிகைகள் ஊடாகப் பேசத் தொடங்கியுள்ளார். புலிகளைத் தோற்கடிப்பதற்கு குறுகிய காலக்கெடு ஒன்றையும் விதித்துள்ளார். இராணுவத் தளபதியின் இப் பேச்சானது, ஒரு வகையில் கிளிநொச்சி நகருள் இராணுவம் பிரவேசித்ததின் வெளிப்பாடு என்றே கூறவேண்டும். ஆனால், யாழ். நகரை ஆக்கிரமித்ததோ அன்றி கிளிநொச்சி நகரை ஆக்கிரமித்ததோ சிறிலங்கா இராணுவம் மேலதிகமாகப் பெற்றுவிட்ட இராணுவ அனுகூலங்கள் என்று கூறிவிட முடியாது. அதாவது, இராணுவம் எதுவித இழப்பின்றியும் இவற்றைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டதாக இல்லை. அதாவது, யாழ். நகரை இராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தமையானது, கிழக்கில் பெரும் பகுதியை இழந்த பின்னரேயாகும். ஏற்கெனவே இராணுவம் பல உயிர்களைக் கொடுத்தும் பெரும் செலவு செய்தும் ஆக்கிரமித்த பகுதி ஒன்றை இழந்தே புதியதொரு பகுதி ஒன்றைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது. அத்தோடு, புதிய பகுதியைக் கைப்பற்றிக் கொண்டமையும் இழப்பின்றி செலவின்றி நடந்த விடயமல்ல. மேலும், அது முடிந்துவிட்ட விடயமும் அல்ல. தொடர்ந்தும் அப் பகுதிகளில் தாக்குதல்கள் நடந்த வண்ணமே உள்ளன. இராணுவம் பெரும் உயிரிழப்பையும் பொருள் இழப்பையும் சந்தித்த வண்ணமே உள்ளது. இதே போன்றதே கிளிநொச்சி நகர் மீதான தாக்குதலுமாகும். முன்னர் கிழக்கில் இருந்து முகாம்கள் மீளப் பெறப்பட்ட பின்னர் – யாழ். குடாநாடு மீதான தாக்குதல் இடம் பெற்றதிற்கு ஒத்ததாகவே – தற்போதைய இராணுவ அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப கிளிநொச்சி தாக்குதலுக்குப் பின்னர் பூநகரி முகாம் பெறப்பட்டதா? இந்த முகாம் மீளப் பெறப்பட்டதற்கான காரணம் எதுவாக இருப்பினும் கூட பூநகரிப் பிரதேசம் இழக்கப்பட்டே கிளிநொச்சியைப் பெற முடிந்துள்ளது. மாறாக, முல்லைத்தீவு பறிகொடுக்கப்பட்டதற்கு இதுவரை சிறிலங்கா இராணுவத்தினால் பிரதியீடாக எதையுமே பெற்றுக் கொள்ள முடியவில்லை. அதாவது, இழப்பை ஈடுகட்ட முடியவில்லை. இந்த நிலையில் விடுதலைப் புலிகளை முறியடிப்பது என்பதும் தனது தேவைக்கு ஏற்றவாறு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென சிறிலங்கா எண்ணுவதும் எத்துணை சாத்தியமானது? தமிழ் மக்களைப் பொறுத்தும் சரி – விடுதலைப் புலிகளைப் பொறுத்தும் சரி – தமிழீழப் பிரதேசம் எதுவாக இருப்பினும் அது அவர்களைத் தாங்கும். ஒரு பகுதியில் இராணுவம் நிலை கொள்வதற்காக – மற்றொரு பகுதியில் இருந்து விலகிச் செல்லுவதானால் விலகிச் செல்லும் பகுதியானது –தமிழ் மக்களுக்குப் பயன்பாடு உடையதாகவே இருக்கும். ஆனால், இராணுவமானது ஒரு பகுதியை இழந்து ஒரு பகுதியை ஆக்கிரமிப்பதனால் தமிழீழப் பிரதேசத்தை முழுமையாக ஆக்கிரமித்ததாகவோ கட்டுப்படுத்தியதாகவோ இருக்க மாட்டாது. ஆனால், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பது சிங்கள அரசியல் வாதிகளும், சிங்கள இராணுவத் தலைமையும் நீண்டகாலமாகக் கண்டுவரும் அழகான கனவு தான். ஆனால், இனப்பிரச் சினைக்கு இராணுவத் தீர்வு என்பது சாத்தியமானது அல்ல என்பது மட்டுமல்ல, இராணுவத் தளபதி போன்றவர்களின் கணிப்பீடுகள் அவர்களுக்கு அவமானத்தை ஏற்படுத்தக்கூடியவையாகவே இருக்கும் என்பதே யதார்த்தமானது.

ஏனெனில் அவர்கள் எப்பொழுதும் களநிலவரத்தைத் தவறாகவே மதிப்பிடுகின்றனர் என்பது மட்டுமல்ல, அரசியல் வாதிகள் போன்று பேசுகின்றனர் என்பதினாலும் ஆகும். ✷

> யாழ். குடாநாட்டை ஆக்கிரமிக்க கிழக்கின் பெரும் பகுதியை இழந்த சிறிலங்கா இராணுவம், கிளிநொச்சியை ஆக்கிரமிக்க யாழ். குடாநாட்டின் குறிப்பிடக்கூடிய சில பகுதிகளையும் முழுப் பூநகரிப் பிரதேசத்தையும் இழந்துள்ளது. ஆக, முல்லைத்தீவைத் தாம் பறிகொடுத்ததிற்குப் பிரதியீடாக இராணுவத்தால் எதையும் பெறமுடியவில்லை.

> இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பது சிங்கள அரசியல்வாதிகளும், சிங்கள இராணுவத் தலைமையும் நீண்டகாலமாகக் கண்டுவரும் அழகான கனவு. இராணுவத் தீர்வுக் கனவு சாத்தியமற்றது என்பது மட்டுமல்ல இராணுவத் தளபதிகளின் கணிப்பீடுகள் கூட அவர்களுக்கு அவமானத்தை ஏற்படுத்துவதாக இருப்பதே யதார்த்தமாக உள்ளது.

# தாயகம் நோக்கிய ....

கண்டிருக்கிறதென்பதுவுமே அதுவாகும்.

அரைமணி நேரத்தில் டேவிட்டும், ஜோஆப்பும் தங்கள் பரிசீலனையை முடித்துக்கொண்டனர்.

"இந்தக் கப்பல் ஒரு குறைப்பிரசவம் தான். ஆனால் இது எங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றித்தரக்கூடியது" என்றான் டேவிட்.

"முந்நூறு பேரை ஏற்றிச் செல்லமுடியுமா?" கேட்டான் அரி. "கொஞ்சம் கஸ்ரம்தான். ஆனால் செய்யலாம்" என்றான் டேவிட் தனது தாடையைத் தடவியபடியே அரி, மண்ட்றியாவுக்காகத் திருப்பிச் சொன்னான்: "நிறையப் புனரமைப்புவேலைகள், எவருடைய கவனத்தையும் ஈர்க்காமல் செய்ய வேண்டியிருக்கும்."

மண்ட்றியா பெருமையாகச் சிரித்தான். "உங்களுக்குத் தெரிந்திருப்பதுபோல், எனக்கு இங்கு நல்ல இடங்களில் தொடர்பு இருக்கிறது. சரியான ஆட்களை, சரியான விதத்தில் கவனித்துவிட்டால் எதுவுமே காணப்படமாட்டாது, கேட்கப்படமாட்டாது, எதுவுமே அறிவிக்கப்படமாட்டாது.

"டேவிட் இன்றைக்குப் பலஸ்தீனத்திற்கு றேடியோ செய்தி ஒன்றை அனுப்பு. எங்களுக்கு ஒரு கப்பல் கப்டனும் இரண்டு மாலுமிகளும் அனுப்பச்சொல்".

"மூவர் கொண்ட குழு போதுமா?"

"நான் இனியென்றாலும் உங்களுக்குச் சொல்லத்தான் வேண்டும். நீங்கள் இருவரும், செவ்வும் என்னுடன் இந்தக் கப்பலில் பலஸ்தீனம் வருகிறீர்கள்.

நாங்கள் மாலுமிகளின் கடமைகளை நிறைவேற்றுவோம். ஜோஆப் உனக்கு வயது சென்ற பெண்கள்மீது விருப்பம்தானே! இந்த வயதுபோன பெண் இப்போ உனக்குக் கிடைத்திருக்கிறாள். அவளைச் சரிப்பண்ணி, பயணத்துக்குத் தேவையானவற்றைச் சேர்த்துச் சேமிக்கும் பொறுப்பு உன்னுடையது. கடைசியாக அவனது மின்வேக கேள்விகளாலும், கட்டளைகளாலும் குழம்பிப்போயிருந்த ஆர்மாட்டோவிடம் திரும்பி, "கவலைப்படாதே ஆர்மாட்டோ, இந்தப் பூங்கரத்தை எமக்கு விற்றுவிட்டாய். ஆனால், நீ கூறிய விலையிலல்ல. நாம் 'நான்குவிளக்கு' மதுபானச் சாலையுள் சென்று இந்த வியாபாரத்தை முடிப்போம்.

அரி மேல்தளத்திலிருந்து குதித்து, மண்ட்றியா இறங்குவதற்குத் தன் கையைக்கொடுத்து உதவினான். பின்பு "டேவிட், நீயும் ஜோஆப்புமாக எப்படியாவது பாமஸ்குராவுக்குத் திரும்பிப்போங்கள். மிஸ்டர் மண்ட்றியா என்னை இந்த விசயம் முடிந்ததும் கைரேனியாவுக்குக் கூட்டிச்செல்வார்."

திடுக்கிட்டுப்போன மண்ட்றியா, "கைரேனியா..... இந்த மனிதனுக்குக் களைப்பே கிடையாதா? கைரேனியா, தீவின் மறு அந்தத்திலிருக்கிறது" என்று படபடத்தான்.

"உன்னுடைய வாகனத்தில் ஏதாவது பிரச்சினையா?" அரி கேட்டான்.

"இல்லையில்லை.... நாங்கள் கைரேனியாவுக்கு ஓட்டிச்செல்வோம்."

அரி, மண்ட்றியாவுடனும் துருக்கியனுடனும் இறங்குதுறையில் நடக்கத்தொடங்கினான்.

டேவிட் பின்னாலிருந்து கூப்பிட்டான், "அரி, இந்தக் கிழட்டுப்பெண்ணுக்கு என்ன பெயர்சூட்டுவோம்?"

"நீதான் கவிஞன்" அரி திரும்பிக் கத்தினான். "நீயே அவளுக்கு ஏதாவது பெயர்சூட்டிவிடு"

டேவிட்டும் ஜோஆப்பும், அந்த மூவரும் இறங்குதுறையில் சென்றுமறையும்வரை பார்த்துக்கொண்டிருந்தனர். திடீரென அவர்கள் முகங்கள் புன்னகையால் நிறைந்துபோக, மகிழ்ச்சியுடன் ஒருவரைஒருவர் கட்டியணைத்துக் கொண்டனர். "இந்த அரியைப் பார்த்தாயா, நாம் தாயகம் செல்லப்போகிறோம் என்பதை எப்படிச்சொன்னான் என்று", "உனக்கு அரியைத் தெரியும்தானே. உணர்ச்சிகளையும், மனக்கிளர்ச்சிகளையும் கேலி செய்பவன் அல்லவா?" என்றான் டேவிட்.

இவர்கள் மகிழ்ச்சிப் பெருமூச்செறிந்தபடி தாயகத்தைப் பற்றிய நினைவுகளில் மூழ்கினர். பின்பு "அப்ரோடைற்" றைப் பார்த்தனர். அந்தப் பழைய பெண்மணி பரிதாபகரமாகத் தெரிந்தாள். அவர்கள் கப்பலின் பிரதானமான மரத்தாலான பகுதியைச்சென்று பார்வையிட்டனர்.

"நான் இவளுக்கு நல்ல பெயர் ஒன்றை வைத்திருக்கிறேன்", ஜோஆப் சொல்லிவிட்டுத் தொடர்ந்தான், நாம் ஏன் அவளைப் பெவின் என்று அழைக்கக்கூடாது?"

"நான் அதைவிட நல்ல பெயர் ஒன்றைச் சொல்கிறேன். இப்போதிலிருந்து இவள் "எக்ஸோடஸ்". ✷

## தொடர்பு கொள்ளவும்

குமாரசாமி பரஞ்சோதி, சாவகச்சேரி என்பவருடைய ஜேர்மன் முகவரி, தொலைபேசி இல. ஆகியவை இடப்பெயர்வு காரணமாக தவறவிட்டுவிட்டதாகவும், கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளும்படியும் அவருடைய சகோதரி பரமேஸ்வரி குமாரசாமி அவர்கள் தமிழீழத்திலிருந்து அறிவித்துள்ளார்.

சகோதரியின் தற்போதைய முகவரி:-
பரமேஸ்வரி குமாரசாமி
மே/பா.சிவப்பிரகாசம்,
தவமணிச்செல்வி த.சந்திரா
9 ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுகதை



# சுட்டும் விழிச்சுடர்

– கொற்றவை

அதிகாலை நான்குமணி இருக்கும். பனிக்குளிரின் போர்த்தலில் ஆழ்ந்திருந்தது அந்தக் கிராமம். வைகறைப் பொழுதுக்கேயுரிய இயற்கையின் இனிமையான சிரிப்பு. எழுவான் திசை வெளுக்கத் தொடங்கும் நேரம். அந்த நேர இனிமைக்குச் சுருதி கூட்டும் பறவைகளின் "கிலா கிலா"க்கள். அதிகாலையின் இன்பத்தைச் சிதைப்பதற்குத் திடீரென கிளம்பியது, "அவக்,அவக்" கெனக் குரைக்கும் நாய்களின் சத்தங்கள். நாய்களின் குரைப்பு கட்டியங்கூற அதனைத் தொடர்ந்து, பச்சைநிற வாகனங்களின் உறுமல் காற்றினிலேவந்து, ஊரவர்களின் செவிப்பறைகளிலே புகுந்து அவர்களின் கைகள் நெஞ்சைத்தடவ விழிகள் பிதுங்கி உருண்டன. வீடுகளின் விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டு எங்கும் நிசப்தம், நாய்களின் குரைப்பினைத் தவிர.

பனிக்குளிரின் இதத்தில் அமைதியான உறக்கத்தில் இருந்த ஊரவர்கள், அவதிஅவதியாக எழுந்து அக்கம்பக்கத்தவர்களுடன் "என்ன ஏது" என்று குசுகுசுக்கத் தொடங்கினர். எல்லோர் முகங்களிலும் பீதி. நெஞ்சு "திக், திக்" என்று, குறிக்கப்பட்ட தடவைகளையும்விட பலமடங்கு வேகமாகவும் சத்தமாகவும் துடிக்கிறது. அந்தப் பனிக்கூதலிலும் வியர்த்தது அவர்களுக்கு.

> வேலி களை வெட்டிக்கொண்டு வளவுகளிற்குள் பாய்ந்தவர்கள் வேலிகளிலுள்ள தடிகளை முறித்து அதனைக்கொண்டே பட்டி மாடுகளைக் காலைப் பொழுதுகளில் சாய்ப்பதுபோல குஞ்சு குருமன்கள், கிழவி குமர் என்று எல்லோரையும் பள்ளி மைதானத்துக்குச் சாய்த்துச்சென்றனர்.

"கடவுளே! வாறானுகள், வாறானுகள், எங்கட பிள்ளைகுட்டியளை என்ன செய்யப்போறானுகளோ தெரியா? அம்மாளாச்சி நீதான் காப்பாத்தனும்" பாறுவதிக் கிழவி தலைமேல் கைகுவித்து தனது குலதெய்வமான ஊர் அம்மனைத் தொழுகிறாள். அனேகமாக ஊரவர்கள் அனைவருமே தமது உயிரை அம்மாளாச்சியிடம்தான் அடைக்கலம் கொடுத்து வேண்டிக்கொண்டிருந்தனர்.

அதிகாலையிலே ஊரில் இருந்து இரண்டுமைல் தொலைவிலுள்ள இராணுவ முகாமிலிருந்து ரத்தப் பசியெடுத்தவர்களைக் காவிக்கொண்டு புறப்பட்ட பச்சைநிற வாகனங்கள் இப்போது கிராமத்தின் கிறவல் தெருக்களில் உறுமிக்கொண்டிருந்தன. கிராமத்தின் மௌனம் அவர்களிற்குத் துணிவையும் வெறியையும் மூட்டியது. வந்த வாகனங்கள் கிராமப்பாடசாலையின் மைதானத்தில் தரிக்க, "தொப் தொப்" பெனக் குதித்தவர்களின் முகங்கள் சிவந்து இறுகிக்கிடந்தன. பற்களை நறநறவெனக் கடித்தபடி இறங்கிய ஒரு அதிகாரி கட்டளைகளைப் பிறப்பித்தான். வெனது உத்தரவிற்கேற்ப நான்காகப் பிரிந்து நான்கு திசைகளிலும் புறப்பட்ட சீருடைகள் ஊருக்குள் புகுந்தன.

வேலிகளை வெட்டிக்கொண்டு வளவுகளிற்குள் பாய்ந்தவர்கள் வேலிகளிலுள்ள



தடிகளை முறித்து அதனைக்கொண்டே பட்டிமாடுகளைக் காலைப் பொழுதுகளில் சாய்ப்பதுபோல குஞ்சு குருமன்கள், கிழவி குமர் என்று எல்லோரையும் பள்ளி மைதானத்துக்குச் சாய்த்துச்சென்றனர்.

மைதானத்தைச் சென்றடையும் முன்னரே பல இளைஞர்களின் உடலில் இருந்த அரைவாசிக்கும் மேற்பட்ட இரத்தம் ஊர் மண்ணின் மீது வழிந்து விழுகின்றது. இரத்தம் சொட்டச்சொட்ட அவர்கள் மைதானத்திற்குக் கொண்டுவரப்பட்டனர்.

அங்கு ஆண், பெண் எனப் பிரிக்கப்பட்டு நிறுத்தப்பட்டவர்களின் முன்பு சீருடையில் இல்லாத ஒருவன், பெரிய கட்டுப்போட்ட காலை இழுத்துக்கொண்டு வந்தான். வாகனத்திலிருந்து இறங்கவே வெகுவாகப் பிரயத்தனப்பட்டவனின் கண்கள் ரத்தமெனச் சிவந்திருந்தன. முகத்தில் குரோதம் தாண்டவமாடியது. அவனை அடையாளங் கண்டுகொண்ட கிராமத்தவரின் உடல்கள் "கிடு கிடு" க்கத்தொடங்கின. இறங்கியவன் அவர்களைப்பார்த்து உறுமினான்.

"நீங்க எல்லாங் நம்மளைக் கண்டோன மட்டுங் சும்மா பயங் சொல்லுறது. கொட்டியா வந்தா அதோட சேர்ந்து நம்மளுக்கு மண் தீத்துறது" அவன் இவ்வாறு கத்தியதுதான் தாமதம், ஆலையில் இயந்திரங்களால் கரும்பு பிழியப்படுவதுபோல கிராம மக்கள் துவைத்து எடுக்கப்பட்டனர்.

அந்தப்போராளி மிகவும் களைத்திருந்தான். காட்டின் மைய முகாமிலிருந்து கிராமத்துக்கு முக்கிய வேலையாக அனுப்பப்பட்டிருந்த அவன், வந்த வேலையை முடித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான். ஐம்பதுமைல் தூரத்துக்கு மேலாக நடந்தபடியால் கால்கள் ஓய்வு கேட்டுக்கெஞ்சின. காட்டுப்பாதைகளின் முட்பற்றைகளினது உறுத்தலில் பாதங்களில் சிவப்புக் கோடுகளாகக் காயங்கள். பாதம் நிலத்தில் பதியும்போது காயங்கள் தாக்குப்பட்டு வலியில் உயிர்போய்வந்தது. முகாமிலிருந்து வெளிக்கிட்டதிலிருந்து எதுவுமே சாப்பிடவில்லை. சக்தி இழப்பு, சோர்வு, பசியினால் அவனது புலன்களின் சக்தி பெருமளவுக்கு மந்தமாயிருந்தது. மனத்தின் வலிமையும், இலட்சிய வேட்கையுமே அவனை உந்திக் கொண்டிருந்தன. தனக்கிடப்பட்ட முக்கிய பணியை மனத்தில் நினைத்தவன் உடலின் சோர்வையும், வேதனையையும், பசியையும் மீறி வேகமாக நடக்க முனைந்தான். அவனது விரல்கள் இடைக்கிடை தோளில்கிடந்த "டாஸ்ரூ"வைத் தடவின.

கிராமத்தைத் தாண்டிக் காட்டுமுகப்பை அடைந்தவனின் உள்ளுணர்வு, ஏதோ ஆபத்து எதிரில் இருப்பதாக உணர்த்த, தோளிலிருந்த "டாஸ்ரூ" கைக்கு வந்தது. இயங்கும் நிலையில் தயாராக, சகல புலன்களும் ஊசிமுனை அன்வினைக்கூடத் துல்லியமாக எடைபோடத் தொடங்கின. சற்று தூரத்தில் ஆட்காட்டி ஒன்று அவலக்குரல் எழுப்பிக்கொண்டு பறந்தது. சுற்றுப்புறங்களின் பற்றைகளிலிருந்து திடீரென உயர்ந்தன பச்சைத்தலைகள். அவற்றின் கைகளில் இருந்த ரவைகள் 'உய்'யிட்டுக்கொண்டு பறந்துவர, அவன் நிலத்தில் புரண்டு தனது ஆயுதத்தால் சில இடங்களைக் குறிவைத்து ஓரிரண்டு ரவைகளைச்செலுத்திவிட்டு குறித்ததொரு பாதையால் ஊர்ந்து, ஊர்ந்து கொஞ்சத்தூரம் முன்னேறியவன், எழுந்து ஓடத்தொடங்கினான்.

ஓடிக்கொண்டிருந்தவனை ரவைகள் துரத்தின. ஒரு கணத்தில் அவனது தொடையினைக் கிழித்துப் பிளந்து செல்கிறது அவற்றுள் ஒன்று. எலும்பு ரத்தம் கொட்ட தேகம் இனிமேல் இயங்காத நிலைக்குப்போகத் துடிக்கிறது. மனத்தின் பயத்தினால் மட்டும் இயங்கிக்கொண்டிருந்தவன் உடலின் ஒத்துழைப்பின்மையால் நிலத்தில் விழுந்து விடுகின்றான். உடல் மெல்ல மெல்ல அமைதியடைந்துகொண்டிருக்க,


> பனிக்குளிரின் இதத்தில் அமைதியான உறக்கத்தில் இருந்த ஊரவர்கள், அவதி அவதியாக எழுந்து அக்கம்பக்கத்தவர்களுடன் "என்ன ஏது" என்று குசுகுசுக்கத்தொடங்கினர். எல்லோர் முகங்களிலும் பீதி. நெஞ்சு "திக், திக்" என்று, குறிக்கப்பட்ட தடவைகளையும்விட பல மடங்கு வேகமாகவும் சத்தமாகவும் துடிக்கிறது. அந்தப் பனிக்கூதலிலும் வியர்த்தது அவர்களுக்கு.


இப்போது அவனது விழிகளில் மட்டும் ஒரு தீவிரம். உடலின் சக்தியெல்லாம் கைகளில் திரட்டி தனது ஆயுதத்தை அருகில் நின்ற மரத்தில் அடித்து உடைத்தவன் கழுத்தில் தொங்கிய "குப்பியை" வாய்க்குள் செருகிக் கொள்கிறான்.

சூரியக் கதிர்களே சிரமப்பட்டு உட்புகும் அடர்ந்தகாடு. அதனுள்ளிருக்கும் முகாமின் தளபதி தனது வீரர்களைக் கூட்டியிருக்கிறார். வீரர்கள் சீருடையில் ஆயுதங்களுடன் முன்னே வரிசையில் நிற்க: அவர் "ஊருக்குள் வேலையாய் போற பொடியனுகளை ஆமி வழியில் நிண்டு "அம்பூஸ்" குடுத்துக் கொல்ல அவனுகளை இப்படியே விட ஏலா, நல்லா ஒரு குடுவை குடுக்க வேணும், அப்பத்தான் அவன் அடங்குவான்" என்று தொடங்க, தமது தோழர்களில் சிலரை இவ்வாறு இழந்தது பற்றி குமுறிக்கொண்டிருந்த வீரர்களை

தொடர்ச்சி 19 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# “இராணுவங்களை கட்டுப்படுத்தும் சர்வதேச மனிதவுரிமை சட்டங்கள் தேசிய விடுதலை இயக்கங்களையும் கட்டுப்படுத்துகிறது”

## -பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராகக் குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19ம் திகதி முதல் நடைபெற்று வருவது நீங்கள் அறிந்ததே. ஒன்ராரியோ நீதிமன்றத்தில் நடைபெறும் இவ்வழக்கு விசாரணை நீதியரசர் Teitelbaum முன்னிலையில் நடைபெறுகிறது.

சுரேஷ் சார்பாக பிரபல சட்டத்தரணிகள் பாபரா ஜக்மன், லோர்ன் வோல்ட்மன் தோன்றி வாதாடுகிறார்கள். பல சர்வதேச சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் குறிப்பாக, பயங்கரவாதம் பற்றிய வரைவிலக்கணம், கோட்பாடு, இச்சட்ட நிபுணர்களது வாயிலாக நீதிமன்றத்தில் விளக்கப்பட்டது.

சுரேஷ் பயங்கரவாதத்தில் ஈடுபட்டார் அல்லது ஈடுபடுவார், சுரேஷ் பயங்கரவாதத்தில் ஈடுபடும் அமைப்பொன்றில் உறுப்பினராக இருந்தார் அல்லது இருக்கிறார் என்பதே குடிவரவுச் சட்டத்தின் கீழ் கனேடிய குடிவரவு அமைச்சர், சட்டமா அதிபர் இருவராலும் அவர்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களாகும். இப்படியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட அகதி கோரிக்கையாளர் அல்லது அகதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர் குடிவரவுச் சட்டத்தின் கீழ் "அனுமதிக்க முடியாத வகுப்பை சேர்ந்தவர்" என கணிக்கப்படுவார்.

சுரேஷ் ஐக்கிய நாடுகள் அகதிகள் சாசனத்தின் படி, அரசியல் அகதியாக 1991ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சட்டவிதிகள் 1988 ஆம் ஆண்டு அப்போது ஆட்சியிலிருந்த மிதவாதக் கட்சியால் சட்டமாக்கப்பட்டன. அப்போது எதிர்க்கட்சியாக இருந்த லிபரல் கட்சி இச்சட்டத்தை எதிர்த்து வாக்களித்தது. 1988 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் கனேடிய பாராளுமன்றத்தில் இந்த சட்ட விதிகள் சம்பந்தமாக நடந்த விவாதத்தில், லிபரல் கட்சியின் Immigration Critic ஆக அப்போதிருந்த Sergio Marchi, "இச்சட்ட விதிகள் கொடூரமானது; ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா கனடாவுக்கு வந்தால் இச்சட்டத்தின் கீழ் கைது செய்து சிறைக்குள் நீங்கள் தள்ளப்போகிறீர்களா?" என்று காட்டமாக வினாவினார். இன்று ஆட்சிக்கட்டிலைப் பிடித்து குடிவரவு அமைச்சரான பின்னர், அவரே எந்தச் சட்டத்தைக் காட்டமாகக் கண்டித்தாரோ, அதே சட்டத்தின் கீழ் சுரேஷ் அவர்களைக் கைது செய்து காராக்கிரகத்தில் அடைத்துள்ளார்.

அமைச்சரின் நடவடிக்கை சாட்சியங்கள், தகவல்கள் அடிப்படையில் நியாயமானதா என்பதையே நீதியரசர் தீர்மானிக்க வேண்டும்.

பயங்கரவாதம், உறுப்புரிமை இவற்றிற்குக் குடிவரவு சட்டத்தில் வரைவிலக்கணம் இல்லை. எனவே எது பயங்கரவாதம் என்பதிலேயே வழக்கின் முடிவு தங்கியிருக்கிறது.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது, "இலினோய்ஸ்" பல்கலைக்கழகப் பேராசிரியர் 'பிரான்ஸிஸ் பொயில்" சாட்சியம் அளித்தார். சட்டப் பேராசிரியரான இவரது சாட்சியத்தைச் சட்டத்தரணி பாபரா ஜக்மன் நெறிப்படுத்தினார்.

பேராசிரியரது தகைமைகள், பட்டங்கள், ஆராய்ச்சி இவை பற்றிய விபரங்களைச் சட்டத்தரணி பாபரா ஜக்மன், ஆரம்ப விசாரணையின்போது பேராசிரியரது வாய்மூல சாட்சியங்களினால் வெளிக்கொணர்ந்தார்.

பாபரா ஜக்மனின் பல கேள்விகளுக்குப் பதிலளித்த பேராசிரியர் பொயில், தனது பேராசிரியர் பதவியோடு தான் பாலஸ்த்தீனிய விடுதலை இயக்கத்தின் சட்ட ஆலோசகராகப் பணியாற்றிய விபரத்தையும் வெளியிட்டார்.

பலரது வேண்டுகோளுக்கு இணங்க பேராசிரியர் பிரான்ஸிஸ் பொயில் அவர்கள் அளித்த சாட்சியத்தின் முக்கிய பகுதிகளை தமிழில் மொழிபெயர்த்து கீழே தருகிறோம்.

**பாபரா ஜக்மன்:** நீதிபதி அவர்களே! எனது நண்பர் (அரச வழக்கறிஞர்) ஏதாவது கேள்விகள் சாட்சியின் நிபுணத்துவம் சம்பந்தமாகக் கேட்க விரும்பினால்.........!

**வயிலன்கோட்:** நான் கேட்க விரும்பும் கேள்விகள், நீதியரசர் ஏற்கனவே கேட்ட கேள்விகள் பற்றியது. பேராசிரியர் குயுக்லி போலவே, பேராசிரியர் அவர்களே! சிறிலங்காவின் நிலவரம் பற்றியும் விடுதலைப் புலிகளால் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவதாகச் சொல்லப்படும் போராட்டம் பற்றியும் நீங்கள் விரித்துக் கூற முடியுமா?

**சாட்சி:** நிச்சயமாக. நான் தினமும் ஐந்து புதினப்பத்திரிகைகளை வாசிக்கிறேன். அதைவிட வேறு கட்டுரைகளையும் வாசிக்கிறேன். நான் ஒரு சர்வதேச சட்டத்தரணி மட்டுமல்ல. நான் சர்வதேச உறவுகள் பற்றிய ஒரு நிபுணனுமாவேன். சிறிலங்காவில் நடைபெறும் போராட்டம் சம்பந்தமாக, முதலில் நான் உலக மன்னிப்புச் சபையில் பணி புரியும்போது அறிய நேர்ந்தது.

தமிழ் மக்கள் மீது சிங்கள அரசினால் இழைக்கப்படும் பாரிய மனிதவுரிமை மீறல்கள் பற்றி அறிந்து இருக்கிறேன்.

மன்னிப்புச்சபை.........

**நீதியரசர்:** ஐயா, நீங்கள் கொஞ்சம் விரைவாகப் போகிறீர்கள்.

**சாட்சி:** மன்னிக்கவும். மன்னிப்புச்சபை அவற்றை மிகப் பரவலாக ஆவணப்படுத்தியுள்ளது. அவற்றுக்கு எதிராகத் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு விடுதலைப் புலிகள் போராடுவது பற்றியும் எனக்குத் தெரியும்.

**நீதியரசர்:** நீர் பலவிதமான சொற்றொடர்களைப் பாவிக்கிறீர்....... இவை எனக்குப் புரியும்படியாக இல்லை. அல்லது நீர் ஏற்கனவே......... நீர் சொல்வதைப் பிழையென்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், விடுதலைப் புலிகள் தங்களது மக்களைப் பாதுகாக்கப் போராடுவது பற்றி உமக்குத் தெரியும் என்று சொல்கிறீர். இந்த வாக்குமூலத்தை இப்போது சொல்கிறீர். ஒரு நாளில் ஐந்து புதினப்பத்திரிகைகளைப் படித்துவிட்டு இந்த அறிவெல்லாம் உமக்கு எப்படி வந்தது என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

**சாட்சி:** நான் தினமும் ஐந்து பத்திரிகைகளைப் படிக்கிறேன்.......

**நீதியரசர்:** ஆக உம்முடைய அறிவெல்லாம் .........

**சாட்சி:** கடந்த 25 ஆண்டுகளாகப் படிக்கிறேன்.

**நீதிபதி:** ஆக தமிழ் மக்கள் பட்டதாகச் சொல்லப்படும் துன்பம் அல்லது படுகின்ற துன்பம், வகை ஐந்து பத்திரிகைகள் படித்ததால் தெரிய வந்தது என்கிறீர்?

**ஜக்மன்:** கௌரவ நீதிபதி அவர்களே!

**நீதியரசர்:** தயவு செய்து என்னைக் கேள்வி கேட்க விடுங்கள்.......

**ஜக்மன்:** இல்லை....... ஆனால் நாங்கள்......

**நீதியரசர்:** நீங்கள் ஏதாவது சொல்ல விரும்பினால், அதனை அவர் பதிலளித்தபின் சொல்லவும்.

**சாட்சி:** நான் அது பற்றித்தான் சொல்லியிருக்கிறேன். ஏற்கனவே நான் சொல்லியவாறு, நான் உலக மன்னிப்புச் சபையின் இயக்குநர் சபையில் ஒருவராக நான்கு ஆண்டுகள் பணியாற்றி இருக்கிறேன்.

**நீதியரசர்:** அப்படியென்றால் அங்கிருந்துதானா உங்களுக்கு இந்தத் தகவல்கள் கிடைத்தது?

**சாட்சி:** இங்குதான் நான் முதலில் வகையின் அளவு, அதன் பரப்புப் பற்றி அறிந்தேன். இவற்றை மன்னிப்பச்சபை ஆவணப்படுத்தி உள்ளது. மன்னிப்புச்சபை எழுதி வைத்திருப்பதை நியூயோர்க் ரைம்ஸ் அல்லது அமெரிக்காவிலுள்ள ஏனைய முக்கிய வெளியீடுகளைப் படிப்பதன் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளலாம். அத்தோடு வெளியுறவு, வெளிநாட்டுக் கொள்கை அல்லது ஏனைய பல மூலங்கள் வாயிலாகப் படித்து அறிந்துகொள்ளலாம்.

மேலும், நான் இங்கு சாட்சியம் அளிக்க வருமுன், இது சம்பந்தமாக எனது அறிவைப் பெருக்கவும், அதன் தன்மை, வீச்சு இவை பற்றி அறிந்துகொள்ளவும் சட்டத்தரணியால் எனக்கு பல ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. கடந்த இரண்டு மாதங்களாக நிலைமைகளின் தன்மை பற்றி புலமைவாய்ந்த கட்டுரைகளையும், புத்தகங்களையும் வாசித்து வந்திருக்கிறேன்.

**நீதியரசர்:** இதற்கு மேலாக நீங்கள் ஏதாவது சொல்லப்போகிறீர்களா?

**ஜக்மன்:** நீதிபதி அவர்களே! இந்தச் சாட்சியிடம் சில சமயங்களில் எப்படிக் கேள்விகள் கேட்கப்பட்டது பற்றி, இவர் சாட்சி சொன்னபோது பத்திரிகைகள் வாசித்தது பற்றியும், மன்னிப்புச்சபையின் இயக்குனர் சபையில் இருந்தது பற்றியும், எனக்கு விசாரமாக இருக்கிறது.

நீங்கள் இப்படி ஒரு கேள்வி கேட்டீர்கள், "அப்ப நீங்கள் பத்திரிகைகள் மட்டும்தான் வாசித்து இருக்கிறீர்கள்?" அது.......

**நீதியரசர்:** சரி. எனக்கு அவர் எதைப் படித்துக்கொண்டார், என்ன மாதிரியான தகவலைத் தெரிந்துகொண்டார் என்பது பற்றி எனக்குத் தெரியாது.

**ஜக்மன்:** நீங்கள் இப்படி.. ..

**நீதியரசர்:** இல்லை. நான் அவர் சொன்னதைக் கேட்டேன். புதினப்பத்திரிகைகள் படிப்பது பற்றி அவர் சொன்னதைக் கேட்டேன். எனக்குத் தெரியாது....... இவர் மன்னிப்புச்சபையில் இருந்திருக்கிறார் – இருமுறை தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் – ஆனால், அங்கிருந்து என்ன தகவல்களைப் பெற்றுக்கொண்டார் என்பது பற்றி எனக்குத் தெரியாது. அவர் சொல்லிய போது, "நல்லது எனக்கு இது நடந்தது தெரியும். எனக்கு இது நடந்தது தெரியும்." ஆனால், எதிலிருந்து என்பது எனக்குத் தெரியாது.

**ஜக்மன்:** நல்லது. அவர் சொன்னதுபற்றிய தப்பபிப்பிராயம் இதுவாகும். ஒரு சில சமயம் இது நடந்துள்ளது. அதுதான் எனது விசாரம். எப்படி ஒரு கேள்வி கேட்கப்பட்டது, அதற்குரிய பதில் எவ்வாறு ஒரு உண்மையென எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த உண்மை அந்தப் பதிலின் பிரதிபலிப்பு என்று கொள்ளவேண்டியதில்லை.

**நீதியரசர்:** ஜக்மன், எனது பிரச்சினை என்னவென்றால், இது பொதுவாக எல்லா நிபுணர்களுக்கும் பொருந்தும். நிபுணர்கள் தங்கள் நிபுணத்துவம் பற்றி சாட்சியம் அளிக்க முன்வரும்போது, யதார்த்தத்தோடு சாட்சியம் அளிக்கிறார்கள் என்பதுதான் எனது நம்பிக்கை. ஒரு நிபுணர் சாட்சியம் அளிக்கத் தொடங்கும்போது, "இந்த மக்கள் அனுபவிக்கும் வகை" என்று ஆரம்பிப்பது எனக்குப் பிரச்சினையாக இருக்கிறது. அப்படி இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. அதைப்பற்றிக் கேள்விகள் எதுவும் கேட்கப்படாதபோது, அப்படி இப்படி என்று சொல்வது யதார்த்தமாக இல்லை என்பதே. இதை மட்டும்தான் நான் சொல்லுகிறேன்.

**ஜக்மன்:** இவர் சர்வதேச சட்டத்தில் ஒரு நிபுணரென கணிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நீதியரசர்:** நிச்சயமாக.

**ஜக்மன்:** நன்றி. நீதிபதி அவர்களே!

**ஜக்மன்:**

**கேள்வி:** பேராசிரியர் பொயில் அவர்களே! நான் நினைக்கிறேன், முதலில் பயங்கரவாதம் பற்றிய வரையறை பற்றி ஆரம்பிக்கலாம் என்று. பயங்ரவாதத்துக்கு ஏதாவது வரையறை உண்டா?

**பதில்:** இல்லை. ஐக்கியநாடுகள் பல ஆண்டுகளாக முயற்சி செய்தது. கௌரவ நீதிபதி அவர்கள் இதனை என் புத்தகத்தைப் படித்து அறிந்து கொள்ளலாம். நான் சொல்லியவாறு அந்தப் புத்தகம் சலிப்பான புலமைப் புத்தகம். அதில் பல அடிக்குறிப்புகள் இருக்கின்றன. அதனால்தான் அந்தப் புத்தகம் மிகவும் சிறப்பான கல்வி நூல் எனத் தெரிவுசெய்யப்பட்டது. உண்மையில் அது சிறப்பான கல்வி நூல்தான். நான் எதனைச் சொல்ல முடியும்?

அது ஒரு பகையான நூல் என

தொடர்ச்சி 18 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உலக அரங்கு

# ஜெனரல் அய்டீட்டின் மரணத்தின் பின்னால் சமாதானம் மலருமா?

சாள்ஸ் தேவசகாயம்

சோமாலியாவின் மிகப் பலம் வாய்ந்த "குலத்தலைவன்" ஜெனரல் முகமட் பாரா அய்டீட் ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் கொல்லப்பட்ட செய்தி, மேற்குலக நாடுகளுக்குக் குறிப்பாக அமெரிக்காவிற்கு மகிழ்ச்சியைத் தந்தது.

சோமாலியாவில் வந்திறங்கிய அமெரிக்க அமைதி காக்கும் படையினரில் சிலர், ஜெனரல் அய்டீட்டின் போராளிகளினால் கொல்லப்பட்டதனை அடுத்து, அமெரிக்கப் போர் வீரர்கள் அனைவரும் அவமானத்துடன் அவசர அவசரமாக வெளியேறியது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இதனையடுத்து, சோமாலியச் சம்பவங்கள் உலக நாடுகளினால் பெரிது படுத்தப்படவில்லை.

எனினும் உள்நாட்டுப் போர் தொடர்ந்து கொண்டே இருந்ததுடன், சோமாலியாவில் சமாதானம் ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது ஜெனரல் அய்டீட்டே என்ற கருத்தும் மேற்கு நாடுகளினால் முன்வைக்கப்பட்டது.

எனவேதான், தற்போது அய்டீட் கொல்லப்பட்டதனையடுத்து அதிகாரத்துக்குப் போராடும் வேறுபட்ட குழுக்கள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து சமாதானத்தை நோக்கிச் செயற்படுவர் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, இக்குழுக்களின் பொது எதிரியான அய்டீட் அகற்றப்பட்டதனையடுத்து இக்குழுக்கள் மீண்டும் தமக்கிடையே போராட்டத்தை ஆரம்பிக்கலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

சோமாலியாவின் தலைநகரான மொகாடிசுவில் யூலை 24ல் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையின்போது 62 வயதான அய்டீட் காயமடைந்தார். எனினும் அய்டீட்டின் ஆதரவாளர்கள் ஆரம்பத்தில் இச்செய்தியை மறுத்தார்கள். ஆனால், பல நாட்கள் அய்டீட் வெளிவிவகாரங்களில் ஈடுபடாததால் அவர் பற்றிய பலவிதமான வதந்திகள் உலாவத் தொடங்கின.

இறுதியாக ஆகஸ்ட் 2ம் திகதி காலையில் இவர் மரணித்த செய்தி பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. முஸ்லிம் வழமைக்கிணங்க அன்று மாலையே அவரது பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது.

துப்பாக்கிக் காயங்களுக்காக நடந்த சத்திர சிகிச்சையினையடுத்து, அய்டீட்டுக்கு மாரடைப்பு ஏற்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அய்டீட் குழுவினரால் ஒலிபரப்பப்படும் வானொலிச் செய்தியில் "தேசியக் கடமையில் ஈடுபட்டிருந்தவேளை அய்டீட் மரணமானார்" என்று மட்டும் கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது. துப்பாக்கிச் சண்டையில் காயமடைந்தார் என்ற செய்தி இருட்டடிப்புச் செய்யப்பட்டது.

மொகாடிசுவின் தென்பகுதியில் உள்ள தமது குலத்தின் ஆளுமைப் பிரதேசத்தில் நடைபெற்ற இறுதிக் கிரியைகளின்போது, 10,000க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

> மேற்கு நாடுகள் அய்டீட்டை சமாதானத்தின் எதிரியாக வர்ணித்தாலும், தனது குல மக்களினால் அவர் பெரும் மாவீரனாகவே கணிக்கப்பட்டார். மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ரொயாட்டா பிக்கப் வாகனத்தில் தனது கொடியினால் மூடப்பட்ட பூதவுடலைத் தாங்கிய பேழை வீதியால் கொண்டுசெல்லப்பட்டபோது, இரு மருங்கிலும் வரிசையாக நின்று இறுதி அஞ்சலிசெய்த மக்கள் கதறி அழுததினைக் காணக்கூடியதாக இருந்தது.

மேற்கு நாடுகள் அய்டீட்டை சமாதானத்தின் எதிரியாக வர்ணித்தாலும், தனது குல மக்களினால் அவர் பெரும் மாவீரனாகவே கணிக்கப்பட்டார். மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ரொயாட்டா பிக்கப் வாகனத்தில் தனது கொடியினால் மூடப்பட்ட பூதவுடலைத் தாங்கிய பேழை வீதியால் கொண்டுசெல்லப்பட்டபோது, இரு மருங்கிலும் வரிசையாக நின்று இறுதி அஞ்சலிசெய்த மக்கள் கதறி அழுததினைக் காணக்கூடியதாக இருந்தது.

அமெரிக்கா மற்றும் ஐ. நா சமாதானப் படைகள் சோமாலியாவை விட்டுச் சென்ற பிறகு அலிமகிடி முகமட் என்பவர் தலைமையில் இயங்கும் குழுவினருடன், அய்டீட்டின் போராளிகள் மோதிய வண்ணம் இருந்தனர். அலிமகிடியும் 1991ல் இருந்து நாட்டின் தலைமைப் பதவிக்குப் போராடி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அய்டீட்டின் உறவினரும் முன்னாள் பங்காளருமான ஒஸ்மான் ஹஸன் அலி என்பவர், கடந்த வருடம் மார்ச் மாதத்தில் அய்டீட்டுடனான தனது உறவினைத் துண்டித்துக்கொண்டது பெரும் திருப்புமுனையாக அமைந்தது. அய்டீட்டிற்கு நிதியுதவி வழங்கிவந்த பலம்வாய்ந்த அலிமகிடி, அண்மைக்காலங்களில் அய்டீட்டின் ஆளுமைக்குட்பட்ட மொகாடிசுவின் தென்பகுதியில் உள்ள கணிசமான பகுதியைக் கைப்பற்றியதாகக் கூறப்படுகின்றது.

இறுதிச் சண்டையின்போது, இரு தரப்பிலும் 150 பேர்வரை கொல்லப்பட்டதுடன் 400க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இறுதியாக இச்சண்டை அய்டீட்டின் உயிருக்கும் உலை வைப்பதாக அமைந்துவிட்டது.

## சோமாலியா:

உலக வல்லரசான அமெரிக்காவையே தனது நாட்டில் இருந்து பின்வாங்கச் செய்த அய்டீட் இறுதியில் தனது சகபாடி ஒருவரினால் கொல்லப்பட்டுள்ளார்.

சோமாலியாவில் 1990ல் இருந்து சன்னங்களைப் பாய்ச்சி வந்த துப்பாக்கிகள், அய்டீட்டின் இறப்புடன் ஓய்ந்துள்ளன. அய்டீட்டின் எதிர்த்தரப்பினரான அலி மகிடியும், ஒஸ்மான் அலியும் போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்துள்ளதே இதற்கான காரணமாகும்.

அய்டீட்டின் இறப்பினை அடுத்து, மொகாடிசுவின் வடக்குப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் அலி மகிடியே இன்று சோமாலியாவில் மிகப் பலம்வாய்ந்த குலத்தலைவனாகக் கருதப்படுகின்றார். இவரின் கீழ் பல குலத்தலைவர்கள் அணிவகுத்து நிற்கின்றனர்.

அய்டீட்டின் முன்னாள் சகபாடியான ஒஸ்மான் அலியும், அலிமகிடியும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில் தேசிய புனருத்தாரண மாநாடு கூட்டப்படுவதற்கான அவசியத்தை வலியுறுத்தியதுடன், சனாதிபதிப் பதவிக்கு அய்டீட்டின் வாரிசுகள் உரிமை கோரக்கூடாது எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அலிமகிடி பத்திரிகையாளர்களுக்கு மேலும் தெரிவிக்கையில், "அய்டீட்டின் இறப்பு சமாதான மாநாட்டுக்கு வழிவகுத்துள்ளது. சர்வதேச சமூகம் இச்சந்தர்ப்பத்தில் இவ்வகையான மாநாட்டுக்கு உதவிபுரிய வேண்டும்" என்றும் "சோமாலிய மக்களால் தமது பிரச்சனைகளைத் தீர்க்க முடியாதுள்ளது. எனவே சர்வதேச நாடுகளின் ஆதரவு அவசியமாகின்றது" என்றும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை, அய்டீட் ஆதரவு வானொலியில் 30 நாட்கள் துக்கம் அனுட்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதுடன், அய்டீட்டின் குடும்பத்தினருக்கு அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது. அய்டீட் இறக்கும்போது தனது 3வது மனைவியுடன் வாழ்ந்து வந்தார் என்பதும் அவருக்கு 14 பிள்ளைகள் உள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கது.

சோமாலியாவில் ஆட்சிசெய்து வந்த சர்வாதிகாரியான முகமட் சியாட் பாரேயை அகற்றுவதற்காக 1991 சனவரியில் இராணுவ கிளர்ச்சி ஒன்றினை நடாத்தியதில் இருந்து, அய்டீட் உலக நாடுகளின் கவனத்தைப் பெற்றார். எனினும் அவருடன் இணைந்து செயற்பட்ட அலி மகிடிக்கும், அய்டீட்டுக்கும் இடையே யார் சனாதிபதியாவது என்ற கருத்து வேறுபாடு எழும்பியது. இதனைத் தொடர்ந்து, சில மாதங்களில் சோமாலியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

இதற்கு மத்தியில் 1992ல் சோமாலியாவில் ஏற்பட்ட மிகமோசமான பஞ்சத்தினாலும், நடந்துகொண்டிருந்த போரினாலும் 350,000 பேர்வரை கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1992 மே மாதத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள் பாரிய உதவி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தனர். வழங்கப்பட்ட உணவு வகைகள் ஒழுங்காக விநியோகிக்கப்படுகின்றனவா? என்பதனை மேற்பார்வை செய்வதற்காக 1992 செப்ரெம்பர் மாதத்தில் 3,000 ஐ.நா படையினர் சோமாலியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவ் உணவுப் பொதிகள் வேறுபட்ட குழுக்களினால் அடிக்கடி சூறையாடப்படுவது வழமை. அதே வருடம் டிசம்பர் மாதத்தில் அமெரிக்கப் படைகள் வந்திறங்கியதனை அடுத்து, ஒரு தற்காலிக அமைதி நிலவத் தொடங்கியதுடன் அது பஞ்சம், பட்டினியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் உதவியாக இருந்தது.

ஆனால், ஐ.நா. படைகள் அநாவசியமாகத் தலையிடுகிறார்கள் எனும் கருத்தைக் கொண்டிருந்த அய்டீட், தான் சனாதிபதியாக வரக்கூடாது என்பதே அவர்களின் உள் நோக்கம் எனப் பலமாக நம்பினார். அய்டீட்டின் போராளிகள் 1993 யூன் மாதத்தில் 24 பாகிஸ்தானிய அமைதிகாக்கும் படையினரைக் கொன்றதை அடுத்து, அய்டீட்டைக் கைது செய்யுமாறு ஐ.நா. சபையினால் பிடி ஆணை வழங்கப்பட்டது.

அய்டீட்டைத் தேடிப் பிடிக்கும் பொறுப்பு, அமெரிக்கத் துருப்பினர் மீது சுமத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, 1993 அக்டோபர் மாதத்தில் அய்டீட்டின் ஆளுமைப் பகுதி மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 18 அமெரிக்கத் துருப்பினரும், சுமார் 300 சோமாலியரும் கொல்லப்பட்டனர். இவ்வாறு கொல்லப்பட்ட அமெரிக்க வீரன் ஒருவனின் சடலம், மொகாடிசுவின் வீதிகளில் கட்டி இழுக்கப்பட்ட காட்சி உலக நாடுகளின் தொலைக் காட்சிகளில் முக்கியத்துவம் கொடுத்துக் காட்டப்பட்டது. இச்சம்பவத்தினைப் புகைப்படம் எடுத்த ரொரண்டோ ஸ்ரார் பத்திரிகையின் நிருபர் போல் வட்சன், பின்னர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

> மனிதாபிமான நடவடிக்கைக்காக வந்தவர்கள் எனக் கூறப்பட்ட அமெரிக்கப் படையினர், திடீரென போராட்டத்தில் சிக்குப்பட்டுப் போனதை உணர்ந்துகொண்டனர். மொத்தமாக 30 படையினரைப் பலிகொடுத்த அமெரிக்கா, அவமானம் தாங்காது ஒரு சில மாதங்களில் தனது துருப்பினரை மீளவும் எடுத்துக் கொண்டது. இதனைத் தொடர்ந்து, ஒரு வருடத்துள் ஐ.நா வின் ஏனைய துருப்பினரும் சோமாலியாவை விட்டகன்றனர். இந்தப் பின்னணியிலேயே வேறுபட்ட குழுக்களிடையே மோதல்கள் ஏற்பட்டு இறுதியில் அய்டீட் கொல்லப்பட்டார்.

மனிதாபிமான நடவடிக்கைக்காக வந்தவர்கள் எனக் கூறப்பட்ட அமெரிக்கப் படையினர், திடீரென போராட்டத்தில் சிக்குப்பட்டுப் போனதை உணர்ந்துகொண்டனர். மொத்தமாக 30 படையினரைப் பலிகொடுத்த அமெரிக்கா,

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நெதர்லாந்தில் புனர்வாழ்வுக் கலைமாலை
# பணமாகவும் நகையாகவும் மக்கள் நன்கொடை

நெதர்லாந்தில் கடந்த 21-09-96



அன்று Beverwijk எனும் இடத்தில் புனர்வாழ்வுக் கலை மாலை நிகழ்ச்சி தமிழர் புனர் வாழ்வுக் கழக நெதர்லாந்துக் கிளையினரால் நடாத்தப்பட்டது.

தமிழீழத் தேசிய கீதத்தைத் தொடர்ந்து அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது.

வரவேற்புரையை, தமிழர் புனர்வாழ்வுக் கழக உப தலைவர் திரு. சபாரட்ணம் அவர்கள் நிகழ்த்தியதைத் தொடர்ந்து, நடன நிகழ்சிகள் இடம்பெற்றன. யேர்மன் நாட்டிலிருந்து வந்த தமிழர் கலை பண்பாட்டுக் கழக யேர்மன் கிளைப் பொறுப்பாளர் திரு. சிவநாதன் அவர்கள் சிறப்புரையாற்றினார். தமிழர் கலை பண்பாட்டுக் கழக நெதர்லாந்துக் கிளையினரால் திரு. இளவரசன் அவர்களின் நெறியாள்கையில் 'குந்த ஒரு குடிநிலம்" என்ற நாடகம் அரங்கேற்றம் பெற்றது.

இடைவேளையைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் நெதர்லாந்துக் கிளை நிதிப்



பொறுப்பாளர் திரு. நங்கன் அவர்கள் ஆசியுரை வழங்கினார். நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த பெரும்பாலான மக்கள் தாய் நாட்டில் இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கான புனர்வாழ்வுத் திட்டத்திற்குத் தமது பங்களிப்புக்களை பணமாகவும் தங்க நகைகளாகவும், பொருள்க ளாகவும் நெதர்லாந்துக் கிளையின் புனர்வாழ்வுப் பொறுப்பாளரிடம் கையளித்தனர். இதன் பின்னர் நடைபெற்ற அதிஸ்டலாபச் சீட்டிழுப்பில், பரிசு பெற்றவர்கள் தாமாகவே முன்வந்து தமது பரிசில்களைத் தாய் நாட்டு மக்களுக்காக மீண்டும் திருப்பி ஒப்ப டைத்துள்ளனர்.

இறுதி நிகழ்ச்சியாகத் தமிழர் கலை பண்பாட்டுக் கழக நெதர்லாந்துக் கிளையின் இசைக்குழு புரட்சி இசைய முதம் எனும் இசை நிகழ்ச்சியை வழங்கியது. "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்"" என்ற பாடலுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. ✷

## இராணுவங்களை கட்டுப்படுத்தும்....

எந்தவிதத்திலும் சொல்ல முடியாது.

1972 தொடக்கம் ஐ. நாடுகள் சபை பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் வகுக்க எடுத்த முயற்சி பற்றிய வரலாறு முழுவதையும் நான் படித்தி ருக்கிறேன். ஐக்கிய அமெரிக்க அரசு பயங்கரவாதத்துக்கு எதிராக ஒரு நகல் மரபைக் கொண்டு வந்து அதற்கான ஒரு பயங்கரவாதம் பற்றிய குழுவையும் ஏற்படுத்தியது. ஆனால், அக்குழுவினால் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட – சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பயங்கர வாதம் பற்றிய வரை விலக்கணத்தை எழுத, முற்றாக முடியாமல் போய்விட்டது. ஏன் முடியவில்லை என்பதற்கு ஒரு காரணம் இருந்தது.

இலத்தின் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா, சமவு டமை நாடுகள், ஐரோப்பிய நாடுகள் சிலவற்றைச் சேர்ந்த அரசுகள் ஒரு தேசிய விடுதலை இயக்கம் பயங்கர வாத இயக்கம் என்றோ, பயங்கரவாதச் செயல்களை இழைக்கும் இயக்கம் என்றோ கருதப்படும் எண்ணத்தோடு ஒத்து ப்போகவோ அல்லது அந்த வரைவிலக்கணத்தை ஏற்றுக்கொள்ளவோ விரும்ப வில்லை. பல ஆண்டுகளாக அப்படியும், இப்படியும் போய்விட்டு, இந்தக் கேள்வி பற்றி விவாதித்துவிட்டு, ஐக்கிய நாடுகளிலும், 1974–77 மட்டும் ஜெனிவாவில் நடந்த மனிதா பிமான சட்டம் பற்றிய மாநாட்டிலும் தேசிய விடுதலை இயக்கங்கள் பற்றிய கருத்து ஒருமைப்பாடு உருவாக் கப்பட்டது.

இன்று தேசிய விடுதலை இயக்கங்களது வரை விலக்க ணம் பற்றி பேராசிரியர் குயுக்லி சொல்லியவாறு தேசிய விடுதலை இயக்கங்கள், இராணு வத்துக்குரிய சர்வதேச மனிதா பிமான சட்டங்களுக்கு உட்படுத்தப்படும். அதாவது, 1977இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜெனிவா மரபுகள், மற்றும் ஒப்பந்தம் 1 இந்த தேசிய விடுதலை இயக்கங்களைக் கட்டுப்படுத்தும்.

தொடரும்.........

## பாண்டவர்கள் வெல்வார்கள் . . .

ஆதரிக்காது என தெளிவாக அறிவித்து விட்டார்.

மிதவாதத் தமிழ்க் குழுக்கள், தாங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டதுபோல, விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைக்கக்கூடாது என இப் போது கெஞ்சுகின்றன.

அமைச்சர் தொண்டமான் தொட்டு சிவசிதம்பரம் ஈறாக சிறிலங்கா அரசு யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்று சொல்கிறார்கள்.

அமைச்சர் தொண்டமான் வட – கிழக்கு நிர்வாகத்தை ஐந்து வருடங்களுக்கு விடுதலைப் புலிகளது கையில் விட்டு விடுங்கள் என்று பகிரங்க வேண்டுகோள் ஒருமுறையல்ல, பலமுறை விடுத்துள்ளார்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா 'மிகக் கூடிய கெதியில் ஈவிரக்கமற்ற எல்.ரி.ரி.ஈ யினரின் கட்டுப்பாட்டில் இருந்து வடக்கு விடுவிக்கப்பட்டு அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும்' என்கிறார்.

இது சனாதிபதி சந்திரிகா, அரசியற் தீர்வுத் திட்டமென்ற மாயமானைக் காட்டி விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் ஒழிக்கக் கங்கணங் கட்டி வருவதைக் காட்டுகிறது. விடுதலைப் புலிகளை அழித்து விட்டால், பின் இனப்பி ரச்சினைக்குத் தீர்வே தேவை யில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், இதில் சனாதிபதி சந்திரிகா வெற்றிபெறப் போவதில்லை என்பது மட்டும் உறுதி.

பாரதப் போரில் நீதி, பாண்டவர் பக்கம் இருந்ததுபோல ஈழப்போரில் நீதி, தமிழ் மக்கள் பக்கம் இருக்கிறது.

இறுதியில் பாண்டவர்கள் வெல்வார்கள். கௌரவர்கள் தோற்பார்கள். இது நான்கு மறைத் தீர்ப்பு. ✷

## சுட்டும் விழிச்சுடர்.....

அவன். ஆத்திரம் தீரும் வரை மக்களை வதைத்து முடித்துவிட்டு வாகன ங்களில் ஏறிக்கொள்கின்றன பேய்கள். உறுமிச்செல்லும் வாக னங்களைப் பார்த்து மண் அள்ளித் திட்டித் தனது மன வேக்காட்டைப் பார்வதிக் கிழவி தணித்துக் கொள்கிறாள்.

"முதலை கொண்டு போ வானுகளே, கண்ணி வெடியில போவானுகளே........."

காலுடைந்து, கையுடைந்து, இடுப்புடைந்து, முகம் கிழிந்து, எலும்பு நொருங்கிக் கிடந்த மக்கள் மெது மெதுவாக இழுத்து இழுத்து முனகியபடி தமது வீட்டுக்குப் போகத் தொடங்கினார்கள். வீட்டுக்குப் போனவர்களில் கோயில் வண்ணக்கர், பள்ளிப் பெரியவாத்தியார், முருகே சுப்போடியார், அம்மாளாச்சி கோயில் பூசாரியார் ஆகியோரின் மக்கள் இல்லை. அவர்கள் "அண்ணன்" மார்களின் பாசறை நோக்கிப் பயணி த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் முகத்தில் இப்போது அடிவாங்கிய வேதனை இல்லை.

"என்ன போடியார், இப்ப அவனுகள் ஊர்த்தொங்கலில ஒளிச்சுக் கிடந்து நம்மட பொடியனுகளை சுடுகிறல்ல இல்லியா?" கோவில் பூசைக்குப் போறதுக்கு ஆற்றில் இறங்கிய பூசாரியார் தண்ணி எடுக்கவந்த போடியாரிடம் கேட்கிறார். ✷

## இலங்கைத் தீவில் நிலவும் . . .

அந்நிய இராணுவங்களின் பிரசன்னம் இலங்கைத் தீவில் எப்பகுதியிலும் தேவையில்லை. இராணுவ விரிவாக்கம் மக்களின் நிம்மதியான வாழ்வைப் பறிக்கத்தான் உதவுமே தவிர வேறு எதற்கும் பயன்படாது.

ஏனவே, சிங்கள இராணுவ விரிவாக்கத்தை நிறுத்தி, சிங்கள மக்கள் வாழ்வது போன்று தமிழ் மக்களும் சகல உரிமைகளும் பெற்று தமிழீழ மண்ணில் சுயநிர்ணய உரிமை உள்ள மக்களாக வாழக்கூடிய முறையிலான அரசியற் தீர்வைக் காண தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லும்படி, சிங்கள மக்கள் சிறிலங்கா அரசை வற்புறுத்த வேண்டும்.

அதேநேரத்தில், வெளிநாடுகள் தமது பொருளாதார இராணுவ நலன்களுக்காக இலங்கைத் தீவில் வாழும் இரண்டு தேசிய இனங்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்கக்கூடாது.

இரண்டு தேசிய இனங்களும் தமக்குரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியல் தீர்வு ஒன்றைக் காணும்படி இருதரப்பினரையும் நீதியான முறையில் ஊக்குவிக்க வேண்டும்.

இந்த ஊக்குவிப்புக்கு முன்னோடியாக, சிறிலங் காவிற்கான சகல உதவிக ளையும் சர்வதேச சமூகம் தற்காலிகமாக நிறுத்த வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதன் தலைவர் திரு. வே. பிரபாகரனையும் தமிழீழ மக்களின் போராட்ட இயக்கமாகவும் தமிழீழ மக்களின் தேசியத் தலை வராகவும் அங்கீகரிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட மாற்றங்களின் ஊடாக இலங்கைத் தீவில் ஏற்படுத்தப்படும் சமாதானமே நீண்டு நிலைக்கக் கூடிய நிரந்தர சமாதானமாக அமையும். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யேர்மனியில் தியாகி திலீபனின் நினைவு நாள்

28-09-1996 சனிக்கிழமையன்று யேர்மனியின் வூப்பெற்றால் நகரில் தியாகி திலீபன் நினைவு நாள் நிகழ்வு நடைபெற்றது.

மேற்பிரிவு, மத்தியபிரிவு, கீழ்ப் பிரிவு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடாத்தப்பட்ட திலீபன் நினைவுப் பேச்சுப் போட்டியில் யேர்மனியின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் கலந்து கொண்டனர். போட்டி முடிவுகள் அன்று மாலை நடைபெற்ற கலை நிகழ்ச்சியின் போது அறிவிக்கப்பட்டு சான்றிதழ்களும் நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

மாலை 5.00 மணிக்கு மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான கலை நிகழ்ச்சியில், மலர் அஞ்சலியுடன் வாத்திய அஞ்சலியும் இசைக்கப்பட்டது. வெற்றியீட்டிய போட்டி யாளர்களின் பேச்சுக்களும் இடம் பெற்றன. விடுதலை உணர்வுடன் சிறுவர்கள் பேசியபோது, ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்தும் மண்பற்று மாறாத மாணவர்களைக் காணக்கூடியதாய் இருந்தது. விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழக நடனக் கலைஞர்களைக் கொண்டு தமிழீழ விடுதலைப்பாடல்களை உள்ளடக்கிய கதைத் தொகுப்புக்கள் இரண்டு மேடையேறின. கண்ணனின் தமிழிசை, விடுதலைக்கீதங்களை உணர்வு பொங்கத் தந்தது. இலியாஸ்பிள்ளையின், 'நடுவீட்டுப் பிசாசுகள்' என்ற நகைச்சுவை அம்சமும், தா. சிவநாதனின் 'பங்களிப்பு' என்ற நாடகங்களும் நடந்தேறின. பங்களிப்பு நாடகத்தில் நடித்த சிறுவர்களின் நடிப்பும் இயக்கமும் பலரதும் பாராட்டையும் பெற்றது. தமிழீழத் திரைப்படப்பாடல்களின் தொகுப்பு ஒன்று ஒளியிழைப் பேழையாக கடற்கரும்புலி நகுலனிற்கு சமர்ப்பணமாய் வெளியீடு செய்யப்பட்டது. இந்த ஒளியிழைப் பேழையை தமிழீழ விடுதலைப் புலிகளின் யேர்மனிக் கிளை தயாரித்து வெளியிட்டது. வெளியீட்டு உரையில் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் கா. சிவநாதன் பேசும்போது, கரும்புலியாக நடித்தவர் பின் கரும்புலியாக வெடித்தவர் மாவீரர் நகுலன் எனக் குறிப்பிட்டார். ✷




# சுவிசில் தியாகி திலீபனது நினைவெழுச்சி

கடந்த 22-09-96 அன்று சுவிஸ் பாசல் நகரில் தியாகி திலீபனது 9வது நினைவெழுச்சி விழா மக்களினால் உணர்வு பூர்வமாக நினைவு கூரப்பட்டது. தமிழீழத் தேசியக் கொடியேற்றல், அமைதி வணக்கம், ஈகைச் சுடரேற்றலுடன் வருகை தந்திருந்த மக்கள் அனைவரும் தியாக தீபம் திலீபனுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.




விழாவில் கலை நிகழ்வுகளாக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் திலீபன் கீதாஞ்சலியுடன் போர்க்கால ராகங்களும் இசைக்கப்பட்டன. பின்னர் நடனம், பேச்சு, கவிதை, நாடகம் என நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. நடனங்களை பாசல் கலாநிகேதன் நாட்டியாலய ஆசிரியை திருமதி சிறீதரன் பவானி அவர்களின் மாணவிகளும் திருமதி தர்மராஜா பத்மா, திருமதி கிருபைராஜா தயானி ஆகியோரின் மாணவிகளும் வழங்கினர். இதில் குறிப்பிட்ட சில பாடலுக்கான நடனங்கள் திறமையாக அபிநயிக்கப்பட்டன.

சிறுவர் பேச்சு, கவிதைகள் தியாகி திலீபனின் தியாகத்தைப் போற்றி முழங்கின. திரு. அல்பேட் அவர்களின் சிறப்புரையைத் தொடர்ந்து வந்த குழந்தை சண்முகலிங்கத்தின் 'தாயுமானவர் நாயுமானவர்' என்ற நாடகம் அனைவரது பாராட்டையும் பெற்றது. இதில் பங்காற்றிய அனைத்துக் கலைஞர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

தமிழீழத் தேசியக் கொடியினைத் திரு.த. மகேந்திரராஜா அவர்கள் இறக்கி வைக்க, விழாவில் பங்குபற்றிய அனைத்துக் கலைஞர்களும் மேடையில் நின்று வழமைபோல் "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"" என்ற பாடல் அனைவராலும் கரகோசத்துடன் பாடப்பட்டு நினைவு கூரல் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன. ✷

# பிரமாண்டமான பிரச்சாரப் போர்

சிறிலங்கா அரசின் சதிகாரச் செயலினால் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி கைது செய்யப்பட்டு ஆறு மாதங்களாகத் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளதைக் கண்டித்தும், அவரை விடுதலை செய்யக் கோரியும், சிங்கள இனவாத அரசு தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற் கொள்ளும் இன அழிப்பையும், தாயகத்தில் எம் உடன் பிறப்புக்கள் படும் அவலத்தையும் சுவிஸ் மக்களுக்கு எடுத்துக்கூறும் வகையில் சுவிசின் அனைத்து நகரங்களிலும் பிரச்சாரப் போர் நடைபெற்றது. இப் பிரச்சாரப் போரினை, சுவிஸ் அனைத்துத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு ஒழுங்கு செய்திருந்தது. காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை புதிய முறையில் நடைபெற்ற இப் பிரச்சாரப் போரில் ஒவ்வொரு நகரங்களிலும் பல நூற்றுக் கணக்கான மக்கள் திரு.முரளிதரனின் படம் அச்சிடப்பட்ட 'ரீசேட்' அணிந்து யேர்மன், இத் தாலி, பிரெஞ்ச் மொழிகளில் அச்சிடப்பட்ட சுமார் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

கடந்த மாதம் சூரிச் நகரில் மாத்திரம் ஒரு வாரமாக நடைபெற்ற இப் பிரச்சாரப் போரில் 125,000 இற்கும் மேற்பட்ட துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன் இப் பிரச்சாரத்திற்குச் சுவிசின் அனைத்து வெகுசனத் தொடர்பு சாதனங்களும் முக்கியத்துவம் கொடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. ✷



## [illegible]..

உற்சாகம் தொற்றிக் கொண்டது. தாக்குதலுக்கான தந்திரோபாயம் தெரிவு செய்யப்பட்டு, இடம் தீர்மானிக்கப்பட்டு படையணிகளைப் பிரித்து அவர்களிற்குத் தாக்குதல் குறித்து விரிவாகத் தளபதி விளக்குகிறார். காலை நேரம், இளவெய்யிலில் படையணி ஒன்று காட்டு முகப்பை நோக்கி ஒரே சீராக நகர்கிறது.

இராணுவ முகாமிலிருந்து ஒரு மைல்தூரம் காட்டு முகப்பினைத் தொட்டுச் செல்லும் பெருந்தெரு. அதன் இரு மருங்கிலும் வாய்ப்பான இடங் களைத் தெரிவு செய்து ஏற்கனவே சொல்லப் பட்டிருந்த தாக்குதல் திட்டத்திற் கேற்ப நிலை யெடுத்துக கொள்கிறது படையணி. அவ்நிலையிலிருந்து பார்க்கையில் பிரதான வீதியில் வந்து கொண்டிருந்த பஸ்வண்டி தெரிந்தது. அதை மறித்த தளபதி, சாரதியிடம் "நாங்கள் இவ்விடத்தில நிக்கிறதெண்டு அவனுகளிட்டச் சொல்லுங்க" என்று தூதனுப்புகிறார்.

தனது தோழனைக் காட்டுக்குள் பதுங்கியிருந்து கொனறவர்களை நேரடிச் சண்டைக் கழைக்கும் தூது அது.

மாலை மயங்கத் தொடங்கும் நேரம். சூரியன் படுவான் திசையில் அரைவாசிக்கும் கீழிறங்கி விட்டான். பொற் கதிர்களின் ஒளியில் காடு முழுகிக்கொண்டிருந்தது. அடிவானம் சிவந்திருந்தது. தூரத்தில் பச்சை நிறவாகனங்களின் உறுமல் மெதுவாகக கேட்கிறது. இவர்களின் நிலைகளிற்கு இடையில் பிரதானவீதி "எல்" வடிவில் வளைந்து செல்கிறது. அதன் வளைவில் முதலாவது "ட்ரக்" வந்து திரும்ப, காரைப் பற்றையொன்றின் பின்னே "கவரில்" இருந்த அருளன் முழங்காலில் எழுந்து நின்று தனது ஆர்.பி.ஜி. யை ஊதினான். ட்ரக்கின் முகப்பு சிதைந்தது.

அதனுள்ளிருந்தவர்கள் இரத்தச சேற்றில் கிடந்து துடித்தனர். திடீரென விழுந்த இந்த அடியால் 'ட்ரக்'கின் பின்னே வந்தபவள் அதனுடன் மோதித் தளம்புகிறது. அதன் பின்னே வாகனங்கள் "கிறிச்" என்ற சத்தத்துடன் நிற்க, உதறலெடுத்த சீருடையினர் திடுதிடுவெனக் குதித்து அகப்பட்ட இடங்களில் பதுங்கி அங்கிங்கென்றபடி ரவைகளை எங்கும் விதைத்தனர். காத்திருந்தவர்களின் ரவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரை வீழ்த்திக் கொண்டிருந்தன. எஞ்சியவர்கள் உயிரினைக் கையில் பிடித்துக் கொண்டு வாகனங்களையும் விட்டுவிட்டுப் பின்னோக்கிப் பறந்து விடுகின்றனர்.

சண்டை முடிந்த கையோடு அவ்விடத்திலேயே 'முடிந்துவிட்ட" இராணுவத்தினரின் ஆயுதங் களைப் "பொடியனுகள்" சேகரித்துக் கொண்டிருக்க, தளபதி வேகமாகக் கட்டளை பிறப்பிக்கிறார். இந்த நேரத்தில் வெகுவேகமாக வந்த கிராமத்து மக்கள் கூட்டமொன்று, இறந்து கிடந்த சீருடைகளின் உடைகள் மீது தமது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்கிறது. உடல்களை அடித்து நொருக்கி மண் தீத்தி.... தமது பிள்ளைகள் அருகே நிற்கும் துணிவில் இதுவரை தம்மை வதைத்தவர்கள் மீதான மனவேக் காட்டின் வடிவமாக அவர்கள் இவ்வாறு செய்திருக்கலாம். தளபதி தனது படையணிகளைக் காட்டுக்குள் அழைத்துச் செல்லமுன்பு அவர்களை வெகு சிரமப்பட்டு ஊருக்கு அனுப்பி வைக்கிறார்.

இவர்கள் அகன்றதும் இறந்த உடல்களின் இடையே இறந்தவன்போலக் கிடந்த ஒரு சீருடைக்காரன் மெதுவாகத் தனது தலையை உயர்த்திப் பார்த்துவிட்டு வெடிபட்ட காலை இழுத்துக்கொண்டு முகாம் நோக்கி விரைகிறான். முகத்தில் கொலை வெறி தாண்டவமாட "பறதெமிழு" எனக் கறுவிக் கொள்கிறான்

தொடர்ச்சி 18ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "மறந்ததோ வையம் மறத்தமிழ் இனத்தை"

## - அனைத்துலக கவன ஈர்ப்பு வாரம் -

## 30-10-96 — 05-11-96

ஈழத்தமிழர் வரலாற்றில் மாபெரும் இடப்பெயர்வு நடந்த 30-10-95 இன் ஓராண்டு நிறைவு தினமாகிய 30-10-96 இலிருந்து 05-11-96 வரையிலான ஏழு நாட்களையும் சர்வதேச தமிழர் சம்மேளனம், அனைத்துலக கவன ஈர்ப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

சிறிலங்கா அரசின் கொடிய இராணுவ நடவடிக்கைகளால் தமது பாரம்பரிய வாழ்விடங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டு காடுகளிலும் தெருவோரங்களிலும் உரிய உணவு, இருப்பிடம், மருந்து, குடிநீர் வசதிகளின்றி அல்லலுறும் எமது தாயக மக்களினதும், இராணுவப் பிடியினுள் சிக்குண்டு நாளாந்தம், இராணுவத்தினரின் வெறியாட்டத்திற்கு முகம் கொடுத்தவாறு வாடி வதங்கும் மக்களினதும் துயரங்களைச் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதே அனைத்துலக கவன ஈர்ப்பு வாரத்தின் நோக்கமாகும்.

அனைத்துலக ரீதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இவ் வாரத்தில்,

- 30-10-96 அன்று தமிழர்கள் வாழும் எல்லா நாடுகளிலும் உண்ணா விரதங்களை மேற்கொள்ளல்
- 30-10-96 அன்று எல்லா நாடுகளிலும் மதியம் 1 மணி வரை தமிழர்களுக்குச் சொந்தமான வியாபார நிலையங்களைப் பூட்டி, இவ் வாரம் ஆரம்பிப்பதனை வெளிப்படுத்தல்
- எல்லா நாட்டுக்கும் பொதுவான சுவரொட்டிப் பிரச்சாரத்தினை மேற்கொள்ளல்
- ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு, பொதுவான அஞ்சல் அட்டையினை அனுப்பி வைத்தல்

ஆகிய ஏற்பாடுகள், எல்லா நாடுகளிலும் பொதுவான முறையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

**"நான் பெரிது, நீ பெரிது" என வாழாது**

**"நாடு பெரிது, எம்மினம் பெரிது" என நினைத்து,**

துயருறும் எம் மக்களுக்காகச் சர்வதேச சமூகத்தின் மத்தியில் குரல் கொடுக்க, அனைத்துலக கவன ஈர்ப்பு வாரத்தில் இணைந்து செயற்பட, திரண்டெழுந்து வாரீர் என அன்புடன் அழைக்கின்றோம்.

**-சர்வதேச தமிழர் சம்மேளனம்-**



T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 8441 F: 560 8224

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்